SAPTHAGIRI
(TAMIL)
SPIRITUAL ILLUSTRATED
MONTHLY
Volume:2, Issue:12,
Pages:56
July-2023,
Price Rs.20/-

திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# ஸப்தகிரி

சமய மாத இதழ்

ஜூலை 2023, விலை ரூ.20/-



திருமலையப்ப ஸ்வாமி
ஆனிவர ஆஸ்தானம்
17-07-2023

08–06–2023 அன்று நடைபெற்ற ஜம்மு காஷ்மீர், மஜின் கிராமத்தில் தாவி (சூர்யபுத்திரி) நதிக்கரையில் தி.தி.தே. புதிதாக நிர்மாணித்த ஸ்ரீவேங்கடேஸ்வர ஸ்வாமி ஆலய மஹாசம்ப்ரோக்ஷணம். இந்நிகழ்ச்சியில் மேதகு ஜம்மு காஷ்மீர் துணை நிலை ஆளுநர் மனோஜ் சின்ஹா அவர்கள், தி.தி.தே. பொறுப்பாண்மைக்குழுத்தலைவர் திரு. ஒய்.வி. சுப்பா ரெட்டி தம்பதியினர், பொறுப்பாண்மைக் குழு உறுப்பினர்கள், மத்திய அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் ஜம்மு காஷ்மீர் உயர் அதிகாரிகள் பங்கு கொண்டனர்









*குதஸ்த்வா கச்மலமித₃ம் விஷமே ஸமுபஸ்தி₂தம் ।*
*அநார்யஜுஷ்டமஸ்வர்க்₃யம் அகீர்திகரமர்ஜுந ॥*

**ஸ்ரீபகவான் கூறுகிறார் - அர்ஜுனா! தகாத சமயத்தில் இந்த மோகம் எந்தக் காரணத்தினால் உன்னை வந்தடைந்தது? ஏனெனில், இது சான்றோர்களால் கடைப்பிடிக்கப்படாதது; சுவர்க்கத்தை அளிக்காதது; மேலும் புகழையும் தர வல்லதன்று.**

*- ஸ்ரீமத் பகவத் கீதை 2-2*





*சதமக மணிநீலா சாரு கல்ஹார ஹஸ்தா*
*ஸ்தநபர நமிதாங்கீ ஸாந்த்ர வாத்ஸல்ய ஸிந்து:।*
*அளகவிநிஹிதாபி: ஸ்ரக்பி ராக்ருஷ்ட நாதா*
*விலஸது ஹ்ருதி கோதா விஷ்ணு சித்தாத்மஜா ந:॥*

**இந்திர நீலமணி போல் நீலநிறமுடையளாய், அழகிய செங்கழுநீர்ப்பூவை திருக்கையில் தரிப்பவளாய், கொங்கைகளின் சுமையால் வளைந்த திருமேனியுடையளாய், மிகுதியான அன்புக் கடலாய், கூந்தலில் சூடப்பட்ட திருமாலைகளால், நாயகனை வசப்படுத்தியவளான பெரியாழ்வாரின் புதல்வியான கோதைப்பிராட்டி நமது உள்ளத்தில் விளங்க வேண்டும்.**


*- ஸ்ரீகோதா ஸ்துதி 28*

# திருமலை திருப்பதி தேவஸ்தானம்

ஸப்தகிரி இதழுக்கு தாங்கள் அளித்து வரும் ஆதரவு தன்னிகரற்றது!
தி.தி.தேவஸ்தானத்திற்கும் வாசகர்களுக்குமிடையே ஒரு பாலமான"ஸப்த வர்ண"
சமய மாத இதழ் "ஸப்தகிரி"யின் விலையில் மாற்றம்!!

உங்கள் இல்லங்களுக்கே அலர்மேல் மங்கை உறை மார்பன்
மாதாமாதம் எழுந்தருளும் அனுபூதியைப் பெறுங்கள்

ஸப்தகிரி
சமய
மாத இதழுக்கு
சந்தா
செலுத்துங்கள்...



திருமலையப்பனின்
அக்ஷர பிரசாதமான
"ஸப்தகிரி"யை
திங்கள்தோறும்
பெற்றிடுங்கள்



# ஸப்தகிரி

சமய மாத இதழ்



(தெலுங்கு, தமிழ், கன்னடம், ஹிந்தி, ஆங்கிலம், சமஸ்கிருதம்)

.....சந்தா விவரங்கள்.....

தனிப்பிரதி : ரூ.20/-
வருடச் சந்தா: ரூ.240/-
ஆயுள் சந்தா(12 வருடங்கள்) : ரூ.2,400/-
அயல்நாட்டு வருடச்சந்தா : ரூ.1,030/-

**விவரங்களுக்கு :**

பிரதான ஆசிரியர், ஸப்தகிரி, தி.தி.தே. அச்சக வளாகம், கே.டி. சாலை, தி.தி.தே. திருப்பதி - 517 507.
தொலைபேசி எண்கள் : 0877-2264363, 2264543

வேங்கடமே விண்ணோர் தொழுவதுவும் மெய்ம்மையால்
வேங்கடமே மெய்வினைநோய் தீர்ப்பதுவும்

# ஸப்தகிரி

சமய மாத இதழ்

ஜூலை 2023

மலர் 02 இதழ் 12





## உள்ளுறை


| | பக்கம் |
|---|---|
| சங்க இலக்கியங்களில் திருமால் பெருமை: இராமவதாரம் - முனைவர் பிரியா கிருஷ்ணன், சென்னை. | 7 |
| திங்கள் தோறும் ஒரு திருவேங்கடப்பாசுரம் ஆண்டாள் ஆடிப்பூரமும் அலர்மேல் மங்கை மணாளனும் -பேராசிரியர் எஸ். கோகுலாச்சாரி, புவனகிரி. | 10 |
| எம்பெருமானின் சக்தத்துவம் -டாக்டர் கே.கே.ஏ. ரங்கராஜன், திருப்பதி. | 14 |
| ஸ்ரீமந்நாதமுனிகளும் சொட்டைக்குலமும் -திரு. கே. ஸ்ரீநிவாசன், மேல்கோட்டை. | 17 |
| ஜோதிட சாஸ்திரம் : வேத ஜோதிடத்தில் 12 வீடுகள் - முனைவர். ஆ.முத்து கிருஷ்ண ஆச்சாரி, சென்னை. | 20 |
| ஏகாதசி - திரு. துளசி கிருஷ்ணா, சென்னை. | 21 |
| அலசுவோம் அறிவோம் ஆதிகாவிய நாயகர்களை: ஏனென்று கேட்காத ஏகலைவன் - திரு.எஸ்.ஸ்ரீதுரை, காஞ்சிபுரம். | 23 |
| ஸ்ரீவேங்கடாசல மாஹாத்மியம் - டாக்டர் சி.கோவிந்தசாமி, புத்தூர். | 25 |
| பெரியாழ்வார் பாசுரங்களின் நயம் - டாக்டர் கலியன் சம்பத், சென்னை. | 31 |
| 108 திவ்யதேச வைபவம் : திருத்தண்கா - உருப்பட்டூர் சௌந்தரராஜன், சென்னை. | 33 |
| அப்பிள்ளை அருளிய ஆழ்வார் ஆசார்யர்கள் வாழித் திருநாமமும் உரையும் : பெரிய திருமலை நம்பி - ஸ்ரீ உ.வே. டாக்டர். மாடபூசி வரதராஜன் ஸ்வாமி, சென்னை. | 36 |
| பதஞ்சலியின் யோக சூத்திரங்கள் -திரு.எம்.எஸ்.சுகுமார், சென்னை. | 39 |
| ஆயுர்வேதம் : மழைக்கால ஆரோக்யமான வாழ்வு - திருமதி வி. உஷா, திருப்பதி. | 41 |
| ராசிபலன்கள் : ஜூலை 2023 -டாக்டர் எம்.வி. நரநாராயணன்,சேலம். | 43 |
| நீதிக்கதை : கடவுள் நம்பிக்கை எப்படி இருக்க வேண்டும் தெரியுமா?... - திரு. அசோக்ராஜா, அரவக்குறிச்சிப்பட்டி. | 44 |
| வேத வியாசர் -திருமதி மைதிலி சம்பத்,செகந்திராபாத் | 46 |
| சித்திரக்கதை : குரு தக்ஷிணை | 52 |


**அட்டைப்பட விளக்கம்**

முன்னட்டை : உபயநாச்சிமார்களுடன் திருமலையப்ப ஸ்வாமி, திருமலை.

பின்னட்டை : ஸ்ரீஆண்டாள் தாயார் (ஓவியம் : என்.சி. விஷ்ணுபிரபா)

சிறப்பு ஆசிரியர் :
திரு. A.V. தர்மா ரெட்டி, ஐ.டி.இ.எஸ்.,
செயலாட்சித் தலைவர்(F.A.C.), தி.தி.தே.
வெளியீட்டாளர்-பிரதான ஆசிரியர் :
Dr. K. ராதாரமணா, எம்.ஏ., எம்.பில்., பி.எச்டி.,
ஆசிரியர் :
Dr. V.G.சொக்கலிங்கம், எம்.ஏ., பி.எச்டி.,
அச்சிடுபவர் :
திரு. பி.ராமராஜு, எம்.ஏ.,
சிறப்பு அலுவலர்
தி.தி.தேவஸ்தான அச்சகம், திருப்பதி.
டி.டி.பி.
பிரதான ஆசிரியர் அலுவலகம்,
தி.தி.தே. திருப்பதி.
புகைப்படங்கள் :
திரு. P.N. சேகர்
திரு. B. வெங்கடரமணா


பிரதிகளுக்கு:
THE CHIEF EDITOR,
"Sapthagiri", T.T.D., Tirupati-517 507.
0877- 2264543, 2264359
ஆசிரியர் : 2264360

நீங்கள் ஸப்தகிரி இதழை
www.tirumala.orgயில் பார்த்து,
படித்து மகிழலாம். ஆலோசனைகள்/
கருத்துக்கள்/புகார்களுக்கு
sapthagiri.helpdesk@tirumala.org

| | |
|---|---|
| தனிப்பிரதி | ரூ.20/- |
| வருடச்சந்தா | ரூ.240/- |
| ஆயுள் சந்தா (12 வருடங்கள்) | ரூ.2,400/- |
| அயல்நாட்டு வருடச்சந்தா | ரூ.1,030/- |

இதழில் வெளியாகும் கட்டுரைகளுக்கும், கருத்துகளுக்கும் அவ்வவ்வாசிரியப் பெருமக்களே பொறுப்பாவர் -பிரதான ஆசிரியர்









உங்களுடன்...

# சுத்தமான திருமலை! சுந்தரமான திருமலை!!

கடந்த சில ஆண்டுகளாகவே சூழலியல் சமநிலை, பல்லுயிர்ச் சமநிலை ஆகிய கருதுகோள்கள் இவ்வுலகமெங்கிலும் தீவிரமாக விவாதிக்கப்பட்டு வருகின்றன. கடந்த இரு நூற்றாண்டுகளில் ஏற்பட்ட பெருமளவிலான அறிவியல் முன்னேற்றமும், குளிர்சாதனக் கருவி உள்ளிட்ட கண்டுபிடிப்புகளும் நாம் வசிக்கின்ற பூமியின் சூழலியலை வெகுவாக பாதித்து வருவதைக் கண்கூடாகக் கண்டு வருகின்றோம்.

குறிப்பாக இயற்கை வளம் பொருந்திய பிரதேசங்களுக்குப் பயணம் செய்யும் யாத்திரிகர்களின் அலட்சியப் போக்கினால் அப்பிரதேசங்களின் சூழலில் பெரிய மாற்றங்கள் தோன்றத் தொடங்கியுள்ளன. அப்பிரதேசங்களில் கலியுக வைகுண்டமான திருமலையும் அடங்கும். ஆழ்வார்களும் ஆசார்யர்களும் திருவேங்கடவனை மட்டுமின்றி அப்பெருமான் எழுந்தருளியிருக்கும் திருமலையில் உள்ள சோலைகள், சுனைகள், மலர்க்கூட்டங்கள், மலையைத் தழுவிச் செல்லும் மேகக் கூட்டங்கள், வன விலங்குகள், இயற்கை எழில் என அனைத்தினையும் புகழ்ந்து போற்றி உள்ளனர். அவ்வகையில் திருவேங்கடவனின் திருமேனியையும் திருவுள்ளத்தையும் குளிர்விக்கும் திருமலையைக் காக்க பக்தர்களாகிய நாமும், பிளாஸ்டிக் மற்றும் குப்பைகளை ஆங்காங்கே தூக்கி எறிவதைத் தவிர்த்தல் வேண்டும்.

திருப்பதி–திருமலை போன்ற புனிதத் திருத்தலங்களில் நிலவும் இன்பமயமான இயற்கைச் சூழல் நாள்தோறும் திரளும் பெருமளவிலான யாத்திரிகர்களின் வருகையால் அதன் சமநிலையைப் பராமரிப்பதில் பெரும் சவாலை எதிர் கொள்ள நேர்கின்றது. இந்நிலையில், எம்பெருமான் திருவேங்கடவன் எழுந்தருளியுள்ள திருமலைக் கோயில் உள்ளிட்ட பல்வேறு திருக்கோயில்களைத் திறம்பட நிர்வகித்து வரும் நம் தி.தி.தே. நிர்வாகக் குழு புனிதமான இத்திருமலையின் அழகையும், ஆரோக்கியமான சூழலையும் மீட்டெடுப்பதற்கான சிறப்புத் திட்டத்தை வகுத்துள்ளது.

இந்நிலையில், தி.தி.தே. ஊழியர்கள், உள்ளூர்ப் பொதுமக்கள், மாணவர்கள், வெளியூர் யாத்திரிகர்கள் ஆகிய அனைத்துத் தரப்பினரும் பங்கேற்கும் “ஸாமூஹிக ச்ரமதானம்” என்ற தூய்மை இயக்கத்தை தி.தி.தே. நிர்வாகக் குழு கொண்டு வந்தது. திருமலைக்கு பக்தர்கள் நடந்து செல்லும் நடைபாதைகள் உள்ளிட்ட அனைத்து இடங்களிலும் சேரும் குப்பைகளை முதற்கட்டமாக சேகரித்து அகற்றும் இத்தூய்மைப் பணிக்குப் பொது மக்களிடையே உற்சாகமான வரவேற்பும் பாராட்டும் கிடைத்தது.

விருப்பம் உள்ள அனைவரும் இந்த உன்னதமான சேவையில் ஈடுபட்டு எம்பெருமான் திருவேங்கடமுடையானின் இன்னருளுக்கு பாத்திரர்களாயினர்.

மேலும், நம் திருமலைக்கு வந்து செல்லும் பக்தர்கள் புனிதமான இந்தப் பிரதேசத்தில் பிளாஸ்டிக் பொருட்கள் உள்ளிட்ட குப்பைகளை ஆங்காங்கே வீசுவதையும், இம் மலையில் சுதந்திரமாகச் சுற்றித் திரியும் மான்கள், வானரங்கள் உள்ளிட்ட விலங்குகளுக்கும் பறவைகளுக்கும் உணவளிப்பதையும் தவிர்க்க வேண்டும். அவ்வாறு தவிர்ப்பதன் மூலம் நம் திருமலையில் சுத்தமான, சுந்தரமான, மனதுக்கு இனியதான சுற்றுச் சூழல் பாதுகாக்கப்படும் என்பதில் ஐயமில்லை. திருவேங்கடவனுக்கு நாம் செலுத்தும் முதல் காணிக்கை சுந்தரத் திருமலையில் தூய்மையைக் கடைபிடிப்பதே ஆகும்.

**திருமலை எழிலை காத்திடுவோம்! திருவேங்கடவனின் அருளைப் பெற்றிடுவோம்!!**

# சங்க இலக்கியங்களில் திருமால் பெருமை
# இராமவதாரம்

– முனைவர் பிரியா கிருஷ்ணன்,
சென்னை.

## திருமாலின் இராமவதாரம்

தசரதன் என்ற அரசன் அயோத்தியை அரசாண்டு வந்தான். அவனுக்கு கோசலை, கைகேயி, சுமித்திரை என்ற மூன்று மனைவியர் உண்டு. எல்லாச் செல்வமும் இருந்தும் குழந்தைச் செல்வம் மட்டும் இல்லை. அதனால் தசரதன் பெரிதும் வருந்தினான். புத்திரபேறுக்கான யாகங்கள் பல செய்தான். அதன் பயனாக அவன் மனைவியர் மூவரும் கருவுற்றனர். தசரதனின் முதல் மனைவி கோசலை ஆவாள். அவள் வயிற்றிலிருந்து திருமால் இராமராகப் பிறந்தார். இரண்டாம் மனைவி கைகேயி வயிற்றில் பரதன் பிறந்தான். மூன்றாம் மனைவி சுமித்திரை வயிற்றில் இலக்குவன், சத்துருக்கன் என்ற இருவரும் பிறந்தனர். குலகுருவாகிய வசிட்டரிடம் கல்வி, போர்ப் பயிற்சி போன்றவற்றைக் கற்றுச் சிறந்து விளங்கினர்.



விசுவாமித்திரர் காட்டில் வேள்வி செய்த போது வேள்வியைக் காக்கும் பொருட்டு இராமன், இலக்குவனருக்கு பலா, அதிபலா போன்ற மந்திரங்களை உபதேசம் செய்தார். தாடகை முதலான அரக்கர்களை வதம் செய்து முனிவருடைய வேள்வியைக் காத்தனர். வேள்வி முடிந்தவுடன் திரும்பி மிதிலை செல்லும் வழியில் கௌதம முனிவரால் சபிக்கப்பட்டு கல்லாகக் கிடந்த அகலிகை மீது இராமரின் திருவடி பட்டதால், சாபம் நீங்கி மீண்டும் அவள் உண்மை உருவிற்கு வந்தாள். சனகன் என்ற அரசன் தன்னிடம் இருந்த வில்லை வளைப்பவருக்கு தன் அழகிய பெண்ணான சீதையைத் திருமணம் செய்து கொடுப்பதாக அறிவித்திருந்தான். பல பல அரசர்கள் முயன்றும் வளைக்க இயலாத அந்த வில்லை ஒரு கணப் பொழுதில் வளைத்து முறித்தார் இராமர்.

சனகன் மகிழ்ந்து தன் மகள் சீதையை இராமருக்கு திருமணம் செய்து கொடுத்தான். திருமணம் முடிந்து வந்த இராமருக்கு முடிசூட்ட எண்ணினார் தசரதன். அதற்கான நாளும் குறித்து ஏற்பாடுகளும் நடந்த பொழுது, கைகேயியின் பணிப்பெண் கூனி (மந்தரை) கைகேயின் மகன் பரதனுக்கு முடிசூட்ட எண்ணி கைகேயியிடம் தெரிவித்தாள். கைகேயி முதலில் ஒப்புக்கொள்ளவில்லை. பிறகு பலவிதமாகச் சொல்லிக் கூனி கைகேயியின் மனத்தை மாற்றி விட்டாள். கைகேயி, தசரதனிடம் பிடிவாதம் செய்து தன் மகன் பரதன் நாடாளும் படியாகவும், இராமர் 14 ஆண்டு காடாளும்படியாகவும் உறுதிமொழி வாங்கி விட்டாள். தந்தை சொற்படி இராமர் உடனே காட்டிற்குச் சென்றார். சீதையும், இலக்குவனும் உடன் சென்றனர். அந்தத் துயரில் தசரதன் உயிர் துறந்தார்.



கேகய நாட்டிற்குச் சென்று திரும்பிய பரதன் நடந்ததை அறிந்து, மிகவும் வருந்தினான். தன் தாயை வெறுத்தான். தந்தைக்குரிய இறுதிக் கடன்களைச் செய்தான். காட்டிற்குச் சென்று இராமரைக் கண்டு வணங்கி, திரும்பி வந்து நாடாளும்படி வேண்டினான். தந்தை சொற்படி 14 ஆண்டுகள் கழித்து வருவதாகவும், அதுவரை பரதனை நாட்டை ஆளும்படி இராமர் கூறினார். பரதன் இராமரின் பாதுகைகளைப் பெற்று வந்து அரசப் பிரதிநிதியாக ஆண்டு வந்தான்.

சூர்ப்பணகை இலங்கையை ஆண்டு வந்த இராவணனின் தங்கை ஆவாள். அவள் காட்டில் வாழும் இராம இலக்குவனரைக் கண்டாள். தன்னைத் திருமணம் செய்து கொள்ளும்படி இராமனைக் கட்டாயப்படுத்தினாள். கோபம் கொண்ட இலக்குவன் சூர்ப்பணகையின் மூக்கினை அறுத்ததால், அவள் அழுது கொண்டு இராவணனிடம் சென்று நடந்த செய்திகளை முழுமையாகக் கூறாமல், இராமன் மனைவி சீதையை உனக்காகத் தூக்கி வர முயன்றேன். அவன் தம்பி என்னை அங்க ஊனப்படுத்தி விட்டான் என்று அழுதாள். இராவணன் தன் தங்கை சூர்ப்பணகையைச் சமாதானப்படுத்தி அவர்களைத் தண்டிப்பதாகவும் கூறுகிறான்.

இராவணன், சூழ்ச்சி செய்து மாரீசன் என்பவனை மாயமானாக அனுப்பி இராம இலக்குவரைத் தனியாகப் பிரித்தான். பிறகு, சீதை தனித்து இருப்பதை அறிந்து பர்ணசாலையோடு பெயர்த்துச் சீதையைத் தூக்கிக் கொண்டு சென்றான். வழியில் கழுகு அரசனாகிய சடாயு தடுத்தான். அவனை வெட்டி வீழ்த்தி விட்டு இராவணன் இலங்கையில் உள்ள அசோக வனத்தில் சீதையை மறைத்து வைத்தான். திரும்பி வந்த இராம, இலக்குவர் சீதையைக் காணாமல் தேடினர். வருந்தி வந்து கொண்டிருக்கும்பொழுது குற்றுயிராய்க் கிடந்த சடாயு என்ற கழுகரசன் நடந்த உண்மையைக்கூறி உயிர் துறந்தான். பயணத்தின் இடையில் சுக்ரீவனைச் சந்தித்து, அவனுக்கு உதவியாக வாலியைக் கொன்று சுக்ரீவனுக்குப் பட்டம் சூட்டினார். பின்னர் சுக்ரீவனும், அனுமனும், வானரங்களும், இராமருக்குத் துணையாக வந்தனர். இலங்கையில் சீதை இருக்கும் இடத்தை அறிந்து வருமாறு, இராமர் அனுமனை அனுப்பினார். உடனே அனுமன் கடலைத் தாண்டி இலங்கையை அடைந்து தேடினார், கடைசியாக அசோக வனத்தில் சீதை இருப்பதைக் கண்டார். இராமர் கூறிய செய்திகளைக் கூறி விட்டுத் திரும்பி வந்தார். இராமரிடம் வந்து சீதை இருக்கும் இடத்தைத் தெரிவித்தார்.

அனைவரும் கடலைக் கடந்து இலங்கைக்குச் செல்ல வேண்டும். எனவே வானரங்கள் கல்லையும் மரத்தையும் கொண்டு கடலில் பாலம் கட்டின. அந்தப் பாலத்தின் வழியாக அனைவரும் கடலைக் கடந்து இலங்கைக்குச் சென்றனர். இராவணனுக்குக் கும்பகருணன், வீடணன் என்ற இரண்டு தம்பியர் உண்டு. அவருள் வீடணன் நல்ல அறிஞன். அவன் இராவணனுக்குப் பல அறிவுரைகள்




கூறினான். சீதையைக் கொண்டு போய் விட்டு விடும்படியும், சமாதானமாக வாழும்படியும் கூறினான். இராவணன் மறுத்து விட்டான். எனவே, வீடணன், இராவணனை விட்டுவிட்டு இராமர் பக்கம் வந்து சேர்ந்து கொண்டான்.

பிறகு, இராமரின் படைகளுக்கும், இராவணனின் படைகளுக்கும் போர் தொடங்கியது. போரில் இராவணன் தம்பி கும்பகர்ணன் மாண்டான். இராவணன் மகன் இந்திரசித்தும் மாண்டான். படைவீரர்கள் பலரும் மாண்டனர். கடைசியாக இராமருக்கும் இராவணனுக்கும் போர் கடுமையாக நடந்தது. முடிவில் இராமர் இராவணனைக் கொன்றார். அதனைக் கண்ட தேவர்கள் மகிழ்ந்து ஆரவாரித்தனர். இலங்கைக்கு அரசனாக வீடணனுக்குப் பட்டம் சூட்டினார் இராமர். இராமர் சீதையை மீட்டுக் கொண்டு அயோத்திக்குத் திரும்பி வந்தார். பரதன் இராமரிடம் ஆட்சிப் பொறுப்பை ஒப்படைத்தான். இராமர் அயோத்திக்கு அரசராக முடி சூட்டிக் கொண்டார். தம்பியர் துணையுடன் சிறந்த முறையில் நாடாண்டார். மக்கள் அனைவரும் எல்லா நலனும் பெற்று மகிழ்ச்சியாக வாழ்ந்தனர்.

*வென்வேற் கவுரியர் தொன் முதுகோடி*
*முழங்கு இரும் பௌவம் இரங்கும் முன்துறை*
*வெல்போர் இராமன் அருமறைக்கு அவித்த*
*பல் வீழ் ஆலம் போல*
*ஒலி அவிந்தன்று இவ்வழுங்கல் ஊரே*

–அகம் 70:13–17



இராமன் அரக்கரை வெல்ல, போரைப் பற்றிய அரிய மறை செய்தியை வானர வீரர்களோடு ஆராய்ந்த பொழுது பறவைகள் ஒலி எழுப்புகின்றன. அவ்வொலி பேச்சுக்கு இடையூறாக இருக்கின்றது. எனவே இராமன் பறைவகளின் ஒலி கேட்காமல் செய்தான். பல விழுதுகளை உடைய ஆல மரத்தில் இருந்த பறவைகள் ஒலி எழுப்பவில்லை. எனவே, ஆலமரம் ஒலியின்றி அமைதியாக இருந்தது என்பதை மதுரை தமிழ்க்கூத்தனார் கடுவன் மள்ளனார் நெய்தல் திணையில் அமைந்த அகநானூற்றுப் பாடல்வழி தெரிவிக்கின்றார்.

பெருமை அறிவோம்...

# வடுக நம்பி இயற்றிய ஸ்ரீயதிராஜ வைபவம்



*கோ$_3$விந்த$_3$ப$_4$ட்டச்ச ஸுதோऽத$_2$ மாத்ருஷ்வஸு:*
*ஸுசீலஸ்ஸஹபாடி மித்ரம் ।*
*மத்$_4$யேவநம் ப்ரோச்ய ஸ து$_3$ஷ்டசிந்தாம் ராமாநுஜாய*
*ஸ்வயமந்வகா$_3$த் தம் ।।*
(24)



**நல்லொழுக்கமுடையவராய், நண்பராய், அவருடைய சிறிய தாயாரான ஸ்ரீதேவியின் பிள்ளையான கோவிந்தபட்டரும், யாதவருடைய கெட்ட எண்ணத்தை நடுக்காட்டில் இராமாநுஜருக்கு அறிவித்து அவரை நிறுத்தி, தான் யாத்திரை செய்யும் யாதவரோடு தொடர்ந்து சென்றார்.**

– "ஸுதர்சனம்" ஆசிரியர் இயற்றியது

ஆண்டாள் அவதாரம் நிகழ்ந்தது ஆடிப்பூரத்தில். அவள் ஆடிப்பூர நாயகி. லோகத்தில் உள்ள அனைவருக்கும் நித்தியப் பிதாவான திருமால், தனது அவதாரத்தின்போது யாரைத் தன் தகப்பனாராக வரிக்கலாம் என யோசித்தாராம். தான் வணங்கும்படியாக உயர்ந்தவர் யாரென்று கண்டு பிடித்துத் தசரதனைப் பிடித்தாராம். ஸ்ரீகிருஷ்ண அவதாரத்தில் வசுதேவனையும் நந்தகோபனையும் பிதாவாகப் பெற்றார் பெருமாள்.

பூமாதேவி யோசித்தாள். விபவத்தில் அவதரித்து அர்ச்சாவதாரப் பெருமாளை கைபிடிக்கும் அதிசயத்தை நிகழ்த்த எண்ணினாள். யாரைத் தன் தந்தையாக ஏற்கலாம் என யோசித்து, அதற்குச் சகல விதத்திலும் சரியானவர் பெரியாழ்வாரே எனத் தீர்மானித்து அவர் கண்டெடுக்கும் இடத்தில் துளசி வனத்தில் மஹாலக்ஷ்மியின் பூர நக்ஷத்திரத்தில் அயோநிஜையாய் அவதரித்தாள்.

*இன்றோ திருவாடிப்பூரம் எமக்காக*
*அன்றோ இங்கு ஆண்டாள் அவதரித்தாள் - குன்றாத*
*வாழ்வான, வைகுந்த வான்போகம் தன்னை இகழ்ந்து,*
*ஆழ்வார் திருமகளாராய்*

என்று தமது உபதேசரத்தின மாலையில் மணவாள மாமுனிகள் கொண்டாடுகிறார்.

அஞ்சுகுடிக்கு ஒரு சந்ததியாய் வந்தவள். ஆழ்வார்கள் செயலை மிஞ்சுகின்றவள்.

*அஞ்சுகுடிக்கு ஒரு சந்ததியாய் ஆழ்வார்கள்*
*தன் செயலை விஞ்சி நிற்கும் தன்மையளாய் - பிஞ்சாய்ப்*
*பழுத்தாளை ஆண்டாளைப் பத்தியுடன் நாளும்*
*வழுத்தாய் மனமே மகிழ்ந்து!*

அது என்ன அஞ்சுகுடி? பகவானுக்கு என் வருமோ என்று பொங்கும் பரிவால் பல்லாண்டு பாடிய பெரியாழ்வார் வம்சம் அஞ்சுகுடி வம்சம். அவர் வம்சத்தில் சந்ததியாய் உதித்தவள். இன்னொரு பொருள் உண்டு. ஆழ்வார்கள் அனைவருக்கும் ஒரே பெண் பிள்ளை ஆண்டாள் அல்லவா... “பதின்மருக்கு ஒரு பெண் பிள்ளையிறே” என்பது ஆசார்யர்கள் வாக்கு.

இதற்கு பிள்ளை லோகம் ஜீயர் அருமையான விளக்கத்தைத் தருகின்றார். ஒரு ராணி, ராஜாவுக்கு இனியவளாக



# ஆண்டாள் ஆடிப்பூரமும் அலர்மேல் மங்கை மணாளனும்

– பேராசிரியர் எஸ்.கோகுலாச்சாரி, புவனகிரி.




இருக்கின்றாள். அற்புதமான அரண்மனை வாசம். பூம் படுக்கை வாசம், சொத்து சுகம் எல்லாவற்றையும் விட்டுவிட்டு தன்னுடைய குழந்தையின் தொட்டில் அருகில் வந்து படுப்பாளாம். அப்படி பரமபதத்தின் எல்லையற்ற ஆனந்தத்தை, வேண்டாம் என்று தள்ளிவிட்டு, இந்தப் பூலோகத்தில் வந்து அவதரித்தாளே, அந்த இரக்க குணத்தை எண்ணி எண்ணி மணவாள மாமுனிகள் உபேதசரத்தின மாலையில் உருக்கமாகப் பாடுகின்றார்.

அடுத்து ஆண்டாள் பிஞ்சாய்ப் பழுத்தவள். உலகத்திலே ஒரு கனி பழுக்க வேண்டும் என்று சொன்னால், முதலில் பழத்துக்குக் காரணமான புஷ்பமாய்ப் பூக்க வேண்டும். பிறகு பிஞ்சாக வேண்டும். பிறகு காயாக வேண்டும். பிறகு சில நாள் சென்று பழமாக வேண்டும்.

அப்படி இல்லாமல் பிஞ்சு நேரடியாக கனியாகப் பழுத்தது. காரணம் துளசிச்செடி போல் மணம் பரப்பியவள். இவளுடைய பரபக்தி, பரஞான, பரம பக்தியின் காரணமாக ஐந்து வயதிலே வேதத்தின் வித்தான திருப்பாவையைப் பாடியவள். ஆண்டாள் என்பதற்கு என்ன பொருள்? அவள் பகவானை ஆண்டாள். பக்தரை ஆண்டாள். தமிழை ஆண்டாள். ஆன்மீக உணர்வுகளை ஆண்டாள். அறிவை ஆண்டாள். உணர்வை ஆண்டாள்.

வராக அவதாரத்தில் ஆண்டாள் அவதாரம் நிர்ணயம் செய்யப்படுகிறது. மூன்று சரம சுலோகங்களில் ஆதி சரம சுலோகம் வராகப் பெருமாள் சொன்ன சரம சுலோகம்.

பெரியாழ்வார் அதில் லயிப்பார்.

*பாசி தூர்த்துக் கிடந்த பார்மகட்குப்*
*பண்டு ஒரு நாள் மாசு உடம்பில் நீர் வாரா*
*மானம் இலாப் பன்றி ஆம்*
*தேசு உடைய தேவர் திருவரங்கச் செல்வனார்*
*பேசியிருப்பனகள் பேர்க்கவும் பேராவே.*

ஞானபிரான் என்று வராகப் பெருமாளைச் சொல்வார்கள். பிரான் என்றால் உபகாரகன். இப்பொழுது நடக்கிற ஸ்வேத வராஹ கல்பத்துக்கு முந்தின பாத்மகல்பத்தைப் பற்றிய பிரளயத்தின் இறுதியில் ஸ்ரீமந்நாராயணன் ஏகார்ணவமான பிரளய ஜலத்தில் முழுகியிருந்த பூமியை மேலேயெடுக்க நினைத்து ஸ்ரீவராஹவதாரத்தைச் செய்தருளிக் கோட்டு நுனியாற்பூமியை எடுத்துவந்தான் என்ற வரலாறும் உண்டு.

பூமியை உத்தாரணம் செய்தபோது மடியில் பூமாதேவியை வைத்துக் கொண்டு அளித்த ஞானம் தானே, இவளே பெண்பிள்ளையாய்ப் பிறந்த வேதாந்த உண்மைகளை கோதா உபநிடமாக்கிக் கொடுக்க வைத்தது. வராகப் பெருமாள் ஞான பிரான் என்றால் இவள் ஞானப்பூங்கொடி.

ஆண்டாள் கண்ணனைக் காதலித்தாள். திருப் பாவைக்குத் தனியன் உண்டு. உய்யக் கொண்டார் தனியன் அருளிச் செய்திருக்கிறார்.

*அன்ன வயல் புதுவை ஆண்டாள், அரங்கற்குப்*
*பன்னு திருப்பாவைப் பல் பதியம்! -*
*இன்னிசையால்*
*பாடிக் கொடுத்தாள் நற்பாமாலை, பூமாலை*
*சூடிக் கொடுத்தாளைச் சொல்லு!*

அதிலே அவர் இரண்டு விஷயங்களைப் பிரதானமாகச் சொல்லுகின்றார்.

1) பா மாலையைப் பாடிக் கொடுத்தாள்.

2) பூமாலையைச் சூடிக் கொடுத்தாள்.

சூடிக் கொடுத்த சுடர்க்கொடி அவள். பகவானை எழுப்பியவள். அவனிடம் வாதிட்டவள்.

சுடர் என்பதால் இவ்வுலக அஞ்ஞான இருளை மாற்றியவள். மானிட உலகத்தில் பிறந்தும், பெரியாழ்வாருக்குப் பெண் பிள்ளையாகப் பிறந்தும், நான் மனிதனுக்கு வாழ்க்கைப்பட மாட்டேன் என்பவள்.

*வானிடை வாழுமவ் வானவர்க்கு*
*மறையவர் வேள்வியில் வகுத்த அவி,*
*கானிடைத் திரிவதோர் நரி புகுந்து*
*கடப்பதும் மோப்பதும் செய்வதொப்ப*
*ஊனிடை யாழி சங்க குத்தமர்க்கென்று*
*உன்னித் தெழுந்தவென் தடமுலைகள்.*
*மானிட வர்க்கென்று பேச்சுப்படில்*
*வாழகில் லேன்கண்டாய் மன்மதனே*

யாருக்கு வாழ்க்கைப் பட நினைத்தாள்?

மானிடவர்க்கென்று பேச்சுப்படில் வாழகில் லேன் சரி. பின் யாருக்கு வாழ்க்கைப்படப் போகிறாள்? இதையும் உய்யக்கொண்டாரே சொல்லுகின்றார்.

*சூடிக்கொடுத்த சுடர்க் கொடியே, தொல்பாவை*
*பாடி அருள வல்ல பல் வளையாய் - நாடி நீ*
*வேங்கடவற்கு என்னை விதி என்ற இம் மாற்றம்*
*நாங் கடவா வண்ணமே நல்கு*

இதில் ஒரு நுட்பம் இருக்கிறது. மற்ற அவதாரங்களில் விபவத்தில் எம்பெருமானோடு பிராட்டி சேர்வாள். ஆனால் ஆண்டாள் பின்னானார் வணங்கும் ஜோதியான அர்ச்சாவதார எம்பெருமானை கைபிடிக்க எண்ணிச் சாதிக்கிறாள்.

பாசுரம் அறிவோம்...



## திருவேங்கடவனுக்கு ஆண்டாள் மாலை



வேங்கடவற்கு என்னை விதி என்ற வாக்கியம் உயிரானது. ஆண்டாளின் உள்ளக்கிடக்கையைத் தெரிவிப்பது. வேங்கடவாணன் கண்ணனா? வராகனா? திருவரங்கனா? பெரியாழ்வார் காட்டிய மன்னனா? அவளுக்கு எல்லாம் தன்னுடைய தந்தைதான். அவர்தான் பெரியாழ்வார். அவர்தான் குரு. அந்த குரு பெரியாழ்வார் நிறைவான பதிகத்தில் சொல்லுகின்றார்.


*சென்னியோங்கு தண்திருவேங்கடமுடையாய்! உலகு-*
*தன்னை வாழநின்ற நம்பீ! தாமோதரா! சதிரா!*
*என்னையும் என்னுடைமையும்*
*உன் சக்கரப்பொறியொற்றிக் கொண்டு*
*நின்னருளே புரிந்திருந்தேன் இனி என் திருக்குறிப்பே?*



"என்னையும் என்னுடைமையையும்" என்ற வரியில் உள்ள நுட்பம் அற்புதமானது. அங்கேயே ஆண்டாள் உனக்கு உரியவள். உன் அருளையே எதிர்பார்த்துக் காத்திருப்பவள் என்கிற தொனி வந்து விடுகிறது. திருவேங்கடவாணன் கண்ணன். தான் ஆண்டாளின் உள்ளக்கிடக்கையையும் வேங்கட வாணனின் திருவுள்ளத்தையும் அறிந்த ஸ்ரீராமாநுஜருடைய ஏற்பாட்டின்படி ஆண்டாள் மாலை இன்றைக்கும் வேங்கடவனுக்கு அனுப்பப்படுகிறது.

திருப்பாவை பாடி முடித்ததும், தை மகர சங்கராந்தியில் வேங்கட வாணனுக்கும் அவளுக்கும் கோதா பரிணயம் நடக்கிறது.

# வைணவக் குறுக்கெழுத்துப் புதிர் - 84




### இடமிருந்து வலம்

1. ஆளவந்தாரை திருத்தி ஆசாரிய பீடத்தில் அமர்த்தியவர்.....(8)
3. ஸ்ரீராமாநுஜருக்கு அஷ்டாக்ஷர மந்திரத்தை உபதேசித்தவர்....(11)
7. நம்மாழ்வாரை தியானித்து நாலாயிர திவ்ய பிரபந்தங்களைப் பெற்றவர்....(6)
8. ஆளவந்தாருக்குப் பிறகு ஆசாரிய பீடத்தை அலங்கரித்தவர்....(5)
10. இராமாநுஜருக்கு அன்னமிடும் பொறுப்பை ஏற்றவர்.....(4) யாச்சான்.
13. எம்பெருமானாரால் நியமிக்கப்பட்டு திருமலையில் சேவை செய்தவர்.....(7)

### வலமிருந்து இடம்

2. உடையவருக்கு பஞ்ச சம்ஸ்காரங் களைச் செய்தருளியவர் ....(3).
5. எம்பார் என்ற தாஸ்ய நாமத்துடன் ஆசாரியராக விளங்கியவர்....(8)
11. பட்டரால் திருத்திப் பணி கொள்ளப் பட்டவர் .....(5)
15. இளையாழ்வாரின் தாய்மாமன்....(12)

### மேலிருந்து கீழ்

1. இந்த ஆசாரியருக்கு ஸ்ரீரங்கநாதர் தனியன் அளித்தார்....(9)
3. திருமலை மற்றும் எதிராஜர் பெயருடன் விளங் கிய ஜீயர்....(10)ஜீயர்
4. எம்பாருக்குப்பின் ஆசாரியராகத் திகழ்ந்த கூரத்தாழ்வானின் குமாரர்....(8)
6. ஈடுமுப்பத்தாறாயிரம் படியை அருளிச் செய்தவர்....(7) வீதிப்பிள்ளை.
9. திருவெள்ளரையில் அவதரித்து நாதமுனிகளுக்குப் பின் ஆசாரியரானவர் உய்யக்.....(4)
13. மணவாள மாமுனிவரின் முதல் சீடரான வானமாமலை ஜீயர்....(8)
14. வடக்குத் திருவீதிப் பிள்ளையின் மூத்த குமாரர்,....(10)
15. பாசுரப்படி இராமாயணத்தை அளித்த ஆசாரியர்....(10)

### கீழிருந்து மேல்

11. நஞ்ஜீயருக்குப் பிறகு ஆசாரியரான லோகாசாரியர்.....(5)
12. யமுனைத்துறைவனாகிய இவர், இராமாநுஜரை ஆசாரிய பீடத்தில் அமர்த்த விரும்பிய ஆசாரியர்....(6)


தொகுப்பு :
திரு. டி. ஆர். மனோகர்,
தஞ்சாவூர், 99426 44807



புதிருக்கு விடை அறிய
22ம் பக்கம்
பார்க்கவும்...


## பிளாஸ்டிகிற்கு தடை

திருமலை திருப்பதி தேவஸ்தானம் திருமலையில் பிளாஸ்டிக் (பிளாஸ்டிக் பாட்டில் கள், பிளாஸ்டிக் பைகளுக்கு) பொருட்களுக்கு நிரந்திர தடை விதித்துள்ளது. எனவே, பக்தர்கள் திருமலையிலும், இரு மலைவழிச் சாலைகளிலும் அலிபிரி, ஸ்ரீவாரி மெட்டு நடைபாதைகளிலும் பிளாஸ்டிக் பொருட்களை எறியாதீர்கள்.






சென்ற இதழின் தொடர்ச்சி...

# எம்பெருமானின் சக்தத்துவம்

- டாக்டர் கே.கே.ஏ. ரங்கராஜன், திருப்பதி,
99855 99669.

## சீலவான்

உலக விஷயங்களிலேயே கழித்த தன் ஆத்மா எம்பெருமானை எவ்வாறு கிட்டுவது? என்கிறார்.

*என்னுடைக் கோவலனே என் பொல்லாக்
கருமாணிக்கமே
உன்னுடை யுந்தி மலருலகமவை மூன்றும்
பரந்து
உன்னுடைச் சோதி வெள்ளைத்தகம்
பாலுண்ணக் கண்டு கொண்டிட்டு
என்னுடையாருயிரார் எங்ஙனேகொல்
வந்தெய்துவரே*

எம்பெருமான் ஆழ்வாரைப் பார்த்து, "பலன், உம் மதான பின்பு நீரும் சிறிது யத்நம் பண்ணவேணுங் காணும்" என்று சொன்னதாகவும், "நீ ஸ்ருஷ்டித்த லோகங்களில் விஷயந்தோறும் அகப்பட்டுக் கிடக்கிற நான் உன்னை பெறுகைக்கு ஒரு ஸாதநம் யனுஷ்டித்து வந்து பெறுகை என்பது ஒன்றுண்டோ?" என்று கேட்பதாகவும், அதற்கு ஆழ்வான் இவ்வாறு மறு உத்தரம் சொல்வதாகவும் ஈட்டுரை அமைந்துள்ளது. "பாண்டவர்கள் என்னுடையவரென்று உன்னைய வர்களுக்கு நீ விதேயனானாய்" என்று எம்பெருமானுடைய சீல குணத்தைக் கொண்டாடுகிறார் ஆழ்வார். அவனுடைய திவ்யமங்கள விக்ரகத்தில் ஈடுபட்டு "என் பொல்லாக் கருமாணிக்கமே" என்கிறார்.

## வடிவழகு

அவனுடைய வடிவழகை இழக்கும் நிலையில்லை என்கிறார் ஆழ்வார் இப்பாசுரத்தில்,

*"வந்தெய்துமாறறியேன் மல்குநீலச்
சுடர்தழைப்ப
செஞ்சுடர்ச்சோதிகள் பூத்தொரு மாணிக்கம்
சேர்வது போல்
அந்தரமேற்செம்பட்டோடு அடியுந்தி கை மார்வு
கண்வாய்
செஞ்சுடர்ச்சோதி விடவுறையென்
திருமார்பனையே"*

அதாவது திருவனந்தாழ்வான் மேலே சாய்ந்து கிடக்கும் போது நீலச்சுடர் ஒளிவிடுகின்றதாம்; அரையில் சாத்தியுள்ள பீதகவாடை, திருவடிகள், திருநாபிக் கமலம், திருக்கை, திருமார்பு, திருக்கண், திருப்பவளம் ஆகிய இவற்றிலிருந்து சிவந்த சுடரான தேஜஸ் பரவியுள்ளதாம். *''பர்யாயேண ப்ரஸுப்த:''* (ஸ்ரீ.ரா) என்பது ஈட்டு ஸ்ரீஸூக்தி.

## அந்தர்யாமித்துவம்

பிரமன், சிவன் முதலானோரின் தொழில்களை எம்பெருமான் தானே அந்தர்யாமியாயிருந்து தன்னுடைய ஆர்ஜத்துவத்தை வெளிப்படுத்துகிறான்.

*என் திருமார்பன் தன்னை என் மலைமகள்
கூறன் தன்னை
என்று மென்நாமகளை அகம்பால் கொண்ட
நான்முகனை
நின்ற சசிபதியை நிலங்கீண்டு எயில்
மூன்றெரித்த
வென்று புலன்துரந்த விசும்பாளியைக்
காணேனோ!*

இப்பாசுரத்தில் "என்" என்னும் சொல் மூன்று இடங்களில் வந்துள்ளது. முதல் "என்" பெரிய பிராட்டியைக் குறிப்பதாகும். அதாவது அவன் திருமார்பில் வீற்றிருப்பது. அடுத்து வரும் "என்" பிரமன் சிவனைக் குறிக்கின்றது. அவரவர்கள் தேவிகளை உடையவர்கள் என்பதாம். அவர்களுக்குத் தமப்பன் தம் பிள்ளைகளுக்குத் திருமணம் செய்விப்பதுபோல அவர்களுக்கு எம்பெருமான் அந்தர்யாமியாய் இருந்து திருமணம் முடித்து வைத்தான். அவர்களுடைய படைப்பு, அழித்தல் தொழில்களை அவனே நிர்வகித்தான். அதற்கு அடுத்த "என்" மூன்று நகரங்களையும் சிவன் எரித்ததாய் இருந்தாலும் அவனுக்கு அந்தர்யாமியாய் இருந்து அதைச் செய்தான். சொர்க்க லோகத்திற்கு அதிபதியான இந்திரனின் செல்வத்துக்கு எம்பெருமானே அதிபதி. அப்படிப்பட்டவனை எவ்வாறு காண்பது என்கிறார்.

## விரோதிநிரஸனன்

அரக்கர்கள் பயப்பட்ட நிலையைக் காட்டி ஆழ்வார் எம்பெருமானின் விரோதி நிரஸனத்தை எடுத்துக்காட்டுகிறார்.

*ஆளியைக் காண்பரியாய் அரிகாண் நரியாய் அரக்கர்*
*ஊளையிட்டன்றிலங்கை கடந்து பிலம்புக் கொளிப்ப*
*மீளியம் புள்ளைக் கடாய் விறல் மாலியைக் கொன்று பின்னும்*
*ஆளுயர் குன்றங்கள் செய்து அடர்த்தானையும் காண்டுங்கொலோ*

யானையைக்கண்ட குதிரையானது பயந்து ஓடுமோ, சிங்கத்தைக் கண்ட நரியானது எப்படி பயந்து பயந்து பார்க்குமோ அதைப்போல மாலி, மால்யவான், ஸுமாலி (ஸ்ரீராமாயணம்) போன்ற அரக்கர்கள் எம்பெருமானைப் பார்த்து ஓடுகிற அவர்களைப் பிடித்து நிரஸனம் செய்தானாம். வலிமையுள்ள தோள்களையுடைய பெரிய திருவடி முதுகிலே ஏறி அவர்களை முறியடித்தானாம் எம்பெருமான். அப்படிப்பட்ட அரக்கர்களை அழியச் செய்த எம்பெருமான் நம்முடைய விரோதிகளைப் போக்கி அக்காட்சியை நாம் எப்போது காண வல்லோம்? என்று எம்பெருமான் விரோதி நிரஸனன் என்கிறார்.


## ஆர்ஜத்துவம் (நேர்மை)

ஒழுக்கமில்லாத கொடிய பலசாலியான சிங்கத்தைப் போன்ற இராவணன் உடலையும் உயிரையும் பிரித்த கொடிய செயலுக்கு அவன் குடும்பத்தோடு அப்போதே அந்த ராக்ஷஸனைக் கொன்ற மிடுக்கனான சக்ரவர்த்தி திருமகனைப் போற்றுகிறார் ஆழ்வார்.

*காண்டுங்கொலோ நெஞ்சமே கடிய வினையே முயலும்*
*ஆண்திரல் மீளிமொய்ம்பில் அரக்கன் குலத்தைத் தடிந்து*
*மீண்டுமவன் தம்பிக்கே விரிநீரிலங்கையருளி*
*ஆண்டுதன் சோதியுக்க அமரரியேற்றினையே.*

அண்ணனான இராவணனைக் கொன்றபின் அவனுடைய தம்பியான விபீஷணனுக்கே ராஜ்யத்தைக் கொடுத்து முடிசூட்டினான்.

தன்னுடைய நேர்மையை நிலைநாட்டினான் ஸ்ரீராமன். மேலும் ஸ்ரீபரதாழ்வான் முதலாக எல்லாருடைய துக்கங்களையும் போக்கி மீண்டும் எழுந்தருளித் திருமுடி சூடி நாட்டை வாழ்வித்தான்.







(ஸ்நானம் செய்யுமுன்)

## மங்கள சுலோகங்கள்

*கங்கே ச யமுனே சைவ கோதாவரி ஸரஸ்வதி ।*
*நர்மதே ஸிந்து காவேரி ஜலே(அ)ஸ்மின் ஸந்நிதிம் குரு ॥*

**கங்கை, யமுனை, கோதாவரி, ஸரஸ்வதி, நர்மதை, ஸிந்து, காவேரி (ஆகிய நதிகளே!) இங்குள்ள ஜலத்தில் அமர்ந்திருக்கவும்.**

### திருவிளையாடல்

நம் முயற்சியாலே கிடைத்ததற்கரிய ஸ்ரீவைகுண்டத்தை அவனே கொடுப்பான். நம் பேற்றுக்கு ஒரு குறையுமின்றி அவன் தன்னையே கொடுப்பான் என்று உறுதி கூறுகிறார் ஆழ்வார்.

*ஏற்றரும் வைகுந்தத்தை அருளும் நமக்கு ஆயர்குலத்து*
*ஈற்றிளம்பிள்ளையொன்றாய்ப் புக்கு மாயங்களேயியற்றி*
*கூற்றியல் கஞ்சனைக் கொன்று ஐவர்க்காய்க் கொடுஞ்சேனை தடிந்து*
*ஆற்றல் மிக்கான் பெரிய பரஞ்சோதி புக்க வரியே.*

ஆளவந்தார் அருளிய ஸ்தோத்ர ரத்னத்தை (63) எடுத்துக்காட்டாகப் பெரியவாச்சான் பிள்ளை அருளிச் செய்கிறார்.காகாசுரனும், சிசுபாலனும் செய்த அபராதம் உலகில் எங்கும் இல்லை. அவற்றை பொறுத்தருளின எம்பெருமானுக்குப் பொறுக்க முடியாததொன்றுமில்லை. கம்ஸனைக் கொல்வதற்கு முன்னே அவனுடைய சின்னங்களை அழித்தான். விரோதியான துரியோதனன் முதலியோரைத் தன்னுடைய வலிமையால் அழித்து, தர்மபுத்திரன் தலையில் முடியை வைத்து, திரௌபதியின் கூந்தலை முடிக்கச் செய்தான். இப்படிப்பட்ட திருவிளையாடல்களினால் தன்னுடைய சக்தத்துவத்தை வெளிகாட்டுகிறான் எம்பெருமான்.

### முடிவுரை

இத்திருப்பதிகத்தைக் கற்றதனால் பெறும் பயனைச் சொல்லித் தலைக்கட்டுகிறார் ஆழ்வார்.

*புக்கவரிவுருவாய் அவுணனுடல் கீண்டுகந்த*
*சக்கரச் செல்வன்தன்னைக் குருகூர்ச் சடகோபன் சொன்ன*
*மிக்க வோராயிரத்துளிவைபத்தும் வல்லாரவரை*
*தொக்கும் பல்லாண்டிசைத்துக் கவரிசெய்வரேழையரே.*

நரசிங்க வேஷத்தாலே இரண்யன் உடலைப் பிளந்து அவனைக் கொன்று சிறுவனான பிரகலாதனுடைய விரோதியைப் போக்கப் பெற்றோம் என்று மகிழ்ந்தான் எம்பெருமான் என்கிறார் ஆழ்வார் – ஸ்ரீஸு‌தர்சனாழ்வான் இங்குக் காணவில்லையே என்ற கேள்விக்கு ஒவ்வோர் அவதாரத்திலும் திருவாழியின் சம்பந்தம் இல்லாமலில்லை என்பதை ஸ்ரீராம அவதாரத்தில் அம்பிலும், வராஹாவதாரத்தில் கோட்டிலும், நரசிம்மாவதாரத்தில் நகத்திலும், பரசுராமாவதாரத்தில் மழுவிலும் இப்படியாக ஸ்ரீஸு‌தர்சனாழ்வான் சக்த்யாவசேத்தோடு எழுந்தருளியிருப்பார் என்கிறார் ஸ்ரீகாஞ்சி ஸ்வாமி.

*முற்றும்....*



## கண்ணன் கருத்துரை

*அனன்யாச்சிந்தயந்தோ மாம் யே ஜனா: பர்யுபாஸதே ।*
*தேஷாம் நித்யாபியுக்தானாம் யோகக்ஷேமம் வஹாம்யஹம் ॥*

(9-22)

**எந்த ஒரு யோகி வேறுபாடு இல்லாத மனத்துடன் எப்பொழுதும் என்னையே நினைத்து என்னையே வழிபடுகிறானோ அவனுடைய யோக நலங்களை நானே சொந்தமாகக் கவனித்து வழங்குகிறேன்.**

தொகுப்பு:
பேராசிரியர் அமரர் பொன் சௌரிராஜன், திருப்பதி.



●●●●● திருநட்சத்திரம்...

# ஸ்ரீமந்நாதமுனிகளும் சொட்டைக்குலமும்



ஸ்ரீநாதமுனிகளின் 1200வது திருநட்சத்திரம் (01 ஜூலை 2023)

– திரு. கே. ஸ்ரீநிவாசன்,
மேல்கோட்டை.

ஆழ்வார்கள் அவதரித்து, திருமாலால் அருளப்பட்டு, பக்தி ஈடுபாட்டாலே ஈரச் சொற்களான தமிழ்ச்சொல் மாலைகளை பாசுரங்களாக வெளியிட்டனர். அவர்கள் காலத்திற்குப் பிறகு, ஆழ்வார்களின் அருளிச் செயல்கள் மறைந்து போயின. மீண்டும் தமிழ் மாலைகள் உயிர்ப்பெற்று மலர்ந்து மணமெங்கும் கமழ வேண்டும் என்று திருவுள்ளம் கொண்ட ஸ்ரீமந் நாராயணன் ஆசார்யர்களுக்குள் முதல்வராக ஒருவரை அவதரிப்பிக்கத் திருவுள்ளம் கொண்டு, விஷ்வக்ஸேனருக்கு ஆணையிட்டார். எம்பெருமானின் ஆயுதங்களும் ஆபரணங்களும் ஆழ்வார்களாக அவதரித்தது போன்றும், விஷ்வக்ஸேனர் தாமே நம்மாழ்வாராக அவதரித்தது போன்றும், தமது படைத்தலைவர்களுள் ஒருவரான ஆனைமுகத்தானுக்கு ஸ்ரீவைஷ்ணவ ஆசார்யராக அவதரிக்க ஆணையிட்டார்.

பாத்மபுராண வசனம்

*தத: கலியுகஸ்ய ஆதௌ வைசாக்யாம் விச்வபாவன: |*
*விஷ்ணு பக்தி ப்ரதிஷ்டார்த்தம் ஸேநேசோ அவதரிஷ்யதி ||*
*த்த காலேன மஹதா விநஷ்டாம் புவி தத் க்ருதிம் |*
*நாத நாமா முநிவர்: யோக ஜ்ஞானாத் அவாப்யஸி ||*

கலியுகத்தின் தொடக்கத்தில் விஷ்ணு பக்தியினை நிலைநாட்ட சேனை முதல்வர் தொடக்கமானார் அவதரிக்கப்போகிறார்கள். அதன் பிறகு, நாதமுனிகள் என்பவர் அவதரித்து யோக ஞானத்தால் அருளிச் செயலைப் பெறுவார். அவர் வழி அருளிச் செயல்கள் உலகம் முழுமையும் பரவும்.

அவருடைய அவதார விசேஷத்தை ப்ரபந்நாம்ருதம்

*கச்சித் ஈச்வரபட்டாக்ய: தத்ராஸீத் ப்ராஹ்மணோத்தம:*
*த்விசதே ச த்ரிஸஹஸ்ரே சதுர்விம்சதிக யுதே*
*கலௌயுகே கதே(அ)ப்தாநாம் சோபக்ருத் நாமகே தத:*
*ஸம்வத்ஸரே ஜ்யேஷ்டமாஸே சாகாயாம் மித்ரபே புதே*

ஸ்ரீமந்நாதமுனிகள் பிறந்த ஆண்டாகக் கோயிலொழுகு கலி 3924 ஆண்டு, கி.பி. 822–23 என்று கூறுகிறது. பெரிய திருமுடி அடைவு கலியுகம் மூவாயிரத்து இருநூற்று இருபத்து நான்கு (3224) வருஷத்திற்கு மேல் சோபக்ருத் ஸம்வத்ஸரம் ஆனி மாதம் ஏழாந்தேதி பௌர்ணமி புதன் கிழமை அனுஷம் என்கிறது.

ப்ரபன்னாம்ருதம் கலியுகத்தில் மூவாயிரத்து இருநூற்று இருபத்து நான்கு (3224) வருடங்கள் கழிந்த பின்பு, சோபக்ருத் வருஷத்தில் ஆனி மாதத்தில் பௌர்ணமி அன்று அனுஷ நக்ஷத்திரத்தில் புதன் கிழமையில் சேனை முதலியாரின் மந்திரியான கஜானனரின் அம்சமாகப் பிறந்தார் என்று விவரிக்கிறது.

**108 திவ்ய தேச திருக்கோயில்களில் மிகவும் பிரசித்தமான திருமலை திருவேங்கடமுடையானின் வருடாந்திர கணக்குகள் ஆடி மாதத்தின் முதல் நாளில் ஆரம்பிக்கப்படுகின்றன. இந்த நாளில் நடத்தப்படும் உத்ஸவத்தை தெலுங்கில் ஆனிவர ஆஸ்தானம் என்றும், தமிழில் ஆடிப் பூஜை என்றும் அழைக்கப்படுகிறது. இந்த நிகழ்வு "திரு ஆண்டு எழுத்து இடும் போது" (அதாவது வருட ஆரம்பம்) எனும் சொல்லால் கல்வெட்டுகளிலும் காணலாம். திருவேங்கடமுடையானுக்கு அன்று சிறப்பு அலங் காரங்கள் செய்து, வருடம் முழுவதும் கிடைக்கின்ற வருமானக் கணக்குகளை ஒப்படைத்து, மீண்டும் புதிய கணக்குகளை இந்நாள் முதல் துவங்குவர். இந்நிகழ்ச்சியில் தேவஸ்தான அர்ச்சகர்கள், ஜீயர் சுவாமிகள் மற்றும் உயர் அதிகாரிகள் பங்கு கொள்வர்.**




*அம்சேந கஜவக்த்ரஸ்ய விச்வக்ஸேந மந்த்ரிண:*
*ஜாதோ நாதமுனிஸ்தஸ்ய விப்ரஸ்ய ஸுமஹாசயா:*

நாத முனிகள் கி.பி. 823 தோன்றி, கி.பி. 918–ல் மறைந்தார். அவர் தொண்ணூற்றைந்து (95) ஆண்டுகள் வாழ்ந்தவர் என்பது மு.இராகவ அய்யங்காரின் முடிவு.

## நாதமுனிகள் திருநாமம்

நாதமுநிகளுக்குத் தகப்பனார் இட்ட திருநாமம் ரங்கநாதன். யோகாப்யாஸம் கைவந்த பின் ஸ்ரீரங்கநாத முனிகள் என்பது சுருக்கமாக நாதமுனிகள் ஆயிற்று. மற்றொரு குருபரம்பரை ஸ்ரீநாதன் என்று திருநாமம் சார்த்தப்பட்டது என்று தெரிவிக்கிறது. சடகோப திவ்ய சரிதத்தில் தேவகானத்தில் இவர் பாடியதால் நாதமுனி, (நாதம் –இசை, ஒலி) என்ற பெயரை நம்மாழ்வார் வழங்கினார் என்று அறிவிக்கிறது.

நாதன் என்றால் தலைவர் என்று பொருள் ஆளவந்தார் தமது ஸ்தோத்ர ரத்னத்தில் *''நாதாய நமுயே''* என்று அருளிச் செய்துள்ளார். பட்டரும், *''நௌமி நாதமுனிம் நாம, ஜீமுதம் பக்த விக்ரஹே''* என்றும், வேதாந்த தேசிகரும் *''நாதேன முனிநாதேன பவேயம் நாதவானஹம்''* என்றும் போற்றி உள்ளனர்.

"முனி" என்ற சொல்லுக்கு "மநன சீல: முனி:" என்பது பொருள். அதாவது சிந்திப்பவர் என்று பொருள். நம்மாழ்வார் எம்பெருமானை "முனியே" (10–10–1) என்று திருவாய்மொழியில் அருளிச் செய்துள்ளார். இதற்கு எம்பெருமான் சிந்திப்பவன் என்றே விளக்கம் அளித்து உள்ளார்கள்.

பிரளய காலத்தில் இந்த்ரியங்களையும் உடலையும் இழந்து அறிவற்ற ஜடப்பொருள் போல இருக்கின்ற ஆத்மாக்களைக் கண்டு, தான் தனியொருவனாக இருப்பதால் மகிழ வில்லை என்பதால் அவைபடும் துன்பத்தைக் கண்டு இரங்கி, ஐயோ என்று எம்பெருமான் நெஞ்சில் கொள்ளும் நினைவையே இங்கு "முனியே" என்ற சொல்லால் குறிப்பிடுகிறார் என்பது இதன் உரைவிளக்கம்.

திருமங்கை மன்னனும் "முனியே! திருமுழிக்களத்து விளக்கே" (7–1–6) அருளிச் செய்துள்ளார். இங்குப் பெரியவாச்சான் பிள்ளை "இச்சேதனன் அறியாதிருக்கச் செய்தே எப்பொழுதுமொக்க இவர்களுக்கு ஹிதத்தை அநுஸந்தித்து இருக்குமவனே" என்று வியாக்யானம் செய்துள்ளார். சேதனர் தம்மை அறியாது இருந்தபோதும் அவர்களுக்கு எப்போதும் நன்மையையே சிந்தித்திருப்பதால் முனியே என்பது இது *''சூழ்வீசும் பனிமுகில்''* என்னும் திருவாய்மொழி (10–9–11) *''குருகூர்ச்சட கோபன் சொல் சந்தங்களாயிரத்து இவை வல்லார் முனிவரே''* என்று முடிகிறது. திருவாய்மொழி வல்லார் – தலை சிறந்தவராக நாதமுனிகள் விளங்கியமையால் "முனி" என்ற சொல்லுக்கு திருவாய்மொழி இசைப்பாளரான "நாதமுனி" என்ற திருநாமமும் அவருக்கு பொருத்தமாக அமைந்துள்ளது எனலாம்.

நாதமுனிகளுக்கும் இக்குணம் இருந்ததால் "முனி" என்ற திருநாமத்தை உடையவரானார். உலகில் உள்ளோரின் நிலையினைக் கண்டு இரக்கம் கொண்டு ஆழ்வார்கள் அருளிச் செய்த

நாலாயிர திவ்யப் பிரபந்தப் பாசுரங்களை அனைவருக்கும் வழங்கி அவற்றைப்பாடி திருக்கோயில்களில் எழுந்தருளியுள்ள திருமாலை வணங்கினாலேயே நாடு நலம் பெறும். நாம் அனைவரும் வாழ்வில் வளம் பெறலாம் என்பதனைத் தம் சிந்தனையிலே கொண்டிருந்து, அவற்றை இவ்வுலகோர்க்கு உபகரித்துள்ளார். இதனையே மாமுனிகள் *''தெருளுற்ற ஆழ்வார்கள் சீர்மை அறிவார் யார்? அருளிச்செயலை அறிவார் யார்? அருள் பெற்ற நாத முனி முதலான நம் தேசிகரையல்லால் பேதை மனமே உண்டோ பேசு''* என்று அருளிச் செய்துள்ளமை கருத்தில் கொள்ளத்தக்கது. இவ்வாறு வைணவ சமுதாயம் வளமான வாழ்வு பெறச் சிந்தை செய்து உணரத்தக்கது. செயல்பட்ட வரை நாதமுனி என்று பெயரிட்டு அழைத்தமை உணரத் தக்கது.


நாராயணமுனி – சடகோபமுனி – நாதமுனி – யாமுனமுனி –ராமாநுஜ முனி – மணவாள மாமுனி என்று சேதனர்கள் உய்வடையும் பொருட்டு ரஹஸ்யத்ரய ஸம்பிரதாயத்தை வெளியிட்டருளிய “முனி ஷட்கம்” நமது ஸம்பிரதாயம்.

# ஸ்ரீமந்நாதமுனிகள் வம்சப் பெருமை

ஸ்ரீமந்நாத முனிகளின் வம்ச பரம்பரை ஸ்ரீசைல வம்ச வ்ருக்ஷம் மஹா வம்சமென்றும், சிரேஷ்ட குலம் என்றும் பிரசித்தி பெற்றது. அதனாலேயே ஸ்ரீஆளவந்தாரும் *''ஜநித்வாஹம் வம்சே மஹதி''* என்று அருளிச் செய்தார். சொட்டைக்குலம் என்றும் போற்றப்படுகிறது.

கண்ணனைக் குலதெய்வமாக உடைய வம்சமாகையால், அது மஹத்வம்சம் என்றும் சொல்லப்படுகிறது. அதனால்தான் ஆளவந்தார் *''ஸ்தோஷ்யாமிந குலநம் குலதைவதம் ச தத் பாதர விந்தம் அரவிந்தவிலோசனஸ்ய''* வம்ச பரம்பரையாக நமக்குச் சேர்ந்த செல்வமாய் நம் குலத்துக்கெல்லாம் ஆராத்யமாயிருக்கிற செங்கண்மாலின் திருவடித் தாமரைகளைத் துதி செய்யப் போகிறேன் என்று தெரிவித்தார்.

இதற்குக் காரணம் ஸ்ரீஆளவந்தார் முதலிகளோடு குருகைக் காவலப்பன் யோகம் செய்து கொண்டிருக்கிற இடத்திற்குச் சென்று அப்பனின் யோகம் கலைந்து விடுமோ என்ற பயத்தால், பின்புறம் நிற்கச் சொட்டைக்குலத்தவர் யாரேனும் வந்தாரும் உண்டோ? என்று அப்பன் கேட்டார். அப்போது ஆளவந்தார் “அடியேன் யமுனைத் துறைவன் வந்துள்ளேன்” என்று விண்ணப்பம் செய்து திருவடி தொழுது நின்றார். உடனே ஆளவந்தார் அடியேன் சுவர்ப்புறத்தே மறைந்து நிற்க, இப்படி அறியும்படி எங்ஙனே என்று கேட்டார். அதற்குக் குருகைக் காவலப்பன் நம் கண்ணன் சொட்டைக் குலத்துத் தெய்வமா கையால் தம் குலமகனைக் கண்டு திரும்பிப் பின்புறம் பார்த்தருளினார். அது கண்டு நானும் அறிந்தேன் என்றார்.




இந்த வம்சத்தில் ஸ்ரீமந் நாதமுனிகளுக்கு முன்பு மூல புருஷரான ஆங்கீரஸர் கிருஷ்ண பக்தர் என்பது ச்ருதி ப்ரசித்தம், ஷடமர்ஷண, விஷ்ணு வ்ருத்த, ப்ரம்ம நந்தி, ஈச்வரமுநி முதலியவர்களும், மஹா யோகிகள், பரம வைஷ்ணவர்கள் என்று பிரசித்தர்கள். அவர்களாலேயே அந்தக் குலத்திற்குக் மஹத்வம் முன்னாலேயே உள்ளது ஸ்ரீமந் நாத முனிகளால் அது மிகவும் அபிவிருத்தி அடைந்து பிரசித்தி பெற்றது.

ஜோதிட சாஸ்திரம்...





# வேத ஜோதிடத்தில் 12 வீடுகள்

- முனைவர் ஆ.முத்து கிருஷ்ண ஆச்சாரி,
திருவல்லிக்கேணி, 9444392595

### வேத ஜோதிடம்

இது இந்து/இந்திய ஜோதிடம் மற்றும் இது "வேதங்களில்" இருந்து உருவானதால் வேத ஜோதிடம் என்றும் அழைக்கப்படுகிறது. இது ஒருவரின் ஜாதகப்படி கிரகங்கள், சந்திரன், சூரியன், நட்சத்திரங்கள் பற்றிய ஆய்வு. அவர்களின் இயக்கங்கள் நம் உடலிலும், சுற்றுப் புறத்திலும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன என்ற நம்பிக்கையுடன் இதில் 12 ராசிகள் அடங்கும். அதாவது மேஷம், ரிஷபம், மிதுனம், கடகம், சிம்மம், துலாம், கன்னி, விருச்சிகம், தனுசு, மகரம், கும்பம், மீனம்.

அதோடு இயற்கையில் ஐந்து கூறுகள் உள்ளன. வேதங்களில் குறிப்பிடப்பட்டுள்ள பூமி (பூமி), நீர் (ஜலா), நெருப்பு (அக்னி), காற்று (வாயு) மற்றும் ஆகாயம் (ஆகாஷ்). ஜோதிடர்கள் ஒருவரின் ஜாதகத்தைப் பார்க்கும் போது இந்த அம்சங்களைக் கருத்தில் கொள்கிறார்கள்.

### வேத ஜோதிடத்தில் வீடுகளின் அர்த்தம்

வேத ஜோதிடத்தில் உள்ள வீடுகள் ஒரு நபரின் ஜாதகத்தைப் பொறுத்து அவரது வாழ்க்கையின் சரியான பகுதிகளை வரையறுத்து பிரிக்கிறது. இது ஒரு நபரின் துல்லியமான நேரம், இருப்பிடம் மற்றும் பிறந்த தேதி ஆகியவற்றின் அடிப்படையில் கண்டறியப்படுகிறது. வெவ்வேறு வீடுகள் வாழ்க்கையின் வெவ்வேறு பகுதிகளை நிர்வகிக்கின்றன. மேலும் இதனைக் குறித்து அறிந்து கொள்வோம்.


### வேத ஜோதிடத்தில் வீடுகள்

ஜோதிடத்தில், 12 ராசிகளைப் போலவே 12 வீடுகளும் ஒருவரின் வாழ்க்கைக்கு அடித்தளத்தை உருவாக்குகின்றன. மொத்தப் பிறப்பு விளக்கப்படம் ஒவ்வொரு வீட்டையும் உள்ளடக்கிய 12 சம பிரிவுகளைக் கொண்டிருப்பதால் அவை ஒன்றாக 360$^0$ கோணத்தை உருவாக்குகின்றன.

**வேத ஜோதிடத்தில் உள்ள 12 வீடுகள்**

| | | | |
|---|---|---|---|
| 12 விரய மோட்ச ஸ்தானம் | 1 லக்கின, சுய ஸ்தானம் | 2 குடும்ப, தன ஸ்தானம் | 3 இளைய சகோதர, தைரிய ஸ்தானம் |
| 11 மூத்த சகோதர, லாப ஸ்தானம் | ஒவ்வொரு ஸ்தானம் / வீடும் நம் வாழ்வில் உள்ள பல்வேறு அம்சங்களை கூறுகிறது. | | 4 சுக, தாயார் ஸ்தானம் |
| 10 கர்ம, தொழில் ஸ்தானம் | | | 5 பூர்வ புண்ணிய ஸ்தானம் |
| 9 பாக்கிய, தந்தை ஸ்தானம் | 8 ஆயுள், துஸ் ஸ்தானம் | 7 மனைவி, தொழில், கூட்டாளி ஸ்தானம் | 6 நோய், எதிரிகள் ஸ்தானம் |

தொடரும்....



# ஏகாதசி விரதம் புராண வரலாறுகளுடன்...

– திரு.துளசி கிருஷ்ணா, சென்னை.

### சாமிகா

தர்மபுத்திரன் ஆவணி மாத கிருஷ்ணபக்ஷ ஏகாதசியின் பெருமையைக் கூற வேண்டும் என்று கோவிந்தனைப் பிரார்த்திக்க, கண்ணன் கூறலுற்றான். பாண்டுநந்தனா! இந்த ஏகாதசிக்கு சாமிகா என்று பெயர். இதன் பெருமை சொல்லிலடங்காது. இதில் விரதமிருப்பவர் கங்கை முதலான புண்ணிய நதிகளில் ஸ்நானம் செய்த பயனைப் பெறுவர். நைமிசம் முதலிய புண்ய க்ஷேத்ர வாச பலனைப் பெறுவர். பூமிதான பலனும் அவருக்குக் கிடைக்கும். பாவக்கடலையும் எளிதே கடப்பர். இவர்கள் எம லோகத்தை காணகில்லார். இழி பிறவிக்கு ஒரு பொழுதும் தாழார். ஒரு பாரம் அதாவது (20 மணங்கு) தங்கம், 4 பாரம் வெள்ளி இவற்றை தானம் செய்த பலன் இவருக்கு உண்டு. இந்த ஏகாதசியில் அகோராத்ரம் தீபம் எரிப்பவர்களின் புண்ணியத்தை ஆயிரம் நா படைத்த அநந்தனாலும் சொல்ல இயலாது. பித்ருக்கள் அமுதமுண்டதுபோல் ஆனந்தமடைவர். இந்த விரதம் பிரம்ம ஹத்யாதி மகாபாபங்களைப் போக்க வல்லது. இந்த விரதத்தை முயன்று அவசியம் அநுஷ்டித்துப் பயன்பெறுவாயாக என்று கூறி முடித்தான்.

### பவித்ரா ரோபிணி

தர்ம புத்திரன் ஆவணிமாத சுக்லபக்ஷ ஏகாதசி மாகாத்மியத்தைக் கூற வேண்டும் என்று பிரார்த்திக்க மாதவன் வழங்கலானான். யுதிட்டிரா இந்த ஏகாதசிக்கு பவித்ர ஆரோபிணி என்று பெயர். மாஹிஸ்மதி என்ற நகரத்தை மஹிஜத் என்ற பேரரசன் வேதநெறி வழுவாது நல்லாட்சி புரிந்து வந்தான். அவன் எல்லா நலன்களையும் பெற்றிருந்தும் மகப்பேறு இல்லாத குறையினால் பெருவேதனை அடைந்தான். இம்மையிலும் மறுமையிலும் இன்பமளிப்பவன் புத்திரன். மனிதனுக்கு புத்திரன் சிறப்புச் செல்வம். அவனே சர்வ சுககாரணன்.

இதனால் மஹிஜித் மனம் நொந்து காலத்தைக் கழித்தான். வயது ஏறிக்கொண்டே போனதை உணர்ந்தான். ஒரு நாள் அவன் மந்திரிகளையும், அறிவாளிகளையும், தர்மம் அறிந்த அந்தணோத்தமர்களையும் அழைத்து அவர்களிடம் “பெரியோர்களே! நான் இப்பிறவியில் ஒரு பாபமும் செய்ததாக நினைவு இல்லை. அவ்வழியில் ஈட்டிய செல்வமும் பொக்கிஷத்தில் இல்லை. கோயில் மானியமாகவோ, வேறு பதவிகளிலிருந்தோ, கடவுளின் சொத்தை என்றும் அபகரித்ததில்லை. அடகு வைத்து இருந்த பொருளை ஏமாற்றவில்லை. இப்படி ஒரு பாபத்தையும் நான் செய்யவில்லை. நாட்டை நல்வழி நடத்துகிறேன்.

எதிரிகளை எதிர்நின்று வாகை சூடி நாட்டைப் பாதுகாக்கின்றேன். சாதுக்களை தெய்வமாக நினைக்கின்றேன். எனக்கு ஏன் புத்திரப் பேறு ஏற்படவில்லை. இதற்கு பரிகாரம் கூறுவீராக'' என மனமுருக பிரார்த்தித்தான். அமைச்சர், அந்தணர் முதலானோர் ஒன்று கூடி ஆலோசித்தனர். அவர்கள் அனைவரும் வெகுதூரம் காட்டிற்குள் சென்று ரிஷிகள் வசிக்கும் இடத்திற்குச் சென்றனர்.

ஆங்கே எல்லா ரிஷிகளாலும் வணங்கப்படுகிறவரும், அந்தரத்தில் இருந்து கொண்டு கோரமான மிகப் பெரிய தவமியற்றி வருபவரும், நீராஹாரராய், புலன்களை வென்று கோபத்தை அடக்கியவராய் தவம் புரிகின்றவரும், மிக அதிகமாக வளர்ந்த கேசங்களை உடையவருமான உரோமச மகரிஷியைக் கண்டனர்.

இவருக்கு ஒவ்வொரு பிரும்ம கல்பம் முடிந்ததும் ஒரு ரோமம் பழுத்து விழும். இந்த ரோமங்கள் எத்தனை உளதோ அத்தனை கல்பங்கள் அவரது ஆயுள் என்றும், அதனாலேயே அவருக்கு உரோமசர் என்றும் பெயர். முக்காலமுமறிந்த அம்முனிவரை எல்லோரும் வணங்கித் துதித்தனர். அவர் கண்விழித்து என்னால் உங்களுக்கு ஆக வேண்டியது என்ன என்று கேட்டார். இதைக்கேட்ட அமைச்சர் அந்தணர் கூட்டம், "முனி புங்கவா! தாங்கள் பிரும்மாவுக்கு அடுத்த படியாக எழுந்தருளியிருக்கிறீர்.

எங்கள் அரசர் மகா தர்மிஷ்டன். அவருக்கு புத்திரப்பேறு உண்டாகி அவர் இன்பம் பெற உபாயம் ஒன்றைக் கூற வேண்டும் என்று பிரார்த்தித்தனர். இதனைக் கேட்ட உரோமசர் யோகத்தால் விஷயமறிந்து அவர்களைப் பார்த்து "உங்களரசன் முன் ஜன்மத்தில் கருணை அற்றவனும், பணமில்லாதவனுமான வைஸ்யனாக இருந்தான். பணம் சம்பாதிக்க ஊர் ஊராகச் சென்றான். ஒரு நாள் நண்பகல் மிகவும் தாகமெடுத்தது. கிராமத்தின் எல்லையிலுள்ள ஒரு நடைவாவியை அடைந்தான். ஒரு பசுவும் அதன் கன்றும் தண்ணீர் குடிக்க இறங்கின. குடித்துக் கொண்டிருந்த பசுவை, அது கொஞ்சம் தேங்கி இருக்கும் தண்ணீர் முழுவதையும் குடித்து விடுமோ என்று அஞ்சி அதை விரட்டினான்.

துளி கூட நீர் பருக விடாது கன்றையும் விரட்டி விட்டான். தன்னுடைய தாகத்தைத் தீர்த்துக் கொண்டான். இதனால் மகப்பேறின்றி இந்த ஜன்மத்தில் வருந்துகிறான். ஏதோ ஒரு ஜன்மத்தில் செய்த புண்ணியப்பயனால் அரசனாக இருக்கிறான். உங்கள் அரசரை ஆவணி மாத சுக்லபக்ஷ ஏகாதசியில் உபவாசமிருந்து பகவானை பூசிக்கச் சொல்லுங்கள். மகப்பேறு உண்டாகும் என்று கூறி கண்மூடி தவத்தில் ஆழ்ந்தார்.

மக்கள் உரோமசரையும், மற்ற முனிவர்களையும் வணங்கி விடைபெற்று நகர் அடைந்து அரசனிடம் இவற்றைக் கூற அரசன் உபவாசமிருந்து வழிபட்டான். மக்களும் உபவாசம் இருந்து வழிபட்டனர். மக்கள் தங்கள் பலனை அரசனுக்கு தானம் செய்தனர். அரசி கருவுற்றாள். அரசன் புத்திரபாக்யமடைந்தான். இந்த ஏகாதசி விரதமிருப்பவர் இம்மை மறுமை இன்பங்களை அனுபவிக்கப் பெறுவர்.

*வரலாறு அறிவோம்...*

## வைணவ குறுக்கெழுத்துப்புதிர் 84க்கான விடைகள்

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 ம | ண | க் | கா | ல் | ந | ம் | பி | ய | ரி | 2 பெ | |
| ண | 3 தி | ரு | க் | கோ | ட் | டி | யூ | ர் | ந | ம் | பி |
| வா | ரு | ர் | ட | ட் | 4 ப | த | ந் | வி | 5 கோ | | ளை |
| ள | வே | ர் | ர் | 6 வ | ரா | 7 நா | த | மு | னி | க | ள் |
| மா | ங் | ய | த | ட | ச | 8 ரா | மா | னு | ஜ | ர் | பி |
| மு | க | ரி | ர | க் | ர | | 9 கொ | | ளை | தா | ன் |
| னி | ட | சா | வ | கு | ப | | ண் | | ள் | ந் | சா |
| க | ரா | கா | ய | த் | ட் | 10 கி | பா | ம் | பி | வ | ச் |
| ள் | மா | லோ | கி | தி | ட | | ர் | | ம் | ள | வா |
| | னு | ளை | ழ | ரு | ர் | ய | ஜீ | ஞ் | 11 ந | 12 ஆ | ய |
| | ஜ | ள் | 13 அ | ன | ந் | தா | ழ் | வா | ன் | | ரி |
| ள் | க | 14 பி | ம் | ந | லை | ம | ரு | தி | ய | ரி | 15 பெ |



*அலசுவோம்...*
*அறிவோம்...*
*ஆதிகாவிய நாயகர்களை...*

# ஏனென்று கேட்காத ஏகலைவன்

– திரு.எஸ்.ஸ்ரீதுரை,
காஞ்சிபுரம், 9486139685

ஸ்ரீமத் ராமாயணம், மகாபாரதம் ஆகிய இதிகாசங்களில் வந்த வேகத்தில் மறைந்து போகின்ற பாத்திரங்கள் பலரையும் காணலாம்.

தாங்கள் தோன்றுகின்ற காட்சியில் மட்டும் ஒரு வித சலனத்தை ஏற்படுத்திச் செல்லும் அப்பாத்திரங்களில் சிலர் அவ்விதிகாசங்களின் கதைப் போக்கை மாற்றிவிட்டாலும், ஏதோ ஒரு வகையில் நம்முடைய மனங்களில் சிம்மாசனம் இட்டு அமர்ந்து விடுகின்றார்கள்.

வேடுவர் குலத்தைச் சேர்ந்த ஏகலைவனும் அத்தகைய ஒரு பாத்திரமே. துரியோதனாதிகள் நூறு பேருக்கும், பாண்டவர்கள் ஐவருக்கும் ஆயுதப் பயிற்சி அளித்துப் போர்க்கலையில் அவர்களை வல்லவர்களாக விளங்கச் செய்தவரே துரோணாச்சாரியார் ஆவார். தாம் கற்றுக் கொடுத்த வில்வித்தையின் நுணுக்கங்களை நன்கு உள் வாங்கிக் கொண்டு மாவீரனாக உருவெடுத்த அர்ஜுனனிடம் அவருக்கு இயல்பாகவே ஓர் அக்கறை இருந்தது. அதன் காரணமாகவே துரியோதனன் உள்ளிட்டவர்கள் அவரைச் சந்தேகக் கண் கொண்டு பார்த்ததும் உண்டு.

துரோணாச்சாரியார் ஒரு சமயம் வனப்பகுதி வழியாகச் சென்று கொண்டிருந்த பொழுது அவரைக் கண்டு குரைத்த நாயின் வாயை ஓர் இளைஞன் தன்னுடைய அஸ்திரங்களால் கட்டிக் குரைக்க விடாமல் செய்தான். அவ்விளைஞனின் திறமையால் ஈர்க்கப்பட்ட துரோணர் அவனைப் பற்றி விசாரித்ததில், அவ்விளைஞன் வேடர் குலத்தைச் சேர்ந்த ஏகலைவன் என்பதும், துரோணாச்சாரியாரின் திறமைகளைப் பற்றிக் கேள்விப்பட்டு அவரையே தன்னுடைய மானசீக குருவாக வரித்துக் கொண்டு வில்வித்தைப் பயிற்சி செய்து அதில் உன்னதமான திறமையையும் பெற்றிருந்தான் என்பதும் தெரிய வந்தது.

அதைக்கேட்ட துரோணாச்சாரியாரின் வாக்கிலிருந்து சட்டென வெளி வந்தது ஒரு கேள்வி– “சரி அப்பா! நான்தான் உனக்கு குரு என்றால் நீ எனக்கு குருதட்சிணை தர வேண்டாமா?” “நிச்சயம் ஸ்வாமி, தாங்கள் எதைக் கேட்டாலும் தருகிறேன்.”

“சரி, உனது வலது கைக்கட்டை விரலை வெட்டிக் கொடுத்து விடு!”

"அப்படியே ஸ்வாமி!" ஏனென்று எந்த ஒரு கேள்வியையும் எழுப்பாமல் அந்தக் கணமே தான் வைத்திருந்த கத்தியால் தனது வலதுகைக் கட்டைவிரலை அறுத்து எடுத்து துரோணரின் திருவடிகளில் சமர்ப்பித்துவிட்டான் ஏகலைவன்.

"நல்லது, போய் வா! உனக்கு எனது நல்லாசிகள்!" அனைத்தும் மின்னல் வேகத்தில் நடந்து முடிந்து விட்டது. துரோணரைச் சூழ்ந்திருந்த ஏனைய சிஷ்ய கோடிகள் திகைத்து நின்றிருந்தனர்.

நமது பாரதபூமியில் குருசிஷ்ய சம்பந்தம் என்பது எப்படிப்பட்டது என்பதற்கும், குருவின் சொற்களுக்கு எவ்வாறு ஒரு சிஷ்யன் கீழ்ப்படிய வேண்டும் என்பதற்கும் ஏகலைவன் என்ற இந்த வேடுவர் குலத்தோன்றலின் சரித்திரம் சாட்சியாகி நிற்கிறது.

இவ்விடத்தில் ஒன்றைக் குறிப்பிட்டாக வேண்டும். பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் நடைபெற்ற இதிகாச, புராண கால நிகழ்வுகளைச் சில மேடைப் பேச்சாளர்களும் அரைகுறைப் படிப்பாளிகளும் தங்கள் மனம் போன போக்கில் விமர்சிப்பது தற்காலத்தில் வழக்கமாக உள்ளது.

அவ்வகையில் அந்தணராகிய துரோணர் க்ஷத்திரியனாகிய தம்முடைய சிஷ்யன் அர்ஜுனனை மிஞ்சும் வில்லாளி ஒருவன் இருக்கக்கூடாது என்ற வஞ்சக எண்ணத்துடன் வேடுவர் குலத்தைச் சேர்ந்த ஏகலைவனின் வலது கைக் கட்டை விரலை குரு தட்சிணையாகப் பெற்றுக் கொண்டு அந்த இளைஞனுக்குத் துரோகம் இழைத்து விட்டார் என்று தங்களின் மனம் போன போக்கில் சிலர் எழுதியும் பேசியும் வருவதைப் பார்க்கின்றோம்.

ஆனால், மகாபாரதக் கதை முழுவதையும் நாம் ஆழ்ந்து படித்தோம் என்றால் அக்கருத்து பிழையானது என்பதை எளிதில் உணர முடியும்.

திருதராஷ்டிரனின் தேரோட்டியும், மகாபாரத யுத்தத்தை ஞானக் கண்களால் பார்த்து வர்ணனை செய்தவருமாகிய சஞ்சயன் கூறுகிறார்.

*"யத்ர யோகேஸ்வர: க்ருஷ்ணோ யத்ர*
*பார்த்தோ தனுர்தர:*
*தத்ர ஸ்ரீர் விஜயோ பூதிர் த்ருவா நீதிர் மதிர் மம"*

அதாவது, எவ்விடத்தில் சகல யோகங்களிலும் வல்லவனாகிய ஸ்ரீகிருஷ்ண பரமாத்மாவும், வில்லேந்திய அர்ஜுனனும் இருக்கின்றார்களோ, அவ்விடத்தில் திருமகளின் அருளும், வெற்றியும் இருக்கும்" என்பதே சஞ்சயனின் கருத்து.

அர்ஜுனன் பெரிய வில்லாளியாக இருந்ததால் மட்டும் வெற்றி கிடைத்துவிடவில்லை. ஸ்ரீகிருஷ்ண பரமாத்மா தம்முடைய கையில் ஆயுதம் ஏந்திப் போரிடாமல், பாண்டவர்களுக்கு தார்மீக ஆதரவை அளித்ததுடன், அர்ஜுனனுக்குத் தேரோட்டியாக மட்டுமே இருக்கச் சம்மதித்தார். பகவான் எந்தப் பக்கம் இருக்கிறாரோ அந்தப் பக்கமே வெற்றி வந்து சேரும் என்ற நியதிப்படி பாண்டவர்கள் மகாபாரதப்போரில் ஜெயித்தனர்.

ஸ்ரீகிருஷ்ண பரமாத்மா தமது அவதாரத்தை முடித்துக் கொண்டு வைகுந்த உலகம் திரும்பிய பிறகு, அதே பாண்டவர்கள் சாதாரண வேடர் கூட்டத்துடன் போரிட முடியாமல் தோற்றனர். அச்சமயம் அர்ஜுனனால் தனது காண்டீபத்தில் நாண் ஏற்றவும் இயலவில்லை என்பதை அறியும்பொழுது, மகாபாரதப் போரில் அடைந்த வெற்றிக்குக் காரணம் கண்ணபிரானின் துணையே அன்றி, அர்ஜுனனின் வில்லாற்றல் அல்ல என்பது புரிந்து விடுகிறது.

இப்பொழுது இவ்விதம் சிந்திப்போம்.

ஒரு வேளை துரோணாச்சாரியாரும் ஏகலைவனின் கட்டை விரலை குருதட்சிணையாகப் பெற்றுக் கொள்ளாமல் இருந்து, வில்வித்தையில் சிறந்த அந்த ஏகலைவனும் கௌரவர்களுக்கு ஆதரவாகப் போரிட்டிருந்தாலும் கூடப் பாண்டவர்களின் வெற்றி என்பது உறுதி. ஏனெனில் அவர்களுக்கு எம்பெருமான் கண்ணபிரான் துணையாக இருந்தான். இதுவே உண்மை.

இந்நிலையில், துரோணர் ஒரு வேடுவ குல வில்வித்தை வீரனுக்கு துரோகம் இழைத்து விட்டார் என்று திசை திருப்பும் கூற்றுக்களை நம்பாமல், ஏகலைவன் தன்னுடைய மானசீக குருவாகிய துரோணரின் வார்த்தைக்குக் கட்டுப்பட்டுத் தனது கட்டைவிரலை வெட்டிக் கொடுத்துத் தன்னையே உயர்த்திக் கொண்டான் என்பதை உணர்ந்து அவனது தியாகத்தைப் பாராட்டுவோம்.

மாத்ருஸ்ரீ தரிகொண்ட வெங்கமாம்பா அருளிய

# ஸ்ரீவேங்கடாசல மாஹாத்மியம்





சென்ற இதழின் தொடர்ச்சி...

“ஸ்ரீமன்மஹா ஸ்வேத சத்க்ரோட ரூபாய நிர்லேப! போத ப்ரதீபா! ப்ரதா போஜ்ஜிவலா! ஸ்ரீப! இரண்யாட்ச காரிண்ய தேஹாத்ரி தம்போலிதாரா! சுராதார! தாத்ரீத லோத்தார! பர்மாத்ரீ தீர்! ஜகத்பூர! சித்சார பூதா! பவாம் போதி போதா! சுமோக்ஷ ப்ரதாதா! குணா தீரா! வேதார்த்த நிர்தேத! பூதாத்ம! தாதா! மஹாபஞ்சபூதா ப்ரபூதி ப்ரபஞ்சாகரா! ஸ்ரீகரா! சுப்பிரசன்னாத்மனவ மம்மு இரட்சிண்சுமீஸா! இரமாதீஸ! நீ சத்ப்ரபாவம்பு லென்னென் சகள்ரான நுந்டைன தனேபுனே! மாகு சக்கியம்பே நீ யுக்ர தம்ஸ்டிராகராளாஸ்யமுன் நீ சடல் வேடி சூட்குல் மஹா பீகராகாரமுன் சூடா மாகேய சாத்தியம்புக திரோசே லோகம்புன நமாநவ வ்ராதமுல்சுசி பீதில்லரே! தேவமம்முத்தரிம்பன் சதா சௌமியரூபம்பு, வேத்ரால்சி ஸ்ரீபூமி நீளா சமேதுண்டவை தேவதிரியஞ்மநுஸ்யக்ய ஜிவாளுலம் பூரோசுசுந் சர்வ நித்யோத்ஸவம்புல் மஹா பக்த புருந்தம்புலர்பிப்பக த்வ்யலீபா பிரபாவம்புலம் புசுன் மீரு கிரிடாசலம் பந்து வேம்ஜுயுண்டும் சேசிடகோ, பூர்ணகாமா! குணஸ்தோமா! தேவோத்தமா! தேவதா சார்வ பௌமா! தரிகொண்டதாமா! ந்ருசிம்ஹா! ஹ்ருதாம்ஹர! வராக அவதாரா! நமஸ்தே! நமஸ்தே!! நமஸ்தே!!!”என்று போற்ற, வராக ஸ்வாமி தேவேந்திராதிகளை அருட்பார்வைக் கொண்டு அரவணைத்தார். தேவர்களின் போற்றுதலுக்குப் பரவசம் அடைந்த ஸ்வாமி தேவர்களிடம் இவ்வாறு கூறினார்.

“சதுர்முகா! கைலாசவாசா! இரண்யாட்ச சம்ஹாரத்திற்காக நான் இந்த வராக அவதாரம் தரிக்க வேண்டியதானது. அசுரன் அழிந்தான். பூமியும் ஒரு நிலையில் நிறுத்தப்பட்டது. உலக உயிர்கள் அனைத்துக்கும் நிம்மதி கிட்டியது. நீங்கள் எப்படியிருந்தீர்களோ அப்படியே நீங்கள் தங்கள் தங்கள் உலகத்தில் மகிழ்ச்சியோடு இருப்பீர்களாக. நான் பூதேவி ஸ்ரீதேவியோடு உங்களுக்கு உதவும் வகையில் தொடர்ந்து இருந்து வருவேன். ஸ்ரீலக்ஷ்மி என் மார்பில் என்றும் வசிப்பவளாகவே இருப்பாள். கோர வடிவம் கொண்டு அல்லாமல் அழகான வடிவத்தோடு பூலோகவாசிகள் அனைவரையும் அருள்பாலிப்பேன். என் பக்தர்கள் யார் யார் என்னென்ன வேண்டுதலை என் முன் வைக்கிறார்களோ அவர்களுடைய வேண்டுகோளை நிறைவேற்றி அவர்கள் மகிழும் வண்ணம் அருள் செய்வேன். அதுமட்டும் அல்ல என்னை சரண் அடைபவர்க்கு எந்த துன்பமும் ஏற்படாத வண்ணம் பாதுகாப்பேன் என்று உறுதி கூறினார். அதன் பிறகு வராக தேவன் எல்லோரும் கண்டுகளிக்கும்படியாக வடிவம் கொண்டார். அமைதியான தோற்றத்தோடு கருணைக் கொண்டு தேவர்களை நோக்கினார். ஹரி தன் நிவாசத்தைத் தனக்குத் தகுந்தவாறு ஏற்பாடு செய்து கொண்டார். புஷ்கரணி தீர்த்தம் ஒரு புறமும், பௌவிய

புஷ்கரணி மறுபுறமும், வடமேற்கு திசையில் அழகான கட்டிடங்கள் ஆயிரம் சூரியன் ஒளியோடு ஒளிரும் கோபுரங்கள் பிராகாரங்களோடு கூடிய "மாயானிடு" விமானம் கொண்டவரானார். நொடி பொழுதில் ஒளிரும் கட்டடங்களைப் பார்த்து தேவர்கள் ஆச்சர்யத்தில் மூழ்கிக் கிடக்கையில், வராக தேவர் தேவியரோடு மறைந்து போனார். தேவர்கள் எல்லோரும் சென்றபிறகு ஸ்ரீபூ நீளா தேவி வராக ஸ்வாமியை வணங்கினர். அப்பொழுது ஹரி "ஆதிலட்சுமி! என் கோர வடிவைப் பார்த்து நீ அஞ்சுவாய் என நினைத்துக் கொண்டேன். ஆனால நீ என் செயலைப் புரிந்து கொண்டாய். நீளா தேவியோடு என்னிடத்திற்கு வந்தாய். அதுமட்டுமல்லாமல் பரிவாரங்களோடு வந்தது எனக்கு மிகவும் மகிழ்ச்சியைத் தந்தது" என்றார்.

ஸ்வாமி நீங்கள் எதற்கு அவ்வாறு நினைத்தீர்கள்? உங்களை விட்டு ஒரு நிமிடமாவது நான் இருக்க முடியுமா? நான் ஏதாவது அறியாமல் தவறு செய்திருந்தால் மன்னிக்கவும். அனைவரையும் கருணைக் கொண்டு பாருங்கள் என்று இரு கரங்களை யும் கூப்பி வணங்கினாள்.

"உலகமெலாம் தேடிப்பார்த்ததில் இந்த இடம் மட்டுமே நான் இருப்பதற்குத் தகுதியானதாகத் தோன்றியது. இந்த இடம் எனக்குப் பரம திருப்தியை உண்டாக்கியது. ஆதிலக்ஷ்மி இதுவே நமக்கு வைகுண்டம் என்றார் ஹரி.

"நீங்கள் எல்லாம் அறிந்தவர். நீங்கள் இருக்கும் இடமே நான் இருக்கும் இடம். உண்மையில் மிகவும் அழகும் கவர்ச்சியும் கூட. பழங்களைக் கொடுக்கும் செடிகள், வகைவகையான பூச் செடிகள் புண்ணிய தீர்த்தங்கள், முனிவர்கள் தங்கி தவம் செய்யும் ஆசிரமங்கள், உயரமான மலைச் சிகரங்கள், மோட்சத் தலமாகத் திகழும் இந்தப் பிரதேசங்கள் எல்லாம் எனக்கும் மிகவும் பிடித்துள்ளது என்று கூறியதும், வராக தேவன் ஆதி லக்ஷ்மி தன் மார்பிலே நிறுத்தி தன் தேவிமார்களை ஆதரித்தார். கருடாழ்வாரும் விஷ்வக்சேனாதிகள் வணங்க தன்னை நிலை நிறுத்திக் கொண்டார் என்று சூதர் சுவேத வராக வரலாற்றைக் கூறியவுடன், முனிவர்கள் "புராண வேதி" எங்கள் வேண்டுகோளை ஏற்று நீங்கள் இவ்வளவு விளக்கம் கூறினீர்கள். ஸ்வாமி! அதேபோல் புஷ்கரணியைப் பற்றி மீண்டும் சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள். அந்த பெயரே மிகவும் அழகாக உள்ளது. அந்த புஷ்கரணியைப் பற்றிய விசேஷத்தை அறிந்து கொள்ள வேண்டும் என்று ஆர்வம், இதைப் பற்றி எடுத்துக் கூறினால் மகிழ்ச்சி அடைவோம் என மிக்க பணிவுடன் கேட்டார்கள். தவறாமல் கூறுகிறேன் என்று சூதர் கூறினார்.

### ஸ்வாமி புஷ்கரணி மகிமை

விஷ்ணுவின் இருப்பிடமான வைகுண்டத்தில் உள்ள கிரீடாசலத்திலிருந்து ஸ்வாமி புஷ்கரணி பாய்ந்தோடுகிறது. பூமியில் வசிப்பவர்களால் அணுகுவது எளிதானது அல்ல. இது விரஜா நதியைப் போன்று மிகவும் புனிதமானது. நதிகளுக்கு எல்லாம் தாய் போன்றது. திருமகளாலும், மண்மகளாலும் காக்கப்பட்டது. திவ்யமான நறுமணம் கொண்ட மங்கலமான தீர்த்தத்தை உடையது. மஹாவிஷ்ணு ஸ்ரீதேவி பூதேவி நீளாதேவியுடன் விளையாடும் இடமிது.எல்லா பாவங்களையும் போக்கி புண்ணியத்தை அளிக்கக் கூடியது.

### பிரஹ்மஹத்தி தோஷம்

தாரகாசுரன் என்ற அசுரன் தேவர்களை துன்புறுத்தி வந்தான். தேவர்கள் தங்களை காக்கும்படி குமார ஸ்வாமியிடம் வேண்டினர். குமாரஸ்வாமி அந்த அசுரனை அழித்தார். அதனால் பிரஹ்மஹத்தி தோஷம் ஏற்பட்டது. அந்த தோஷம் நீங்க திருமலையில் உள்ள ஸ்வாமி புஷ்கரணியில் நீராடி, ஸ்ரீவராக ஸ்வாமியைத் தரிசித்து பிரஹ்மஹத்தி தோஷம் நீங்கப்பெற்றார். ஸ்ரீகிருஷ்ண பகவான் விபூதி யோகத்தில் ஸ்கந்தன் ஸ்வாமி புஷ்கரணியின் புனித தீர்த்தத்தினை அருந்தியதாக குறிப்பிட்டுள்ளார். இந்நிகழ்ச்சியினால் ஸ்வாமி புஷ்கரணி முக்கியத்துவம் அறியலாம்.

தொடரும்....

தெலுங்கு மூலம் : பேராசிரியர் கே சர்வோத்தம ராவ்,
தமிழாக்கம் : டாக்டர் சி.கோவிந்தசாமி, புத்தூர்.






## துளசி மாஹாத்மியம் ஆஸ்தானம்

துளசி மாஹாத்மிய ஆஸ்தானம் கடக மாத சுக்ல பக்ஷ துவாதசி அன்று நடைபெறும். அன்றைய தினம் திருப்பதி ஸ்ரீகோவிந்த ராஜ ஸ்வாமி காலை நேரத்தில் கருட வாகனத்தில் திருவீதி களில் எழுந்தருளப் பண்ணி ஆலயத்திற்கு திரும்பிய பின் ஜெய விஜய மண்டபத்தில் எழுந்தருளச் செய்து ஆஸ்தானம் நடைபெறும். அப்பொழுது துளசி மாஹாத்மிய புராணம் பாராயணம் செய்த பின் ஆஸ்தானம் இனிதே நிறைவு அடையும். இவ்வருடம் துளசி மாஹாத்மிய ஆஸ்தானம் 30–07–2023 அன்று நடைபெறுவதை முன்னிட்டு ஸப்தகிரி வாசகர்களுக்காக அடுத்தப் பக்கத்தில் துளசி அஷ்டோத்திர சத நாமாவளி வழங்கியுள்ளோம். அதை பாராயணம் செய்து துளசி தேவியின் இன்னருளைப் பெறுவோம்.

# ஸ்ரீதுளசி அஷ்டோத்தர சதநாமாவளி

1. ஓம் ஸ்ரீதுளஸ்யை நம:
2. ஓம் பாவந்யை நம:
3. ஓம் பூஜ்யாயை நம:
4. ஓம் ப்ருந்தாவநநிவாஸிந்யை நம:
5. ஓம் ஜ்ஞாநதாத்ர்யை நம:
6. ஓம் நிர்மலாயை நம:
7. ஓம் ஸர்வபூஜிதாயை நம:
8. ஓம் ஸத்யை நம:
9. ஓம் பதிவ்ரதாயை நம:
10. ஓம் ப்ருந்தாயை நம:
11. ஓம் க்ஷீராப்திமதநோத்பவாயை நம:
12. ஓம் க்ருஷ்ணவர்ணாயை நம:
13. ஓம் ரோகஹந்த்ர்யை நம:
14. ஓம் த்ரிபர்ணாயை நம:
15. ஓம் ஸர்வகாமதாயை நம:
16. ஓம் லக்ஷ்மீஸக்யை நம:
17. ஓம் ஸத்யஸுத்தாயை நம:
18. ஓம் ஸுதத்யை நம:
19. ஓம் பூமிபாவந்யை நம:
20. ஓம் ஹரித்யாநைகநிரதாயை நம:
21. ஓம் ஹரிபாதக்ருதாலயாயை நம:
22. ஓம் பவித்ராயை நம:
23. ஓம் ஸ்ரீரூபிண்யை நம:
24. ஓம் தந்யாயை நம:
25. ஓம் ஸுகந்திந்யை நம:
26. ஓம் அம்ருதோத்பவாயை நம:
27. ஓம் ஸுருபாயை நம:
28. ஓம் ஆரோக்யதாத்ர்யை நம:
29. ஓம் துஷ்ட்யை நம:
30. ஓம் ஸக்தித்ரயரூபிண்யை நம:
31. ஓம் தேவ்யை நம:
32. ஓம் தேவர்ஷிஸம்ஸ்துதாயை நம:
33. ஓம் காந்தாயை நம:
34. ஓம் விஷ்ணுமந: ப்ரியாயை நம:
35. ஓம் பூதபேதாளபீதிக்நாயை நம:
36. ஓம் மஹாபாதகநாஸிந்யை நம:
37. ஓம் மநோரதப்ரதாயை நம:
38. ஓம் மேதாயை நம:
39. ஓம் காந்த்யை நம:
40. ஓம் விஜயதாயிந்யை நம:
41. ஓம் ஸங்கசக்ரகதாபத்மதாரிண்யை நம:
42. ஓம் காமரூபிண்யை நம:
43. ஓம் அபவர்கப்ரதாயை நம:
44. ஓம் ஸ்யாமாயை நம:
45. ஓம் க்ருஸமத்யாயை நம:
46. ஓம் ஸுகேஸிந்யை நம:
47. ஓம் வைகுண்டவாஸிந்யை நம:
48. ஓம் நந்தாயை நம:
49. ஓம் பிம்போஷ்ட்யை நம:
50. ஓம் கோகிலஸ்வராயை நம:
51. ஓம் கபிலாநிமக்னகாஸம்பவாயை நம:
52. ஓம் ஆயுஷ்யதாயிந்யை நம:
53. ஓம் வரரூபாயை நம:
54. ஓம் து:கநாஸிந்யை நம:
55. ஓம் அவிகாராயை நம:
56. ஓம் சதுர்புஜாயை நம:
57. ஓம் கருத்மத்வாஹநாயை நம:
58. ஓம் ஸாந்தாயை நம:
59. ஓம் தாந்தாயை நம:
60. ஓம் விக்னநிவாரிண்யை நம:

61. ஓம் ச்ரியை நம:
62. ஓம் ஸ்ரீவிஷ்ணுமாலிகாயை நம:
63. ஓம் துஷ்ட்யை நம:
64. ஓம் த்ரிவர்கபலதாயிந்யை நம:
65. ஓம் மஹாஸக்த்யை நம:
66. ஓம் மஹாமாயாயை நம:
67. ஓம் லக்ஷ்மீவாணீஸுபூஜிதாயை நம:
68. ஓம் ஸுமங்களாயை நம:
69. ஓம் அர்சனபிரீதாயை நம:
70. ஓம் ஸௌமங்கல்யவிவர்தநாயை நம:
71. ஓம் சாதுர்மாஸோத்ஸவராத்யாயை நம:
72. விஷ்ணுஸாந்நித்யதாயிந்யை நம:
73. ஓம் உத்தானத்வாதஸீபூஜ்யாயை நம:
74. ஓம் ஸர்வதேவப்ரபூஜிதாயை நம:
75. ஓம் கோப்யை நம:
76. ஓம் ரதிப்ரதாயை நம:
77. ஓம் நிர்குணாயை நம:
78. ஓம் பார்வதீப்ரியாயை நம:
79. ஓம் அபம்ருத்யுஹராயை நம:
80. ஓம் ராதாப்ரியாயை நம:
81. ஓம் ம்ருகவிலோசநாயை நம:
82. ஓம் அம்லாநாயை நம:
83. ஓம் ஹம்ஸகமநாயை நம:
84. ஓம் கமலாஸநவந்திதாயை நம:
85. ஓம் பூலோகவாஸிந்யை நம:
86. ஓம் ஸுத்தாயை நம:
87. ஓம் ராமக்ருஷ்ணாதிபூஜிதாயை நம:
88. ஓம் ஸீதாபூஜ்யாயை நம:
89. ஓம் ராமமன: ப்ரியா நந்தநஸம்ஸ்த்திதாயை நம:
90. ஓம் ஸர்வதீர்த்தமயாயை நம:
91. ஓம் முக்தாயை நம:
92. ஓம் லோகஸ்ருஷ்டிவிதாயிந்யை நம:
93. ஓம் ப்ராதர்த்ருஸ்யாயை நம:
94. ஓம் வைஷ்ணவ்யை நம:
95. ஓம் ஸர்வஸித்திதாயை நம:
96. ஓம் நாராயண்யை நம:
97. ஓம் ஸந்ததிதாயை நம:
98. ஓம் மூலம்ருதே நம:
99. ஓம் பாவந்யை நம:
100. ஓம் அஸோகவநிகாஸம்ஸ்தாஸீ
தாத்யாதாயை நம:
101. ஓம் நிராஸ்ரயாயை நம:
102. ஓம் கோமதீஸரயூதீரஸம்ஸ்தாயை நம:
103. ஓம் குடிலாலகாயை நம:
104. ஓம் அபாத்ரபக்ஷ்யபாபக்நாயை நம:
105. ஓம் தாநதோயாயை நம:
106. ஓம் விஸுத்திதாயை நம:
107. ஓம் ஸ்ருதிதாரணஸுவ்ரதாயை நம:
108. ஓம் ஸுபாயை நம:
109. ஓம் ஸர்வேஷ்டதாயின்யை நம:

ஸ்ரீதுளசீதேவி
அஷ்டோத்தர சத நாமாவளி
பூஜாம் சமர்பயாமி



திருப்பதி ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி ஆலய விமானத்திற்கு தங்கமுலாம் பூசப்பட்ட தகடுகள் பொருத்தி 25-05-2023 அன்று மஹா சம்ப்ரோக்ஷணம் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் தி.தி.தே. இணைச்செயலாட்சித் தலைவர் திரு. வீரப்ரஹ்மம் ஐ.ஏ.எஸ். அவர்கள் மற்றும் தி.தி.தே. உயர் அதிகாரிகள் பங்கு கொண்டனர்.











22-05-2023 அன்று நடைபெற்ற ஆந்திர மாநிலம் அல்லூரி சீதாராமராஜு மாவட்டம், ரம்பசோடவரத்தில் தி.தி.தே. புதிதாக நிர்மாணித்த ஸ்ரீவேங்கடேஸ்வர ஸ்வாமி ஆலய மஹாசம்ப்ரோக்ஷணம். இந்நிகழ்ச்சியில் பங்கு கொண்ட தி.தி.தே.பொறுப்பாண்மைக் குழுத்தலைவர் திரு. ஒய்.வி. சுப்பா ரெட்டி தம்பதியினர் & தி.தி.தே. உயர்அதிகாரிகள்

# பெரியாழ்வார் பாசுரங்களின் நயம்


பெரியாழ்வாரின் இயற்பெயர் விஷ்ணு சித்தர் என்பதாகும். இவர் ஆனி மாதம், சுவாதி நட்சத்திரத்தில், ஸ்ரீவில்லிபுத்தூரில், மகாவிஷ்ணுவின் வாகனமான, பெரிய திருவடியெனும், கருடனின் அம்சமாக அவதரித்தார் என்பர்.

## பெரியாழ்வார்க்கு உரிய சிறப்புகள்

ஆழ்வார்களின் கால ஆய்வுப்படி காலத்தால் முந்திய முதல் ஆழ்வார்களின் பாசுரங்கள் நாலாயிரத் திவ்யப் பிரபந்தத்தின் ஆரம்பத்தில் வைத்திருக்க வேண்டும். ஆனால், பெரியாழ்வாரின் பாசுரங்களை முதலில் நாதமுனிகள் தொகுத்தார். இதற்குக் காரணம் வேதத்திற்கு முன்னும் பின்னும் எப்போதும் “ஓம்” என்னும் பிரணவத்தையே ஓத வேண்டும். அது போன்று, தமிழ் வேதமாகிய திவ்யப்பிரபந்தத்தின் தொடக்கத்திலும், முடிவிலும் ஓதப்பட வேண்டியது ஓங்காரப் பொருளுடைய திருப்பல்லாண்டே என உணர்ந்து, பெரியாழ்வாரின் திருப்பல்லாண்டையும், அவர் தம் திருமொழியையும் முதலில் வைத்தார் என்பர்.

கண்ணனின் பிறப்பு மற்றும் தாலாட்டு, அம்புலி, செங்கீரை, சப்பாணி, தளர்நடை, அப்பூச்சி காட்டுதல், காதுகுத்தல், நீராட்டுதல், குழல் வாரல், பூச்சூட்டல், காப்பிடல் எனப் பல பருவங்களில் கண்ணனின் பிள்ளைப்பருவங்களைப் பாடியுள்ளார். பிள்ளைத் தமிழ்ப் பருவங்களாக, பிற்காலத்தவர் குறித்த பலவும், பெரியாழ்வார் பாடியுள்ளதால், “பிள்ளைத்தமிழ்” இலக்கிய வகைக்கு இவரே முன்னோடி எனலாம்.

## பெரியாழ்வார் பாசுரங்களின் நயம்



திருப்பல்லாண்டின் தொடக்கமான பாசுரத்திலும், பின்னர் வரும் பாசுரங்களிலும் மூன்று மற்றும் நான்கு முறை பல்லாண்டு பல்லாண்டு என ஏன் ஓத வேண்டும் என்று சிலர் கேட்டனர். அதற்கு மிக்க தாகத்தோடு வருகின்றவன் தண்ணீர் என்று ஒரு முறை கூற மாட்டான். தண்ணீர், தண்ணீர், தண்ணீர் என்று பல முறை கூறுவது போல, தணிக்க இயலாத தாகத்தோடு பகவானுக்கு கண் எச்சில் (திருஷ்டி) வரக் கூடாது என்று பெரியாழ்வார் பாடுகிறார் என்று பெரியோர்கள் நயம் கூறுவர். *“செவ்வடி செவ்வி திருக்காப்பு”* என்று ஏன் பாடினார் எனில், பகவான் கைவிடினும், அவன் திருவடிகள் விடாது, உறுதியாகக் காப்பாற்றும் என்றும், படுக்கையில் தூங்கும் குழந்தைக்குப் பசி வந்தவுடன் தாயின் மார்பிற்கு வந்து பசியாறுவது போல, பெரியாழ்வாரும் திருவடியைப் பற்றுகிறார் என்றும் நயம் கூறுவர்.

ஆயர்பாடியில் கண்ணனுக்கு யசோதை கட்டிய தொட்டிலைப் பற்றி நமக்கு ஒன்றும் தெரியாது. ஆனால், பெரியாழ்வார் கட்டிய தொட்டிலை ஓர் பாசுரத்தில் கண்டு மகிழலாம்.

ஆயர்பாடியில் கண்ணன் படுத்துறங்கிய தொட்டில் மாற்றுக்குறையாத தங்கத்தால் செய்யப்பட்டது. இத்தொட்டிலில் இரு பக்கமும் மாணிக்கத்தாலான கயிறு கட்டி, அவற்றை இணைக்க நடுவில் வைரத்தால் ஆன இடைகழியையும் கட்டி ஆடுகப் பொன்னால் – அதாவது மிக உயர்ந்த பொன்னால் – ஆன, அழகிய சிறு தொட்டிலை மிகுதியான அன்பால் பிரமதேவன் தந்துள்ளான். இளம் பிரமச்சாரியான வாமன வடிவில் மாவலிச்சக்ரவர்த்தியிடம் சென்றவனே! தாலேலோ! உயர்ந்த இரு திருவடிகளால் மூவுலகும் அளந்தவனே!



தாலேலோ! என்ற பொருள் தர பாசுரமிடுகின்றார். இராமாயணத்தில் இல்லாத புதிய செய்தியையும், அதன் நயத்தையும் பெரியாழ்வார் பாசுரத்தில் இனி காண்போம். இராமபிரான் தனிமையில் இருக்கும் போது, சீதை இராமனை மல்லிகை மாலையால் கட்டுவதாகப் பாடுகிறார். அனுமன், அசோக வனத்தில் சீதா தேவியைப் பார்த்து இராமன் கூறிய அடையாளங்களில் ஒன்றாக இதைக் கூறுவதாக,

*"…. துணை மலர்க்கண் மடமானே!*
*எல்லியம்போது இனிதிருத்தல் இருந்தோர் இடவகையில்*
*மல்லிகை மாலை கொண்டு அங்கு ஆர்த்ததும் ஓரடையாளம்"*

என்ற (319) பாசுர அடிகளால் இதனை அறியலாம். இவ்வடையாளம் மிகவும் அந்தரங்கமாக இருவருக்கும் நடந்த நிகழ்ச்சியினைக் குறிப்பதால், மிகச் சிறந்த அடையாளமாகும் என்பர் பெரியோர். அழகான இரவு நேரத்தில் என்றும், இனிது இருந்தனர் என்று சொன்ன பெரியாழ்வார், "இட வகை" என்று பொதுவில் சொல்லி நம்மை எந்த இடம் என்று ஊகிக்க வைத்த திறம் மகிழத்தக்கது ஆகும். மேலும், இந்நிகழ்ச்சியைப் பெரியாழ்வார், தம் மானச அனுபவத்தில் கண்டறிந்து பாடியது என்று பெரியோர் நயம் கூறுவர்.

*"முன்னோர் மொழி பொருளே அன்றி அவர் மொழியும்*
*பொன்னே போல் போற்றுவோம்"*

என்று நன்னூல் கூறுகிறது (நூற்பா.9). இதைப் பின்பற்றிப் பெரியாழ்வார் கூறிய பாசுரம் காண்போம். *"உருவுகண்டு எள்ளாமை வேண்டும் உருள்பெருந்தேர்க்கு அச்சாணி அன்னார் உடைத்து"* – (திருக்குறள் 667) என்று திருவள்ளுவர் கூறியபடி, ஸ்ரீகண்ணன் இளமைப் பருவம் கண்டு அவனை இகழக் கூடாது என்று பாசுரம் பாடுகிறார்."பூரண சந்திரனே! கண்ணன் மிகச் சிறிய பிள்ளை என்று கருதி, இளஞ்சிங்கம் போன்றவனான என் மகனை அவமானம் செய்யாதே. இவனுடைய சிறுமை என்று நீ கருதுவதை, மாவலியிடம் சென்று இவன் பெருமையைக் கேள். கண்ணன் சிறு பிள்ளை என்று நீ தவறாகக் கருதினால், இவனுக்கு நீ அடிமை செய்ய உரியவன் ஆகிறாய். அன்று ஓங்கி உலகு அளந்த நெடுமால் உன்னைக் கூவி அழைக்கிறான். எனவே விரைவாக வருவாய்!" என்பது இப்பாசுரப் பொருள்.

உடல் தோற்றம் பார்த்து குறைத்து மதிப்பிடும் மக்கள் திருவள்ளுவர் காலத்திலும், பெரியாழ்வார் காலத்திலும் இருந்துள்ளனர் போலும். இந்தத் தவறான எண்ணத்தைப் பெரியாழ்வார் நுட்பமாகச் சாடுகிறார். ஒருவரே, அவரின் அறிவாற்றல் கொண்டும், செயல் திறன் கண்டு மதிப்பிட வேண்டும் என்றும், உடல் தோற்றம் கொண்டு மதிப்பிடுதல் தவறு என்றும் அறிகிறோம். எவ்வளவு பெரிய தேராக இருந்தாலும், அத்தேர் நகர்வதற்கு, சக்கரத்துடன் பிணைத்து உள்ள அச்சாணி தேவை. அச்சாணி இல்லாவிடில் தேர் சாய்ந்து விடும். சிறிய வடிவில் உள்ள அச்சாணி, பெரிய தேருக்கு ஆதாரமாகிறது. இங்கு கண்ணன் சிறு பிள்ளைதான்.

இவன் தான் முன்பு சின்னவடிவில் மாவலியிடம் சென்று மூன்றடி மண் கேட்டு, உலகத்தை அளந்த உத்தமன் ஆவான். அந்த அவதாரத்தில்தான் மாவலிக்கும், அவன் குரு சுக்ராச்சாரிக்கும் தண்டனை கொடுத்தான். இதை உணர்ந்து, முழு நிலவே, நீ விரைவாக வருவாயாக! என்று கூறும் நயம் எண்ணி எண்ணி மகிழத்தக்கதாகும்.

பெரியாழ்வார் பாசுரங்களில் அள்ள அள்ளக் குறையாத நயங்கள் பல உண்டு. இங்கு சிலவே கூறியுள்ளேன்.

**– டாக்டர்.கலியன் சம்பத், சென்னை, 7401076411.**

108 திவ்ய தேசம்

77

# திருத்தண்கா (சின்ன காஞ்சிபுரம் – விளக்கொளிப்பெருமாள்)

– உருப்பட்டூர் சௌந்தரராஜன், சென்னை.

**விஞ்ஞாபநம்**

ஸந்நிதிக்கு அருகிலேயே தூப்புல் ஸ்வாமிதேசிகன் சந்நிதி அவரது அவதார தலத்தில் அமைந்துள்ளது. சென்று சேவித்தால் ஆசார்யனின் அனுக்ரஹத்தைப் பெறலாம்.

**புராண வரலாறு :**

இங்கு விளக்கொளிப் பெருமானாய், பகவான் ஆவிர்பவிப்பதற்கு காரணம் பிரமனுக்கும் கலைமகளுக்கும் இடையே நிகழ்ந்த ஊடல் தான் என்பர். திருத்தண்கா என்று சொல் அழகும் குளிர்ச்சியும் பொருந்திய சோலை என்று பொருள்படும்.

பிரமன் தான் செய்யும் யாகத்தை இவ்விடத்தில் நிகழ்த்த எண்ணி அதற்கான முயற்சிகளில் இறங்கிய போது கலைமகள், சூரிய சந்திரர்களின் ஒளியைத் தடை செய்து எங்கும் இருளை உண்டாக் கவே, எம்பெருமான் ஒளி மணிவண்ணனாகத் தோன்றி, இருளை அகற்றி, யாகம் நடைபெறச் செய்ததால், விளக்கொளிப் பெருமாள் என்றும், தீபப்பிரகாசர் என்றும் இத்தல எம்பெருமான் போற்றப் படுகிறான்.

அரக்கர்கள் ஆலோசனையால், பிரமனின் யாகத்தீயையே விழுங்கக்கூடிய அளவில், நெருப்பு வண்ணமாக மாயநலன் என்ற ஓர் அசுரனை உருவாக்கி, சரஸ்வதி தேவி அனுப்பியதாகவும், எம்பெருமான் அவ்வசுரனையே கையில் விளக்குப் போல் தாங்கி, யாகசாலைக்கு ஒளி கொடுத்து யாகம் நிறைவேற வகை செய்தான் என்றும், அதனால் தீபப் பிரகாசர் என்றும், இக்காட்சியைக் கண்ட கலைமகள், அசுரனால் எம்பெருமானின் திருமேனிக்கு ஏற்பட்ட வெப்பம் நீங்குமாறு தானே சரஸ்வதி தீர்த்தம் என்ற திருக்குளமாக மாறினாள் என்றும் புராணம் கூறுகிறது.

**சிறப்புகள் :**

பரமபதம் செல்வதற்கு முன்பு, ஒவ்வொரு திவ்ய தேச எம்பெருமானிடம் சொல்லிக்கொண்டு ஆழ்வார் புறப்படுவது போன்ற நிலையில் இத்திருமொழி பாடப் பெற்றுள்ளது. இதற்கு விளக்கம் தரும் ஸ்ரீபெரிய வாச்சான் பிள்ளை, புதிதாக திருமணம்













ஆன ஒரு பெண், பிறந்தகத்தில் இருந்து புக்ககத்திற்கு போகும்போது தான் பிறந்த இடத்தில் உள்ள உறவு முறையாக, எல்லோரிடத்தும் சென்று, சொல்லிக் கொண்டு கிளம்புவதைப் போன்று ஆழ்வார் தான் மிகவும் உகந்த திவ்ய தேசங்களில் சென்று மீள்வ தாகச் சொல்கிறார். திருநீர்மலை, திருக்கண்ண மங்கை, திருவேங்கடம் என்ற மூன்றையும் சேவித்த பின்பு, திருத்தண்காவினை மங்களாசாசனம் செய்யும் ஆழ்வார்,

*"என்னை ஆளுடை ஈசனை எம்பிரான்*
*தன்னை யாம் சென்று காண்டும் தண் காவிலே"*

என்று பாசுரம் இடுகிறார்.

திருநெடுந் தாண்டகத்தில்...

*"விளக்கு ஒளியை மரதகத்தைத் திருத்தண் காவில்*
*.... பாடக்கேட்டு வளர்த்ததனால் பயன்*
*பெற்றேன் வருக என்று மடக்கிளியைக்*
*கைகூப்பி வணங்கினாளே"*

என்கிற பாசுரமும் அருமையானது. திருத்தண் காவில் "மரதகம்" என்பது பகவானின் பேரழகைக் காட்டும். மரகதம் என்ற சொல் பெருமாளைக் குறித் தாலும் தாயார்க்கும் இப்பெயரே அமைந்துள்ளது வியத்தற்குரியது.

| | | |
|---|---|---|
| பெருமாள் | : | தீபப்பிரகாசர், விளக்கொளிப் பெருமாள், திவ்யப் பிரகாசர், (மேற்கு நோக்கிய நின்ற திருக் கோலம்) |
| தாயார் | : | மரகதவல்லித்தாயார், |
| தீர்த்தம் | | சரஸ்வதி தீர்த்தம். |
| விமானம் | : | ஸ்ரீகர விமானம். |
| ப்ரத்யக்ஷம் | : | சரஸ்வதி, பூதங்கள். |
| ஆகமம் | : | வைகானஸம். |
| மங்களாசாஸனம் | : | திருமங்கை ஆழ்வார். |

**விசேஷம் :**

உலகில் அஞ்ஞானம் என்கிற இருளைப் போக்கி, ஞான விளக்காக எம்பெருமான் எழுந்தருளி உள்ளான். உலகம் முழுவதும் இருள் நிறைந்து, அனைவரும் வருந்தியபோது. எம்பெருமான் பரி முகப்பெருமானாக அவதரித்ததைத் திருமங்கை யாழ்வார்.

*"முன் இவ்வுலகேழும் இருள் மண்டியுண்ண*
*முனிவரொடு தானவர்கள் திசைப்ப வந்து*
*பன்னுகலை நால்வேதப் பொருளை எல்லாம்*
*பரிமுகமாய் அருளிய எம்பரமன்"*

என்று கூறி இருத்தலால் ஹயக்ரீவப் பெருமானே, ஸ்வாமி தேசிகனுக்கு அருளும் முறை யில் இத்தலத்தில் எழுந்தருளி உள்ளார் என்பர். தனது வாழ்நாள் முழுவதும் ஸ்வாமி தேசிகனால் வழி படப்பெற்ற பெருமை இப்பெருமானுக்கு உண்டு. திருத்தண்காவில் தூப்புல் என்ற இடத்தில், ஸ்வாமி தேசிகன் அவதரித்த காரணத்தால் "தூப்புல் தேசிகன்" என்றும், "தூப்புல் பிள்ளை" என்றும் அவருக்குப் பெயர்கள் ஏற்பட்டன. தான் அவதரித்த திவ்யதேசத்து விளக்கொளிப்பெருமாளை சரணாகதி தீபிகை நூலால், ஸ்வாமி தேசிகன் ஸ்தோத்திரம் செய்துள் ளார். வேதாந்தங்களால் அறியத்தக்க ஒப்பற்ற பரம்பொருள் விளக்கொளிப்பெருமாள் என்ற பெயருடன் இங்கே வேகவதி நதிக்கரையில் விளங்குகின்றது என்பாராய்.

*"வேதாந்நவேத்யம் இஹ வேகவதீ ஸமீபே*
*தீபப்பிரகாச இதி தைவதம் அத்விதீயம்"*

என்றும் அருளியுள்ளார்.

**த்யானச்லோகம் :**

*வாக்தேவீ வரதோ ரமாமரதகா தீபப்ரகாசோ*
*ஹரி:*
*ப்ரத்யக்தில்க் வதநஸ் ஸரச்ச விமலம்*
*ஸாரஸ்வதம் ஸர்வதா ।*
*தத்ர ஸ்ரீ தரநாமகே ஸுருசிரே புண்யே*
*விமாநோத்தமே*
*ப்ராம்யத் ஸம்ஸ்ருதி சக்ர பஞ்சன கரி*
*ஸித்த்யர்த்திபிஸ் ஸேவ்யதே ॥*

– ஸ்ரீவிஷ்ணு ஸ்தலாதர்சம்

**பாசுரம் :**

*"பொன்னை மாமணியை அணி ஆர்ந்ததோர்*
*மின்னை வேங்கடத்து உச்சியில் கண்டுபோய்*
*என்னை ஆளுடை ஈசனை எம்பிரான்*
*தன்னை யாம் சென்று காண்டும் தண்காவிலே"*

*– திருமங்கையாழ்வார்*

*"ஆட் பட்டேன் ஐம்பொறியால் ஆசைப்பட்டேன்*
*அறிவும்*
*கோட்பட்டு நாணும் குறைபட்டேன் - சேட்பட்ட*
*வண்காவை வண் துவரை வைத்த விளக்கு*
*ஒளிக்குத்*
*தண்காவைச்சேர்ந்தான் தனக்கு"*

– பிள்ளைப்பெருமாள் ஐயங்கார்

**நாமாக்கள்**

*721. ஓம் அபராஜித: நம:*

தன் அடியார்கள் தோல்வி அடையாமல் செய்பவன்.

*ஓம் ப்ரதமா: நம:*

அடியார்களின் தீவினைகள், பகவானைச் சரணம் புகவிடாமல் தடுக்கும்போது முன்னதாக அவர்கட்குக் காட்சி தருபவள்.

*722. ஓம் விச்வமூர்த்தி: நம:*

எல்லா உலகங்களையும் சரீரமாக உடையவன்.

*ஓம் சர்வா: நம:*

அடியார்களின் அசுபங்களைத் தீயினில் தூசாக்குபவள்.

*723. ஓம் மஹாமூர்த்தி: நம:*

விச்வரூபம் எடுத்தவன்.

*ஓம் விசாலா: நம:*

அடியார்களை விளங்கச்செய்பவள்.

*724. ஓம் தீப்தமூர்த்தி நம:*

மிக்க ஒளியுள்ள பொருட்களை சரீரமாக உடையவன்.

*ஓம் காமவர்ஷிணீ: நம:*

அடியார்கள் விரும்புவதைக் குறைவற அருள்பவள்.

*725. ஓம் அமூர்த்திமாந் நம:*

உருவம் இல்லாதவைகட்கும் தலைவன்.

*ஓம் ஸுப்ரதீகா: நம:*

சுபத்துக்கு குறைவு ஏதுமில்லாதவள்.

*726. ஓம் அவ்யக்த: நம:*

அவதார சமயத்தில் தன் மகிமை தெரியாமல் இருப்பவன்.

*ஓம் ப்ருச்நிமதீ: நம:*

கொடி போன்ற திருமேனி உடையவள்.

*727. ஓம் அநேகமூர்த்தி: நம:*

பல உருவங்களைத் தாங்குபவன்.

*ஓம் நிவ்ருத்தி: நம:*

குற்றவாளிகளைத் தண்டிக்காத கருணை உள்ளவள்.

*728. ஓம் சதமூர்த்தி: நம:*

எண்ணற்ற உருவங்களை உடையவன்.

*ஓம் விவிதா: நம:*

பகவானிடம் அன்புப் பார்வை, பக்தர்களிடம் அருட்பார்வை, மற்றவரிடம் உதாசீனப்பார்வை உள்ளவள்.

*729. ஓம் ஸதாநந: நம:*

எண்ணற்ற திருமுகங்களை உடையவன்.

*ஓம் பரா: நம:*

ஸ்வரூபம், குணம் இவற்றில் உயர்ந்தவள்.

*730. ஓம் ஏக: நம:*

இணையில்லாது ஒன்றானவன்.

*ஓம் ஸுயஜ்ஞா: நம:*

ஸுலபமாக அநுஷ்டிக்கத்தக்க பூஜாக்ரமங்களை உடையவள்.

*ஸ்ரீமதே ஸ்ரீமரகதவல்லீ நாயிகா ஸமேத ஸ்ரீதீபப்ரகாஸ, திவ்ய ப்ரகாஸ, (விளக்கொளிப்பெருமாள்) பர ப்ரம்மணே நம:*

**குறிப்பு :**

காஞ்சிபுரம் தேவப்பெருமாள் ஸந்நிதியிலிருந்து சுமார் 2 கி.மீ. தொலைவில் இவ்வாலயம் அமைந்து உள்ளது.

*திவ்யதேச வைபவம் வளரும்...*



## ஆழ்வார் ஆசார்யர்கள் வாழித்திருநாமமும் உரையும்

# பெரிய திருமலை நம்பி

– ஸ்ரீ உ.வே. டாக்டர் மாடபூசி வரதராஜன் ஸ்வாமி,
சென்னை, 9841884972

*சென்ற இதழின் தொடர்ச்சி...*

(அனவரதம் மலைகுனியர்க்கு அடிமை செய்வோன்) அநவரதம் – எப்போதும், மலைகுனிய நின்ற பெருமாள். மலை – திருமலையை, குனிய – பூர்ணமாக, நின்ற – நின்றானாகையாலே – நிலையார நின்றான் என்று ஆழ்வாரும் அருளிச் செய்தார். இத்தைப்பற்றி, ***“ஸ்ரீவ்ருஷசைல மாஸ்தத விபு:”*** என்று பெரியோர் வாக்கு. ஆளவந்தார் திருவடிகளைப் பற்றின சீடர்களில் பெரிய திருமலை நம்பி ***''வேங்கடத்தைப் பதியாக வாழ்வீர்காள்''*** என்கிறபடியே திருவேங்கடமுடையானை அடிக்கீழ் அமர்ந்து புகுந்து ஸேவித்துக் கொண்டு எழுந்தருளி இருந்தார் என்று குருபரம்பராப்ரபாவம் கூறும். அது எங்ஙனேயென்னில், ஒரு சமயம் ஆளவந்தார் திருவாய்மொழி மூன்றாம் பத்தில் மூன்றாம் பதிகமான ***“ஒழிவில் காலமெல்லாம்”*** என்ற பதிகத்தை ஓதி அதன் பொருளைச் சிந்தித்து மனம் ஈடுபட்டவராய், நம்மாழ்வார் திருவேங்கடவனுக்கே மிக உயர்ந்த புருஷார்த்தமான கைங்கர்யத்தைச் செய்ய பாரித்தார். நித்யஸூரிகளும் பூஜைக்கு வேண்டிய சிறந்த மலர், தீர்த்தம் முதலானவற்றைக் கொண்டு ஸமர்ப்பித்து திருப்தி அடைகிறார்கள்.

“இத்தகைய கைங்கர்யத்தைத் தாமும் செய்து திருவேங்கடவனை மகிழ்விக்க விரும்புகிறேன். பாக்கியமற்ற எனக்கு இப்படிப்பட்ட கைங்கர்யம் எப்படி கிடைக்கப் போகிறது” என்று சொல்லும் போது, ஆளவந்தாருடைய சீடர்களில் ஒருவரான இந்தத் திருமலை நம்பிகள் தமது ஆசார்யர் விருப்பத்தை தாமே நிறைவேற்றுவதற்காக அவர் அனுமதி பெற்று திருமலைக்குச் சென்று மலை குனியநின்றார்க்கு இடைவிடாமல் அடிமை செய்து வந்தார். இது பற்றியே மலைகுனியர்க்கு அடிமை செய்வோன் என்றபடி.

(மெய்யன் இராமாநுசாரியன் விரும்புமவன்) மெய்யன் – ஸத்யசீலன். இராமாநுசருக்கு ஸத்ய சீலமாவது அடிமைக்கு எல்லையிலே நிற்கையாலே அடிமைத் தன்மைக்கும் தமக்கு மேற்பட்டார் இல்லை என்னும்படி இருக்கிற ஸ்ரீதொண்டரடிப்பொடி ஆழ்வார் திருவடிகளை ஒழிய விரும்பாத ஸத்ய சீலர் இராமாநுசர் என்று உரைப்பர் மாமுனிகள் (இ.நூ.13). மெய்யன் – உண்மை கூறுபவர். காண்பதனைத்தும் உண்மை என்று கண்டவற்றை மாற்றாது உரைப்பவர். காண்பது அனைத்தும் ஸத்யமே என்பது வேதமறிந்தவரான இராமாநுசர் கொள்கை. எனவே காண்பதை இல்லை என்னும் பொய் உரையை இவர் பொறுக்காதவர் என்றும் கூறுவர் பெரியோர். இராமாநுசன் – பதினோரு திருநாமங்களில் இரண்டாவதான இராமாநுசன் என்ற தாஸ்ய நாமம் பெரிய நம்பிகள் இட்டது என்று பெரிய திருமுடி அடைவு கூறும். ஆரியன் – சிறந்த அனுட்டானம் உடையவர். அனுட்டானத்தில் மிக்க ஊக்கம் உடையவர். நெருங்கத் தகுந்தவர். இராமாநுசாரியன் விரும்புமவன் – இராமாநுசனை விரும்பும் பெரிய திருமலை நம்பி என்றும், ராமாநுசரால் விரும்பப்படும் பெரிய திருமலை நம்பி என்றும் கொள்ளத்தகும்.

அந்த வகையில் இராமாநுசரின் பிரபாவத்தை வெளியிடும் வகையில் இராமாநுசர் திருமலைக்கு எழுந்து அருளும் போது அன்பு மிகுதியால்

திருப்பரியட்டப்பறை வரை நம்பிகள் எதிரே சென்று திருவேங்கடவன் தீர்த்தத்தையும், பிரசாதத்தையும் கொடுத்தார். அவற்றைப்பெற்றுக் கொண்ட இராமாநுசர் நம்பியைப் பார்த்து "தேவரீர் வர வேண்டுமா? வேறே சிறியார் இல்லையோ?" என்று கேட்டார். நம்பியும் "நான்கு திருவீதியிலும் ஆராய்ந்து பார்த்த இடத்தில் என்னைக் காட்டிலும் சிறியாரைக் காணவில்லை'' என்றார். மேலும் எம்பாரை இராமாநுசருக்கு நீர் வார்ப்பத்துடன் கொடுத்தார். அப்போது எம்பாரிடம், "நீர் இராமாநுசரை நம்மைக்காட்டிலும் மேம்பட்டவராக நினைத்திரும். அவர் திருவடிகளே தஞ்சம். அவர் எல்லாருக்கும் உத்தாரகராகத் திகழ அவதரித்தவர்.

ஆகையால் இவரோடு ஸம்பந்தம் நேராகப் பெறாவிடினும், ஸ்ரீராமாயண வ்யாஜத்தாலே ஒரு ஸம்பந்தம் பெற்றோம்" என்று அருளினார். பின்னர் தம் குமாரரான இராமாநுசனையும் பிள்ளை திருமலை நம்பியையும் இராமாநுசர் திருவடிகளைப் பற்றச் செய்தார். அவ்வாறே இராமாநுசர் ஆளவந்தார் நினைவுபடி தர்சன ப்ரவர்த்தகர் என்பதை அறிந்த நம்பிகள் *''வித்தாகும் காய் பிஞ்சிலே தெரியும்''* (வார்த்தாமாலை 441) என்பர். அதாவது "பல மரங்களுக்கு மூல காரணமான விதைக்காயைப் பிஞ்சிலேயே காணலாம். அதுபோலவே உலகம் வாழ வந்தவர் இராமாநுசர் என்பதை அவருடைய சிறுவயதிலேயே நாங்கள் கண்டு விட்டோம்'' என்றபடி. இவற்றால் நம்பிகளுக்கு இராமாநுசரிடம் உள்ள அன்பைச் சொன்னபடி.

இராமாநுசருக்கு நம்பிகளிடம் உள்ள விருப்பத்தைச் சொல்லும் போது, ஆளவந்தார் நியமனப்படி ஸ்ரீராமாயணப் பொருளை ஒரு வருட காலம் திருப்பதிக்குச் சென்று காலக்ஷேபம் கேட்டார் இராமாநுசர். கோவிந்தபட்டர் என்னும் எம்பார் உள்ளங்கை கொணர்ந்த நாயனாரானது கேள்விப்பட்டு இராமாநுசர் அவரைத் திருத்தி தம்மோடு சேர்ப்பார் ஆர் என்று எண்ணி, திருமலை நம்பிகளிடம் ஒரு ஸ்ரீவைஷ்ணவரை அனுப்பி வைக்கிறார். அப்போது நம்பிகள் விசேஷ ஆத்ம குணமுடையவர். வேத வேதாந்தங்களை அறிந்தவரில் தலைவர், வகுளாபரண ப்ரபந்தமான திருவாய்மொழியில் ஆழங்கால் பட்டவர். திலதமுலகுக்காய் நின்ற திருவேங்கடத்து எம்பெருமானை அநவரதம் பிரியா அடிமை செய்பவர். ஆசார்யர்களுள் முதன்மையானவர் என்று பலபடியாக நம்பிகளிடம் அன்பு வைத்திருப்பதை குருபரம்பராப்ரபாவம் மூலம் அறியலாம். இராமாநுசருடைய அவயவ ப்ரபாவம் சொல்லும் போது *''சைலபூர்ண: ஸ்தந த்வயம்''* என்கிறபடியே இராமாநுசருக்கு இரண்டு மார்பகங்களாகத் திருமலை நம்பி திகழ்பவர். இது பற்றியே நம்பிகளை இராமாநுசாரியன் விரும்புமவன் என்று வாழ்த்தினபடி.

(மிக்க திருமலையார்க்கெல்லாம் மேலாவான்) மிக்க – உயர்ந்த. திருமலையில் வாழ்பவர்களுக்கு உயர்த்தியாவது திருவேங்கடவனுக்குக் கைங்கர்யம் செய்வதாகும். அந்த வகையில் பெரிய திருமலை நம்பிகள் தம் ஆசார்யரான ஆளவந்தாருடைய கட்டளையை நினைவுபடுத்திக் கொண்டு, அவர் தம் நியமனத்தைச் சிரமேற்கொண்டு, திருமலையில் வந்து வசித்துக்கொண்டு, பெருமாள் திருமஞ்சனத்துக்குத் தூய்மையானதும் சுவையுள்ளதும் ஆரோக்கியமளிப்பதுமான பாபவிநாசனம் என்னும் புண்ணிய தீர்த்தத்தின் நன்னீரை பக்தியுடன் திருமங்கையாழ்வார் அருளிய பெரிய திருமொழி பாசுரத்தை ஓதிக்கொண்டு வந்து ஸமர்ப்பிப்பார். மேலும் மலர்கள் முதலானவற்றையும் கொண்டு வந்து கொடுத்து திருவேங்கடவனை மகிழ்விப்பார். இத்தகைய கைங்கர்யம் அங்குள்ளார்க்குக் கிடைக்காதாகையால் நம்பிகளை *''திருமலையார்க்கு எல்லாம் மேலாவான்''* என்றபடி.

(செய்ய தமிழ் வேதத்தின் சிறப்பறிந்தோன்) தமிழ் வேதமாவது வேதார்த்தங்களைத் தமிழாக அருளிய ஆழ்வார்களின் திவ்ய ப்ரபந்தமாகும். தமிழ் வேதத்துக்குச் செம்மையாவது அநுகூலர்க்குத் தன் பொருளைப் பிரகாசிப்பித்துக் கொண்டு பிரதி கூலர்க்கு பிரகாசிப்பியாதிருக்கை. ஆளவந்தாரிடம் இருந்து உபய வேதாந்தங்களின் கருத்தை அறியப் பெற்று அநுபவித்த சீடர்களில் பெரிய திருமலை நம்பிகளும் ஒருவராவர். திருப்பாணாழ்வார் அருளிய அமலனாதிபிரான் என்னும் பிரபந்தத்தில் அரங்கனைத் திருப்பாதம் முதலாக திருமுடி அளவாக அநுபவித்த ஆழ்வார் உள்ளத்துக்கு ஏற்ப அந்த ப்ரபந்தத்துக்கு *''காட்டவே கண்ட பாதம்... பாணர்தாள் பரவினோமே...''* என்னும் தனியனை

அருளினார். அந்த வகையில் தமிழ் வேதமான திவ்ய ப்ரபந்தத்தின் சிறப்பினை அறிந்து அனுபவித்து சில நிர்வாகங்களைக் காட்டியுள்ளார். திருப்பாவையில் (14–6 படி) ***"செங்கல் பொடிக்கூறை"*** என்பதற்குச் சேர ஸத்வ குணத்தில் ஊன்றியவர்களான ஸந்யாஸிகளைச் சொல்லுகிறது என்பர். ஆண்டாளிடம் நம்பிகளுக்கு உள்ள பக்தியை தெரிவிக்கும் வகையில் ***"மழையே மழையே"*** என்ற பாட்டையும், ***"கடலே கடலே"*** என்ற பாட்டையும் (நாச். திரு. 10–8,9) அநுஸந்தித்து கண்ணும் கண்ணீருமாக ஒரு வார்த்தையும் சொல்லமாட்டாமல் மூழ்கியிருப்பாராம் என்பர் பெரியவாச்சான்பிள்ளை. மற்றும் திருவிருத்தத்தில் 3,36,44 பாசுரங்கள், திருவாய்மொழியில் 1–4–8, 4.3 ஆகிய பாசுரங்களிலும் இவருடைய நிர்வாகத்தைக் காணலாம்.மேலும் திருமலை நம்பிகள் தம் இறுதிக் காலத்தில் தம்முடைய திருவாராதனப் பெருமாளான வெண்ணெய்க்கு ஆடும் பிள்ளை திருமுன்பில் திருத்திரையை வாங்கச் சொல்லி ***"சாயலொடு மணிமாமை தளர்ந்தேன் நான் இனி உனது வாயலகில் இன்னடிசில் வைப்பாரைநாடாயே"*** என்றாராம் என்று நம்பியின் பக்தி வெளிப்பாட்டை உரைப்பர் நம்பிள்ளை (திரு.1–4–6).

(திருமலை நம்பிகள் உபய திருவடிகள் வாழியே) திருவேங்கடவனுக்கு அபிஷேக தீர்த்தம் கொண்டு தரும் கைங்கர்யம் ஒன்றிலேயே ஊன்றினவராய், அதுவே காரணமாக பெருமாளுடைய மிக உயர்ந்த அன்புக்குக் கொள்கலம் ஆனவராய், பரம பாகவதர்களில் மிகச் சிறந்தவரான திருமலை நம்பிகளுடைய திருவடிகளில் பேரன்பு கொண்ட மனமுடைய பெரியோர்களால் ஓதப்படும் மூன்று ச்லோகங்களை திருவேங்கட மலை வரலாற்று மாலை என்னும் நூல் மூலம் அறியலாம்.

1) தாமரைக் கண்ணனான திருவேங்கடமுடையான் திருமலையில் யாவரொருவரை தாத என்று அழைத்து நீர் நிரம்பிய கலசத்திலிருந்து அன்புடன் நீரைப் பருகினானோ அந்தத் திருமலை நம்பிகளுக்கு வணக்கம் என்றும், வயதின் முதிர்ச்சியால் உண்டான தளர்ச்சியைப் பாராமல் பாபவிநாசத்திலிருந்து நீர் நிரம்பிய குடத்தைத் தலையில் வைத்துக் கொண்டு வருகின்ற திருமலை நம்பிகளை "தாத" என்று கூறி வேடனின் வேடம் அணிந்த திருவேங்கடவனிடம் நீரை யாசித்தான். நம்பிகள் நீர் கொடுக்காமையால் அந்த வேடன் அம்பை எய்தி குடத்தைத் துளைத்து அப்போது வந்த நீரைப் பருகினான்.

2) பின்னர் தீர்த்தம் திருடு போனதால் நம்பிகள் கலங்கினார். உடனே வேடன் உருவம் கொண்ட வேங்கடவன் அவருடைய கையைப் பற்றி அழைத்துக் கொண்டு திருமலையில் அம்பைக் கொண்டு ஆகாச கங்கா நதியை உண்டாக்கி "இந்த நதியிலிருந்து தீர்த்தம் திருவேங்கடவனுக்கு உகந்ததாகையால் தினமும் கொணர்ந்து எனக்குத் தாரும்" என்று சொல்லி மறைந்தான்.

3) நம்பிகளைப் பற்றிய ***"பிதாமஹ ஸ்யாபி... நம: ஸ்தாதி"*** என்ற தனியனில் "நான்முகக் கடவுளுக்கும் தந்தையான திருமாலுக்குத் தகப்பனாராயும், ஸ்ரீபாஷ்யகாரரான இராமாநுசர் என்ற மிகச் சிறந்த ஆசிரியருக்கு, வால்மீகியின் உபதேசமான ஸ்ரீராமாயண ஸாரப்பொருளை உபதேசித்த ஆசாரியராயும் திகழும் திருமலை நம்பிகளுக்கு வணக்கங்கள் உரித்தாகுக" என்று தினமும் வைணவர்கள் ஓதும் மந்திரமாகும் என்பர். இத்தகைய பெருமை பெற்ற திருமலை நம்பிகள் உபய திருவடிகளை வாழ்த்துவோமாக.

*வாழித்திருநாம உரை தொடரும்....*


திருமலை திருப்பதி தேவஸ்தானம்

**திருமலையில்**
**இரத்ததானம் செய்யுங்கள்!**
**திருமலையப்பனின் இறையருள் பெறுங்கள்!!**

- இரத்தம் தானத்தால் மட்டுமே வழங்க முடியும். இரத்தம் தேவை படுபவர்களுக்கு நாம் அதை அளிப்பதன் மூலம் ஒரு உயிரையும் காப்பாற்ற முடியும்.
- கலியுக வைகுண்டமான திருமலையில் இரத்த தானம் செய்வது புண்ணியமாகும்.
- திருமலை அஸ்வினி மருத்துவமனையில் தினமும் காலை 9.00 மணி முதல் 12.30 மணி வரை இரத்த தானம் அளிக்கலாம்.

தொலைபேசி எண் :
0877-2263601

இரத்தம் தானம் செய்யுங்கள்!
ஆபத்தில் உள்ளோரைக் காத்திடுங்கள்!!



# பதஞ்சலியின் யோக சூத்திரங்கள்

– திரு.எம்.எஸ்.சுகுமார்,சென்னை,
8838252312.

பதஞ்சலி முனிவர் யோகக்கலையை சமாதி , சாரனை,விபூதி, கைவல்யம் என 4 பாதங்களில் 196 சூத்திரங்களாக வகுத்தார். அவற்றை சற்றுச் சுருக்கமாக அறிவோம்.

**1. சமாதி பாதம் .... 51 சூத்திரங்கள்**

இந்து மத சாஸ்திரங்கள் உலகியல் இன்பங்களை அடையக்கூடிய விஷயங்களை கூறுகின்றன. ஆனால் பதஞ்சலி வகுத்த யோகத்தின் பாதையானது மனிதனின் உடலில் நடக்கும் அற்புதமான விஷயங்களைக் கூறிப் பிறவிப்பிணியைப் போக்கும் மோட்சத்தை அடையக்கூடிய யோக சூத்திரங்களை விளக்கிக் கூறுகின்றன.

**சூத்திரம் 1 :** *"அது யோகானு சாஸனம்"*

"அத" எனத் தொடங்கும் சொல் மங்களகரமானது எனவும், "யோக அனுசாசனம்" என்றால் ஜீவன் பிரம்மனோடு இரண்டறக் கலக்கும் ஐக்கிய பாவனைப் பற்றிய பாடம் புகட்டுவது அல்லது உபதேசிப்பது என்பது கருத்தாகும்.

**சூத்திரம் 2 :** *"யோகஷ்சித்தவ்ருத்தி நிரோத:"*

அந்தகரணம் என்கிற "மனம், புத்தி, சித்தம், அகங்காரம்" ஆகிய விகாரங்களால் மனத்தில் வெள்ளமெனப் பாய்ந்தோடும் எண்ண ஓட்டங்களானது ஓய்வில்லாத "சித்த சலனத்தை" அளிக்கிறது. சித்த விருத்தியினால் புத்தி தடுமாறி உலகியல் இன்பங்களின்மேல் நாட்டம் கொள்வதை மனதடக்கம், புலனடக்கத்தில் கட்டுப்படுத்தி "சித்த விருத்தி நிரோதக" அல்லது "ஏகாக்ர சித்தம்" மூலம் பெறும் அவசியத்தைக் கூறுகிறது.

**சூத்திரம் 3 :** *"ததா த்ரஷ்டு: ஸ்வரூபே அவஸ்தானம்:"*

உயிரில் அனாதியாக கலந்துள்ள சத்வ, ரஜோ, தமோ குணங்களின் செயலினால் கலங்கிப் போய் உள்ள சித்த சலனமானது, புலனடக்கம் பெற்ற "மன ஓய்வு" என்கிற நிலையை அடையும்போது, ஆத்மாவின் சுயம் பிரகாச சொரூப நிலையின் பேரானந்தமானது வெளிப்பட்டு "ஞானத்தின் ஒளி" வீசத் தொடங்குகிறது.

**சூத்திரம் 4 :** *"வ்ருத்திஸாரூபய மிதரத்ர:"*

புலன்களின் சலனங்களோடு உள்ள நிலையில் ஜீவன் சித்த விருத்தியின் சம்பந்தத்தினால் பந்த, பாசம், மோகம், இச்சை, பேராசை ஆகிய செயல்களில் மூழ்கிப் போய் உள்ளான்.

**சூத்திரம் 5 :** *"வ்ருத்தய: பஞ்சதய்ய: க்லிஷ்டாக்லிஷ்டா:"*

தேக விருத்தி, சித்த விருத்தி, மனோ விருத்தி ஆகிய ஐந்து வகையான விருத்திகள் மனோ கிலேசம், துக்கத்தையும், துன்பத்தையும் அளிக்கக் கூடிய தமோ குணத்தை அடிப்படையாகவும், சாத்வீக குணமானது "பிரம்ம விருத்தியின்" நன்மைகளை அளிக்கக்கூடியதாகவும் உள்ளது.

**சூத்திரம் 6:** *"ப்ரமாண விபர்யய விகல்ப நித்ரா ஸ்ம்ருதய:"*

ஐம்புலன்களினால் நிரூபிக்கப்படுவது, எதிர் மறையான ஞானம், குழப்பமான எண்ணம், உறக்கத்தில் ஞாபகம் (நினைவுகள்) இவையே சித்தத்தில் உள்ள எண்ண சலனங்களின் வகையாகும்.

**சூத்திரம் 7 :** *“ப்ரத்யக்ஷானுமானாகமா: ப்ரமாணாணி:”*

புலன்களால் நேரிடையாக உணரக்கூடிய பிரத்யட்ச பிரமானம், நான் அனுமானத்தால் ஊகித்து அறிகின்ற அனுபிரமாணம், பெரியோர்கள் அனுபவித்து அறிந்த உண்மைகளை கூறுவது ஆகம பிரமாணம் என்பதாகும்.

**சூத்திரம் 8 :** *“விபர்யயோ மித்யாக்ஞானம் தத்ரூப ப்ரதிஷ்டம்:”*

உலகியல் விஷயங்கள் இன்பமாக தோன்றினாலும் உண்மையில் அவை நிலையில்லாதவை, பொய்யானவை, சூன்யமானது. ஆனால் ஆத்மா இவற்றிலிருந்து வேறுபட்டு இருப்பதை உணர வேண்டும்.

**சூத்திரம் 9 :** *“சப்தஞானது பாதி வஸ்து சூன்யோ விகல்ப:”*

ஒரு சொல்லால் வரும் பொருளின் ஞானம் அதை அனுசரித்து வேறு சொல்லால் அதையே குறிப்பிடுவது விகல்ப ஞானம், பரம புருஷன் சேதன வடிவானவன் இவை இரண்டும் இறைவனையே குறிக்கின்றன.

**சூத்திரம் 10 :** *“அபாவ ப்ரத்யயாலம்பனா வ்ருத்திர் நித்ரா:”*

விழிப்பு நிலையிலும் சொப்பன நிலையிலும் இல்லாதிருக்கும் பொழுது சித்தத்தின் உணர்வு இருக்கும் நிலை நித்திரையும் சித்தத்தின் இயல்பு நிலை நிலையாகும், சித்தத்தில் எண்ண சலனங்கள் உறங்குவதே நித்ரா.

*தொடர்ந்து அறிவோம்...*






**பஞ்சகவ்ய தயாரிப்புகள், அகர்பத்திகள், ஸ்வாமி சித்திரப்படங்கள்**



வேத கலாச்சாரத்தில் பசுவிற்கென்று தனிச்சிறப்புண்டு. பசு மானிடர்களுக்கு அளிக்கும் சாணம், கோமியம், பால், நெய், தயிர் முதலானவை விலை மதிப்பற்ற பஞ்ச கவ்யங்களாகச் சிறப்பு பெற்றுள்ளன. இப்பஞ்ச கவ்யத்தின் வாயிலாக தி.தி.தே. பல வகையான ஆயுர்வேதப் பொருட்களை உற்பத்தி செய்கின்றது. **தூபம், தன்சிகா பற்பொடி, ப்ருத்வி - விபூதி, இரண்மயி, மஹி, கச்யபி, உர்விநாஜல் - ட்ராப்ஸ், நந்தினி - கோஅர்க, பூமி - மூலிகை தரை கிளினர், க்ஷம - வறட்டை , புவதி காடங்க்லாக்ஸ் மற்றும் அகர்பத்திகன், புனிதமான உலர் மலர்களால் தயாரிக்கப்பபட்ட ஸ்வாமி சித்திரப்படங்கள்** போன்ற பொருட்கள் தி.தி.தே. தயாரித்து விற்பனையும் செய்து வருகின்றது. இப்பொருட்கள் கீழ்கண்ட இடங்களில் விற்பனைக்கு தயாராக உள்ளது. **திருமலையில்** ஸ்ரீவாரி லட்டு கௌண்டர் வளாகம், ஸ்ரீவாரி ஆலயம் எதிரில், லேபாக்ஷி எம்போரியம் எதிரில், அன்னப்பிரசாதக்கூடம், **திருப்பதியில்** தி.தி.தே. நிர்வாகக் கட்டிடம் எதிரில், கே.டி. சாலை, ஸ்ரீகபிலேஸ்வர ஸ்வாமி ஆலய வளாகம், தியான மந்திரம் (ஸ்ரீகோவிந்த ராஜ ஸ்வாமி தேர் வீதி), ஸ்ரீகோவிந்த ராஜ ஸ்வாமி ஆலய வளாகம்,ஸ்ரீநிவாசம் கட்டிடத் தொகுதி, விஷ்னு நிவாசம் கட்டிடத் தொகுதி, ஸ்ரீகோதண்டராம ஸ்வாமி ஆலய வளாகம், திருப்பதி இரயில் நிலையம் (கிழக்கு), **திருச்சானூரில்** ஸ்ரீபத்மாவதி தாயார் ஆலய வளாகம், **ஸ்ரீநிவாச மங்காபுரம்** ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி ஆலய வளாகம்.




# மழைக்கால ஆரோக்கியமான வாழ்வு

**தெலுங்கு மூலம்: டாக்டர். சி.மதுசூதன சர்மா,90007 61390.**

**தமிழாக்கம்: திருமதி வி.உஷா, திருப்பதி.**

மழைக்காலம் என்றாலே மகிழ்ச்சி. கோடை வெப்பத்தால் இன்னலுற்ற மக்களுக்கு குளுமையை ஊட்டும் இன்பமான காலம் – மழைக்காலம்.

இக்காலத்தில் இன்பம் அளிப்பது மட்டுமின்றி சில உடல் உபாதைகளும் ஏற்படுகின்றன. சளி, தொண்டை வலி, இருமல் போன்ற நோய்களும், மலேரியா, டெங்கு போன்ற விஷக் காய்ச்சல்களும், டயேரியா, காலரா, காமாலை போன்ற பலவிதமான நோய்களும் ஏற்படுகின்றன. ப்ராங்கைடிஸ், ஆஸ்துமா, நிமோனியா போன்ற மூச்சுக்குழாய் சம்பந்தப்பட்ட நோய்களும் வருகின்றன.

மழைக்காலத்தில் வெப்ப நிலை குறைவாக இருப்பதால் கிருமிகளின் உற்பத்தி அதிகரிக்க நிறைய வாய்ப்புகள் உள்ளன. குடிக்கும் நீர், உண்ணும் உணவு ஆகியவற்றில் பாக்டீரியாக்கள், வைரஸ் போன்ற கிருமிகள் பரவ வாய்ப்புகள் அதிகம். நீர் தேங்கியிருக்கும் இடங்களில் கொசுக்கள் அதிகமாக இருக்கும். இவற்றால் நோய்கள் பரவ வாய்ப்புகள் உள்ளன.

சில ஆண்டுகளுக்கு முன்பு பாக்டீரியாக்களால் டைபாய்டு, காலரா போன்ற வயிற்றுப்போக்குப் பிரச்சனைகள் அதிகமாக இருந்தன. தற்போது காலப்போக்கில் புதிய நோய்களான டெங்கு, ஸ்வயின்புளூ போன்ற விஷக் காய்ச்சல்களாய் உருவெடுத்தன. இவற்றால் மக்கள் உயிரிழப்பு அதிகமாகின்றன. இந்நோய்களைக் கட்டுப்படுத்தவும், எதிர்ப்பு சக்தியைப் பெருக்கிக் கொள்ளவும் சில ஆரோக்கியக் குறிப்புகளைக் காண்போம்.

### சிகிச்சைகள்

ஒரு வார காலம் நாள்தோறும் காலை வெறும் வயிற்றில் 5 வேப்பிலை, 5 மிளகு கலந்து நன்கு மென்று உட்கொண்டால் பலவிதமான நோய்கள் குறையும். வைரஸ், பாக்டீரியா போன்றவற்றால் ஏற்படும் வியாதிகள் வராமல் காப்பாற்றிக் கொள்ளலாம்.

சீந்தில் கொடி இலைகளை இடித்து சிறிய உருண்டைகளாக தயாரித்து காலை, மாலை உட்கொண்டால் காமாலை நீங்கும்.

நாள்தோறும் 2 முறை வேளைக்கு 10–20 மி.லி. சீந்தில் கொடியின் இரசத்தை அவ்வாறேயாகினும், தேனுடன் கலந்தோ குடிக்கலாம். இவ்வாறு செய்வதால் பலவிதமான விஷக்காய்ச்சல் நீங்கும். சிறிய குழந்தைகளுக்கு அவர்களின் வயதிற்கு தகுந்தளவு மருந்தைக் கொடுக்க வேண்டும்.

ஆயுர் வேத கடைகளில் கிடைக்கும் அமிர்தாரிஷ்ட, கிராதாரிஷ்டா, பஞ்சதிக்தாரிஷ்ட, பூனிம்பாதிக் வாத போன்ற மருந்துகள் நோய் எதிர்ப்பு சக்தியைப் பெருக்கக்கூடியவை. விஷக் காய்ச்சல் வராமலும் தடுக்கின்றன.

மேலே கூறப்பட்டுள்ள மருந்துகளில் ஏதேனும் ஒன்றை நாள்தோறும் 10 மி.லி. அளவு இரண்டு முறை சிறிது நாட்கள் உட்கொண்டால் மிகவும் நல்லது. சிறிய குழந்தைகளுக்கு வயதிற்கு தகுந்தளவு 2.5 அல்லது 5 மி.லி. மருந்தைக் கொடுக்க வேண்டும்.

# மழைக்காலத்தில் கடைபிடிக்க வேண்டியவை

- வீதியோரக் கடைகளில் விற்கப்படும் தூய்மை அற்ற உணவுகளை உட்கொள்ளக் கூடாது.
- உணவு உட்கொள்ளும் முன் கைகளைக் கழுவிக் கொள்ள வேண்டும்.
- கீரை வகைகள், காய்கறிகள், பழங்கள் போன்றவற்றை அதிக அளவில் உட்கொள்ள வேண்டும். இவற்றைச் சில நிமிடங்கள் தண்ணீரில் போட்டு, சிறிது நேரம் கழித்து வேறு நீரால் கழுவி பிறகு உபயோகிக்க வேண்டும்.
- அழுகிய, கெட்டுப்போன உணவு வகைகளை உட் கொள்ளக் கூடாது.
- நீரைக் காய்ச்சி வடிகட்டி உட்கொள்ள வேண்டும்.
- குளிரூட்டும் பெட்டி மற்றும் பூந்தொட்டிகளில் உள்ள தண்ணீரை அவ்வப்போது மாற்ற வேண்டும்.
- பழைய மெது உருளைகள், கப்கள், தேங்காய் மூடிகள், பாத்திரங்கள் போன்றவற்றில் நீர் (தேங்காமல்) இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.
- நீர் தேங்கியுள்ள இடங்களில் பினாயில் போன்ற வற்றை ஊற்ற வேண்டும் அல்லது கிரோசின் தெளிக்க வேண்டும்.
- எலுமிச்சம் பழ இரசம், வேப்ப எண்ணெய், யூகலிப்டஸ் தைலம், துளசி இரசம் போன்ற வற்றைத் தெளிக்க வேண்டும். இவற்றை உடம் பிற்கும் பூசிக் கொள்ளலாம். இவற்றைக் காகிதங்க ளில் பூசி சன்னல் ஓரங்களில் கட்டலாம். இவ்வாறு செய்வதால் கிருமிகள் பரவாமல் காப்பாற்றலாம்.

மேற்கூறியவற்றை கவனத்தில் கொண்டும், திருவேங்கடமுடையானை தியானித்தும் கார்கால நோய்கள் இன்றி வாழ்வோம்.

## ஸப்தகிரி வினாடி வினா போட்டி எண்.10 மே 2023 விடைகள்

1. விசுவாமித்திரர்.
2. நரசிங்கபிரான்.
3. அகோபிலம், ஆந்திரா.
4. திருகுறையலூர், திருமங்கை மடம், திருநகரி, திருவாலி.
5. இராமாநுசர்.
6. கோவிந்தன்.
7. விசுவாமித்திரர்.
8. சித்திரையில் சித்திரை.
9. வசிஸ்டர்.
10. மதுரகவியாழ்வார்.
11. அனந்தாழ்வான்.
12. திருமழிசையாழ்வார்.
13. புண்ணியகோடி விமானம்.
14. பத்மபாதர்.
15. இராமாநுஜர் நந்தவனம்.




**போட்டி எண்.10ற்கான சரியாக பதில் எழுதிய போட்டியாளர்களில் வெற்றி பெற்றவர்கள்**

1. செல்வி அ. தர்ஷிணி, கொசப்பேட்டை, வேலூர்.
2. செல்வன் தே. உதயகுமார், சிங்கபெருமாள் கோயில், செங்கல்பட்டு.
3. செல்வன் வி. நித்தேஷ்கண்ணா, திமிரி, ராணிப்பேட்டை.



# ஜுலை 2023
# ராசி பலன்கள்



- டாக்டர் எம்.வி. நரநாராயணன், சேலம், 94433 86213.

### மேஷம்

தொழில் துறையில் நல்ல வளர்ச்சி உண்டு. புது வீடு, வாகனம், ஆபரணங்கள் வாங்கும் யோகம் உண்டு. மாணவர்கள் நல்ல மதிப்பெண்கள் பெறுவர். குழந்தைகள் நல்ல முன்னேற்றம் அடைவர். பெற்றோர் ஆரோக்யம் மேம்படும். உத்தியோக உயர்வு உண்டு. பூர்வீக சொத்துக்களில் இருந்த பிரச்சனைகள் தீரும். சகல விதத்திலும் வெற்றி தரும் மாதமிது.

### ரிஷபம்

செலவினங்களுக்கு ஏற்ற வருமானம் உண்டு. புதிதாக வீடு, மனை வாங்க முயற்சி செய்யலாம். தாய்–தந்தையரால் தனலாபம் உண்டு. மாணவர்களுக்கு மேன்மை கிட்டும். பழைய பாக்கிகள் வசூலாகும். தொழில் துறையில் புதிய முயற்சிகளுக்கு வெற்றி கிட்டும். திடதேக ஆரோக்யம் உண்டு. வேலையில்லா பட்டதாரிகளுக்கு வேலை கிட்டும். நல்ல யோகத்தை தரும் மாதம் இது.

### மிதுனம்

ஆரோக்யத்தில் இருந்த குறைபாடுகள் நீங்கும். வீண் செலவுகள் குறையும். தொழில் துறையில் நல்ல லாபம் உண்டு. குழந்தைகளுக்கு முன்னேற்றம் உண்டு. பூர்வீக சொத்துக்கள் குறித்து பேசவேண்டாம். மருத்துவ உதவியுடன் குழந்தை பாக்கியம் கிட்டும். நண்பர்கள், உறவினர்களால் தனலாபம் உண்டு. பொதுவாக நல்ல தன லாபத்தைத் தரும் மாதமிது.

### கடகம்

தொழில் துறையில் நல்ல மாற்றங்கள் உண்டு. குடும்ப குழப்பங்கள் தீரும். குடும்பச் செலவுகளுக்கு ஏற்ற வருமானம் கிட்டும். கால்–மூட்டு வலிகள் உண்டாகும். பெற்றோர் ஆரோக்யம் மேம்படும். குழந்தைகளின் கல்வி செலவு அதிகமாகும். யாத்திரையால் தரிசனம் கிட்டும். பொருளாதார பின்னடைவுகள் ஓரளவு சரியாகும். வேலை வாய்ப்புகள் அமையும். முயற்சி திருவினையாக்கும் மாதமிது.

### சிம்மம்

பரிகாரம் செய்ய உகந்த மாதமிது. திருமணம் கைகூடும் மாதமிது. அதைத் தவற விடக்கூடாது. திருஷ்டியின் மூலம் காரிய தடைகள் உண்டாகும். குழந்தை இல்லாதவர்களுக்கு பிரார்த்தனையின் பேரில் குழந்தை பாக்கியம் கிட்டும். மருத்துவ உதவிகளும் வெற்றியைத் தேடித் தரும். செலவினங்களுக்கு ஏற்ற வருமானம் உண்டு. திடதேக ஆரோக்கியம் உண்டு. மொத்தத்தில் நன்மைத் தரும் மாதமிது.

### கன்னி

தொழில் போட்டியில் வெற்றிக் கிடைக்கும். போட்டியைச் சமாளிக்க அதிகச் செலவுகள் செய்ய வேண்டி இருக்கும். குடும்பத்தில் தனக்காகவும், தன் குடும்பத்தினருக்காகவும் மருத்துவச் செலவுகள் உண்டாகும். தொழில் துறையில் பணமுடக்கத்தை சரி செய்ய கடன் வாங்க வேண்டி இருக்கும். விரைவில் கடன் சுமைகள் தீரும். மாணவர்கள் கல்விக்காக அதிக செலவுகள் செய்ய வேண்டிவரும். நன்மை, தீமை கலந்த மாதம்.

### துலாம்

திருமணம் கைகூடும் மாதமிது. பெற்றொர் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். கணவன்–மனைவி பிரச்சனை தீரும். குழந்தைகளின் எதிர்காலம் நன்றாக அமைய அடித்தளம் அமையும். பூர்வீக சொத்துக்களில் இருந்த வில்லங்கம் தீரும். புதிய வேலைவாய்ப்பு கிட்டும். புது வீடு, மனை, வாகனம் வாங்கும் யோகம் உண்டு. ஆரோக்யம் மேம்படும். நன்மை தரும் மாதமிது.

### விருச்சிகம்

ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. தாய் ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. நண்பர்கள், உறவினர்களால் சிறு பிரச்சனைகள் ஏற்பட்டு சரியாகும். தொழில் செய்யுமிடத்தில் எச்சரிக்கை தேவை. தேவையற்ற விவாதங்கள் தவிர்க்கவும். கடன் வாங்குவதிலும், உணவு முறையிலும் கவனம் தேவை. படிப்பில் முயற்சி திருவினையாக்கும். எச்சரிக்கையாக இருப்பது நலம்.

### தனசு

எச்செயலிலும் வெற்றி பெறுவர். குழந்தைகளின் முன்னேற்றம் நன்கு அமையும். வீடு, மனை, வாகனம் யோகம் உண்டு. தொழில் துறையில் பின்னடைவு ஏற்பட்டு சரியாகும். மாணவர்கள் நல்ல மதிப்பெண் பெறுவர். மனைவி ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. வேலைவாய்ப்புகள், பூர்வீக சொத்துக்கள் விரைவில் கிட்டும். குழந்தை பாக்கியம் உண்டு. யோகமான மாதமிது.

### மகரம்

குழந்தைகளின் ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. நிதானமாக செய்யும் காரியம் வெற்றி தரும். நண்பர்கள், உறவினர்கள் உதவி செய்வர். வேலைப்பளு அதிகரித்தாலும் வெகுமானம் கிட்டும். தொழிலில் தாமதமாக வெற்றி கிட்டும். குழந்தைகள் வேலைக்கு வெளியூர் செல்வர். பெற்றோர் ஆரோக்கியம் நன்கு அமையும். முயற்சி திருவினையாக்கும் மாதமிது.

### கும்பம்

உடல் ஆரோக்யத்தில் குறைபாடுகள் நீங்கும். தொழில் துறை வளர்ச்சி நன்கு அமையும். பெரியோர்கள், சகோதரர்கள் நல்லாதரவு கிட்டும். கணவன்–மனைவி நல்லுறவு உண்டு. நண்பர்கள், உறவினர்களால் நன்மையுண்டு. மாணவர்களுக்கு உயர்வு உண்டு. வேலைவாய்ப்புகள் கிட்டும். சகல துறைகளிலும் கடும் முயற்சி செய்து வெற்றி கிட்டும். நன்மை தரும் மாதமிது.

### மீனம்

குடும்பத்தில் சுபகாரியங்கள் நடக்கும். செலவினங்களுக்கு ஏற்ற வருமானம் உண்டு. தூக்கம் குறையும். பயணத்தில் எச்சரிக்கை தேவை. இரவு நேர பயணத்தை தவிர்ப்பது நல்லது. தொழில் அமையும் மாதமிது. தொழில் போட்டிகளில் வெற்றி கிட்டும். தெய்வத்தலங்களுக்கு தலைமை தாங்கும் யோகம் உண்டு. பொதுவில் நல்ல யோகத்தையும் முன்னேற்றத்தையும் தரும் மாதமிது.

ஒரு குருவும் சீடனும் அடர்ந்த காட்டின் வழியே நடந்து வந்து கொண்டிருந்தனர். இரவு நெருங்கவே ஒரு மரத்தின் அடியில் உறங்கிக் காலை நடை பயணத்தைத் தொடரலாம் என்று முடிவு செய்து ஒரு மரத்தை தேர்ந்தெடுத்து அதனடியில் உறங்கினர்.

மறுநாள் பொழுது விடிந்தது. குருவும் சீடனும் ஆற்றில் நீராடினர். இருவரும் சூரியனை வணங்கி னார்கள். அப்பொழுது சூரிய பகவான் அசரீரியாகத் தோன்றி, "வேத குருவே! உமக்கு வணக்கம். உங்கள் வணக்கத்தை நான் ஏற்றுக்கொண்டேன். இன்று சூரியனான நான் மறைவதற்குள் உங்கள் சீடனின் உயிர் ஒரு ராஜநாகத்தால் தீண்டப்பட்டு இறக்க நேரி டும் முடிந்தால் உங்கள் குரு வலிமையால் அவனை காப்பாற்றுங்கள்! என்று கூறி மறைந்தான்

குருவும் சூரியனை வணங்கிவிட்டு சீடனை கவலையோடு பார்த்தார்.

இருவரும் சிறிது பழங்களைப் பறித்து பசி யாறிய பின் அருகே உள்ள கோயிலில் இறைவனை வணங்கினர். பின் ஊரைத் தாண்டி காடு வழியே நடந்து சென்றனர். சற்றுக் களைப்பு ஏற்படவே இருவரும் ஒரு மரத்தடியில் அமர்ந்து கண் அயர சீடன் தூங்கினானே தவிர குரு தூங்கவில்லை. சீடனின் உயிரை எப்படியாவது காப்பாற்றவேண்டும் என்று நினைத்து குரு விழித்து இருந்தார்.


அப்பொழுது ஒரு ராஜநாகம் படம் எடுத்தபடி சீடனின் அருகே அவனைக் கொல்ல வந்தது. இதை பார்த்து பதை பதைத்த குரு ராஜநாகமே நில் என்று ஆணையிட்டார். ராஜநாகமும் குருவின் வார்த்தைக்கு கட்டுப்பட்டு நின்றது.

குரு ராஜநாகத்தைப் பார்த்து, "நீ என் சீடனின் உயிரை எடுக்கவே வந்துள்ளதை நான் அறிவேன். குரு பக்தி மிகுந்த சீடனைக் காப்பாற்றுவது ஒரு குருவின் கடமை. அதனால் என் சீடனின் உயிரை எடுக்க நான் அனுமதிக்கமாட்டேன்" என்று தடுத்தார்.

இப்பொழுது ராஜநாகம் பேசியது. "வேத குருவே உங்கள் சீடனின் கழுத்தில் என் நாவை வைத்து ரத்தத்தை உறிஞ்சு எடுக்க வேண்டும் என்பது எனக்கு காலன் இட்ட கட்டளை. அனைத்தும் உணர்ந்த தாங்களே என் கடமையைச் செய்ய விடாமல் இப்படி தடுத்து என்னை நிறுத்தலாமா?" என்று முறையிட்டது.

உடனே குரு "அப்படி என்றால் என் சீடனின் ரத்தத்தை உறிஞ்ச வேண்டும் என்பது தானே உனக்கு காலன் இட்ட கட்டளை. சரி, சற்று பொறு! நானே அவனது ரத்தத்தை உனக்கு ஊட்டுகிறேன். அதை உறிஞ்சியதும் நீ உன் கடமையைச் செய்து விட்ட பலனைப் பெறுவாய்" என்று கூறி ஒரு சிறு கத்தியை எடுத்த குரு அதை சீடனின் கழுத்தில் வைத்து ரத்தம் வரும் அளவு ஆழம் வைத்து கத்தியைக் கீறினர்.

தன் கழுத்தில் கூர்மையாய் ஏதோ கீறுவதை உணர்ந்த சீடன் கண் விழித்துப் பார்த்தான். குரு தன் கழுத்தில் கத்தியை வைத்து கீறுவதை உணர்ந்து பின் கண்மூடி சிறிதும் அசையாமல் படுத்த படியே



## கடவுள் நம்பிக்கை எப்படி இருக்க வேண்டும் தெரியுமா?...

- திரு. அசோக்ராஜா,
அரவக்குறிச்சிப்பட்டி,
97503 33265

இருந்தான். சீடனின் பல துளி ரத்தத்தை எடுத்த குரு அதை ராஜநாகத்துக்கு ஊட்டிவிட்டார்.

ராஜநாகமும் குருவின் சாபத்துக்கு நாம் ஆளாகாமல் நம் கடமை நிறைவேறியதே என்ற மகிழ்வோடு ரத்தத்தை உறிஞ்சி விட்டு வந்த வழியே சென்றது. குருவும் சீடனின் உயிரைக் காப்பாற்றிய நிம்மதியோடு அவனது கழுத்தில், முன்னமே தான் எடுத்த வைத்திருந்த பச்சிலை சாற்றை பிழிந்து சீடனின் கழுத்து பகுதியில் பற்றுப் போட்டு விட்டு நிம்மதியோடு உறங்கச் சென்றார். சிறிது நேரம் இருவரும் நன்றாகக் களைப்பு தீர உறங்கிய பின் எழுந்து அமர்ந்தனர். அப்பொழுது சீடன் தன் கழுத்தில் பற்று இருப்பதை தொட்டு பார்த்து விட்டு எதுவும் குருவிடம் கேட்காமல் "குருவே நாம் நடை பயணத்தைத் தொடரலாமா?" என்று கேட்டான்.

குரு புன்னகையுடன், "சீடனே! நீ சற்று முன் உறங்கும்போது நான் உன் கழுத்தில் கத்தி வைத்த போது நீ என்ன நினைத்தாய்? உனக்கு பயம் எதுவும் உண்டாகவில்லையா?" என்று புன்னகையுடன் கேட்டார். சீடன், "குருவே என் கழுத்தில் ஏதோ ஊறுவதை உணர்ந்தேன். விழித்தும் பார்த்தேன். கையில் கத்தியுடன் நீங்கள் என் கழுத்தை அறுப்பதை உணர்ந்தேன். ஆனால் என் குருநாதராகிய தாங்கள் எனக்கு எந்தக் கெடுதலும் செய்ய மாட்டீர்கள் என்பதை நான் அறிவேன். அதனால் நான் நிம்மதியாக உறங்கினேன்.

இப்பொழுது எழுந்ததும் என் கழுத்தில் உள்ள மூலிகைப் பற்றைப் பார்த்தேன் என் குருநாதராகிய உங்களுக்கு என் ஊன், உயிர், உள்ளம் அனைத்தும் அர்ப்பணம். அதனால், எனக்கு எதிலும் எந்தவித கவலையும் இல்லை" என்று கூறி பணிந்து நின்றான்.

குரு சீடனை ஆறத்தழுவி எழுந்து அவனோடு நடக்கலானார். நண்பர்களே! நமக்கு விதித்தபடி நடக்கும் நல்லது, கெட்டது எல்லாவற்றுக்கும் இறைவனே பொறுப்பு என்று அவனைச் சரணடைந்து விட்டால், நமக்கு நடக்க இருக்கும் தீமையும் இறைவன் அருளால் நன்மையாக நடக்கும்.

இதில் சீடன் தான் நாம். குரு தான் நம் கடவுள். ராஜநாகம் தான் நம் விதி. ஞானகுரு இறைவன் சொல்லும் வார்த்தைகளை முழு நம்பிக்கையுடன் ஏற்று, நம் வாழ்க்கையை சீரமைத்துக் கொண்டால், நம் வாழ்வில் எப்போதும் நல்லதே நடக்கும்.

## ஒரே க்ளிக்கில் தரிசனம் டிக்கெட்




**திருவேங்கடமுடையானின் பக்தர்களுக்கு டிஜிட்டல் வடிவில் TTDEVASTHANAMS என்கிற மொபைல் செயலியை தி.தி.தே. பொறுப்பாண்மைக்குழுத் தலைவர் திரு. ஒய்.வி. சுப்பாரெட்டி அவர்கள் அண்மையில் அறிமுகப்படுத்தினார். இந்தச் செயலியில் நவீனப்படுத்தப்பட்ட அதிக அப்ளிகேஷன்கள் இணைக்கப்பட்டு உள்ளன. இந்த மொபைல் செயலியின் வாயிலாக பக்தர்கள் திருமலை ஸ்ரீவாரி தரிசனம், சர்வ தரிசனம், சேவைகள், அங்கபிரதக்ஷிணம், ஸ்ரீவாரி சேவை, தங்குமிடம் போன்றவற்றை முன்பதிவு செய்யலாம். நன்கொடைகள் செலுத்திடலாம். புஷ் நோட்டிபிகேஷன் மூலம் திருமலை ஆலயத்தில் நடைபெறும் உற்சவ விவரங்களை முன்கூட்டியே அறிந்து கொள்ளலாம். மேலும், எஸ்.வி.பி.சி. ஒளிபரப்புகளான நேரடி ஒளிபரப்புகளையும் காண இயலும். கணினி பயன்படுத்தத் தெரியாதவர்களும் பயன்படுத்தும் வகையில் இந்தச் செயலி வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த மொபைல் செயலியால் கையடக்க கைபேசியின் வழியாக திருவேங்கடமுடையானை கண நேரத்தில் காணும் பாக்கியத்தைப் பெறலாம்.**



# வேத வியாசர்

– திருமதி மைதிலி சம்பத், செகந்திராபாத்.

நம் பாரத புண்ணிய பூமியில் இருந்த சான்றோர்களில் வேத வியாசர் தலை சிறந்தவராகக் கருதப்படுகிறார். வியாச பகவான் என்றே அவரைக் குறிப்பிடுவது வழக்கம். இவர் துவாபர யுகம் முடியும் சமயத்திலும் கலியுகம் ஆரம்பமாவதற்கு முன்பும் அவதாரம் செய்தவர் என்று புராணங்கள் வாயிலாக அறிகிறோம். இவர் வாழ்ந்த காலத்தில் அறநெறியையும், ஆன்மீகத் தத்துவத்தையும் உலகிற்கு வழங்கிய வண்ணம் இருந்தார். உலகில் கலி காலத்தில் பக்தி குறைந்துவிடக் கூடாது என்ற கருத்தினால் சிதறிக் கிடந்த பாகங்களை தொகுத்து நான்கு வேதங்களாக்கினார்.

பத்ரிநாத்திற்கு அருகில் மாநாகாம் என்றொரு கிராமம் இருக்கிறது. இங்கு வியாசர் தவம் செய்தார். விநாயகர் க்ருபையுடன் மஹாபாரதம் எழுதினார். இன்றும் அவர் இங்கு தவம் செய்த இடத்தில் நாராயண மந்திரம் ஒலிப்பதாக நம்பிக்கை உள்ளது. இந்தக் குகைக்குக் கீழேதான் சரஸ்வதி நதி உற்பத்தியாகிறது. ஜீவாத்மாவான மனிதன் பரமாத்மாவான இறைவனை எவ்வாறு கண்டறிவது என்பதை விளக்குவதுதான் வேதம். அந்த வேதங்களைத் தொகுத்ததால் வேதவியாசர் ஆனார். இறைவனை வழிபட மந்திரங்கள் சொல்வது ரிக் வேதம். அரசர்கள் செய்ய வேண்டிய யாகங்கள் ஆகியவற்றைச் சொல்வது யஜுர் வேதம். பாடல்களால் இறைவனைத் துதிப்பது சாம வேதம். மந்திர, தந்திர, மருத்துவ, சக்தி வழிபாடு ஆகியவை அதர்வண வேதம்.

வியாசர் மஹாபாரதத்தில் தன்னையே ஒரு பாத்திரமாக மாற்றிக் கொண்டார். சத்தியவதி என்ற ராஜகுமாரிக்கு மகனானார். வேதங்களின் சாரத்தை பிரம்ம சூத்திரமாக உருவாக்கினார். சுக முனிவர் இவருடைய மகன் என்பதும், அவர் ஞானத்துடனேயே பிறந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

மகா புராணங்கள் என்பவை வியாசரால் தொடுக்கப்பட்ட 18 புராணங்களாகும். மஹாபுராணங்களுக்கென 5 தகுதிகள் உள்ளன. அவையாவன 1) பேரண்டப்படைப்பு, 2) பிரளயம் மூலம் உலகம் அழிதல், 3) மறுபடியும் தோற்றம், வெவ்வேறு மன்வந்திரங்கள், 4)சூரிய வம்சம், சந்திர வம்சம் வரலாறு, 5) அரச பரம்பரையினரின் சரிதம் ஆகியவற்றை உள்ளடக்கி இருக்க வேண்டும். இப்புராணங்கள் தேவ பாஷை என்று சொல்லப்படும் சமஸ்கிருதத்தில் எழுதப்பட்டவை. ஆயின், இந்திய மொழிகள் பலவற்றில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன.

இவர் பராசர மஹரிஷிக்கும், மச்சகந்திக்கும் கங்கை ஆற்றில் அமைந்த ஒரு திட்டில் பிறந்தவர். கருத்த மேனியராக இருந்ததால் கிருஷ்ண த்வைபாயனர் என்ற பெயர் கொண்டார்.உபநிடதங்களில் உள்ள தத்துவ போதனைகளையெல்லாம் 555 சூத்திரங்கள் கொண்ட பிரம்ம சூத்திரம் இயற்றி, வேதாந்தத்திற்கு அடிப்படை ஆதார நூலாகச் செய்தார்.இந்து சமய தர்ம, நியாய நுணுக்கங்களை ஒன்று சேர்த்து வேதத்திற்கு ஈடாகப் பேசுமளவு கீதையைக் கூறியிருக்கிறார். கீதையை மகாபாரதத்தின் ஒரு முக்கியமான சந்தர்பமாக்கி, இன்றும் கீதைக்காக மகாபாரதமா, பாரதத்திற்கு கீதையா என்று வியக்கும்படி செய்திருக்கிறார்.



# சந்தேகம் தெளிவோம்

-பிரஹ்மஸ்ரீ சாமவேத சண்முகம்

கே: கடலில் நீராட கடைபிடிக்க வேண்டியவை என்ன?

ப : பொழுது போக்கிற்காகவோ, ஆடம்பரத்திற்காகவோ கடலில் விளையாடுதல் கூடாது. செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் நீராடுதல் வேண்டும். வைகாசி, ஆடி, கார்த்திகை, மாசி மாதங்களில் நீராடினால் நன்மை அதிகம். கடலில் நீராடுவதற்கு முன்பும், பின்பும் தண்ணீரில் குளித்தல் வேண்டும். கடலினை வணங்கிய பின்னரே நீராடுதல் வேண்டும். நீராடும்போது இறை நாமத்தைத் துதித்தல் வேண்டும்.

கே : பிறந்த நட்சத்திர நாளில் என்ன செய்தல் வேண்டும்?

பிறந்த நட்சத்திர நாளின்போது யாகம், அன்னம் உண்பித்தல், விவசாயம், உபநயனம், நிலத்தை சம்பாதித்தல், எழுத்துப் பயிற்சி மேற்கொள்ளலாம். வளைக்காப்பு, கருதானம், பயணம் போன்றவற்றை செய்தல் கூடாது. பெண்களுக்கு பிறந்தநாள் நட்சத்திரத்தில் திருமணம் செய்தல் நன்மை அளிக்கும். ஆண்களுக்கு பிறந்த நாள் நட்சத்திரத்தில் திருமணம் செய்தல் கூடாது.

கே : தீயக்கனவுகள் வரமாலிருக்க என்ன செய்தல் வேண்டும்?

கோவிந்த நாமத்தை துதித்து உறங்கினால் தீயக் கனவுகள் வராது. கஜேந்திர மோட்சத்தையும், மும்மூர்த்திகளையும் நினைத்துக் கொண்டு உறங்குதல், மீண்டும் எழுந்திருக்கும்போது அவற்றை நினைத்துக் கொண்டால் தீயக் கனவுகள் இருக்காது. நாராயணன் தீயக் கனவுகளை அழிக்கக்கூடியவர்.

கே: வடக்கில் தலை வைத்து படுத்தல் கூடாது என்கிறார்களே. உண்மையா?

ப: எப்பொழுதும் வடக்கில் தலை வைத்து படுத்தல் கூடாது. தம் வீட்டில் கிழக்கிலும், மாமன் இல்லத்தில் தெற்கிலும், வெளி நாடுகளில் மேற்கிலும் தலை வைத்தல் வேண்டும். ஈர உடையுடனும், ஈரமான கால்களுடனும் உறங்குதல் கூடாது. தண்ணீர், கடல், தானியம் மீது உறங்குதல் கூடாது. பசு, தேவதைகள், குருவுக்கு நிகரான மூர்த்திகளுக்கு மேல் பகுதியில் உள்ள உயரமான இடங்களிலும், உணவுப் பொருளை வாயில் வைத்துக் கொண்டும் உறங்குதல் கூடாது.

கே : புதிய துளசி செடியை வளர்க்கவோ, மாற்றவோ நல்ல நாள் பார்த்தல் வேண்டுமா?

சாஸ்திரப்படி ஆஷாட சுத்த ஏகாதசி முதல் கார்த்திகை சுத்த ஏகாதசி வரை சாதுர்மாதமான இந்நாட்களில் புதிய துளசியினை மாற்றுவதோ, எறிவதோ கூடாது. ஏகாதசி, துவாதசி, பௌர்ணமி, அமாவாசை, வெள்ளிக்கிழமைகளில் துளசியைப் பறித்தல் கூடாது.

கே: குழந்தைகளுக்கு பெயர் வைப்பதில் ஏதாவது சாஸ்திரங்கள் உள்ளனவா? விருப்பமான பெயரை வைக்கலாமா?

அது அவர்களின் விருப்பத்தைப் பொருத்தது. ஆனால் சாஸ்திரத்தில் நம்பிக்கையுள்ளோர் சில விதிமுறைகளை கடைபிடித்தல் நன்று. நட்சத்திரத்தின்படி பெயரிட சிலர் கூறுவர். ஆனால் பாரம்பரியமாக உள்ள விதிமுறைகள்படி ஆண் குழந்தைகளின் பெயரின் எழுத்துக்கள் இரட்டைப்படை எண்ணிலும், பெண் குழந்தைகள் பெயரின் எழுத்துகள் ஒற்றைப்படை எண்ணிலும் இருத்தல் வேண்டும். ரிஷிகள், தேவதைகள், தம் பரம்பரையின் முன்னோர் பெயர்களை குழந்தைகளுக்கு இடும்போது விரைவில் புகழ், வெற்றி பெறுவர். கடினமாகவும், மிகவும் எழுத்துப் பிழை கொண்ட பெயர்களையும் வைத்தல் கூடாது. நதிகள், மரங்கள், காடுகளின் பெயர்களை வைத்தல் கூடாது.

# पाठ : षड्विंशः ஸம்ஸ்க்ருதம் அறிவோம் பாடம்-26

| | | |
|---|---|---|
| चोष्यम् = புளிக்குழம்பு<br>गत्वा = சென்று (போய்)<br>नीत्वा = எடுத்துக்கொண்டு போய் | चुक्रम् = புளி<br>सूपम् = பருப்பு<br>आगत्य= வந்து | नेष्यति = எடுத்துக்கொண்டு போகக் கடவன்<br>आनयति = எடுத்துக்கொண்டு வந்து கொண்டிருக்கிறான் |

## வினாக்கள்

1. चोष्ये लवणं नालम्।
2. सूपः सम्यगस्ति।
3. गृहे चुक्रमस्ति किम्?
4. त्वं तत्र गत्वा किञ्चित् चुक्रमानय।
5. रामः आनयतु। अहं रामठम् आनेष्यामि?
6. यूयम् अस्मद्गृहम् आगमिष्यथ किम्?
7. तथैवागमिष्यामः।
8. त्वं शीघ्रं गच्छ।
9. ते सर्वेऽपि अस्मद्गृहे भोजनार्थमागमिष्यन्ति।
10. सूपः अपि नास्ति, कथं करिष्यन्ति वा?

1. நீ சமையலை செய்வாயாக.
2. நான் நீர்(தண்ணீர்) கொண்டு வரமுடியும்.
3. அப்புறம் (பிறகு) நீங்கள் எல்லாரும் குளித்து விட்டு சாப்பாடு செய்யுங்கள்.
4. நீங்கள் சென்று எங்கள் தந்தையை அழைத்து வாருங்கள்.
5. நான் அங்கேயே இருப்பேன்.
6. நீங்கள் இங்கு தாமதம் செய்ய வேண்டாம்.
7. விரைவாக வாருங்கள்.
8. நீ எங்கள் அண்ணனை அழைத்துக்கொண்டு வா.
9. சிறுவர்களை விரைவாக அழைத்துக் கொண்டு போவீர்களாக.
10. அப்படியே அழைத்துக் கொண்டு வருவேன்.


## விடைகள்

1. குழம்பில் உப்பு போதாது.
2. பருப்பு நன்றாக உள்ளது.
3. வீட்டில் புளி உள்ளதா?
4. நீ அங்குச் சென்று சிறிது புளி கொண்டு வா.
5. இராமன் கொண்டு வரட்டும். நான் பெருங்காயம் எடுத்து வரமுடியும்.
6. நீங்கள் எங்கள் வீட்டிற்கு வருவீர்களா என்ன?
7. அப்படியே வர முடியும் (வருகிறோம்).
8. நீ குளித்து விட்டுச் செல்
9. அவர்கள் எல்லாரும் எங்கள் வீட்டிற்கு சாப்பாட்டுக் காக வருவார்கள்.
10. பருப்பு கூட இல்லை எப்படி செய்வீர்கள்?


1. त्वं पाकं कुरु।
2. अहं जलम् अनेष्यामि।
3. तदनन्तरं यूयं सर्वे स्नानं कृत्वा भोजनं करिष्यथ।
4. यूयं गत्वा अस्मत्पितरं आनयथ।
5. अहं तत्रैव वसामि (भवामि)
6. यूयम् अत्र आलस्यं मा कुरुथ।
7. वेगेन (त्वरया) अगच्छथ। (शीघ्रं)
8. त्वं अस्मद् अग्रजम् आनय।
9. बालकान् शीघ्रं स्वीकृत्य गच्छथ।
10. तथैव स्वीकृत्य आनेष्यामि। (अस्तु स्वीकृत्य आनेष्यामि।)

தெலுங்கு மூலம் : மகாமகோபாத்யாய காசி கிருஷ்ணாசாரி,
தொகுப்பு : திரு.கே. சூர்ய நாராயணா, தமிழாக்கம் : டாக்டர் கே.கே.ஏ.ரங்கராஜன்

## பல்சுவை பகுதி




## சித்திரப் பகுதி




### பொருத்துக...

1. துரோணர் - அ. அனந்தாழ்வான்
2. வசிஷ்டர் - ஆ. மதுரகவி
3. வியாசர் - இ. இராமர்
4. நம்மாழ்வார் - ஈ. சுகர்
5. இராமானுஜர் - உ. ஏகலைவன்

1.உ 2.இ, 3.ஈ, 4.ஆ, 5.அ.



### சுலோகம் அறிவோம்!


நமோ நாராயணாயேதம்
க்ருஷ்ணத்வைபாயநாத்மகே ।
யதாமுஷ்யாயணா
வேதா மஹாபாரதபஞ்சமா: ॥

ஸ்ரீமஹாபாரதத்தை ஐந்தாவதாகவுடைய நான்கு வேதங்களும் எவர் மூலமாக வெளியிடப் பட்டனவோ, அந்த க்ருஷ்ணத்வைபாயனராக (வேதவ்யாஸராக) அவதரித்த நாராயணனை வணங்குகிறேன். - ஸ்ரீ பராசரபட்டர்

### வார்த்தைகளை சரியாக அணிவகுத்து வாக்கியம் அமைக்கவும்...

1200வது நாதமுனிகளின் நாளில் திருநட்சத்திர வணங்கி அவரை பெறுவோம் குருவருள்.

நாதமுனிகளின் 1200வது திருநட்சத்திர நாளில் அவரை வணங்கி குருவருள் பெறுவோம்.



### பாதையைக் கண்டுபிடி

திக்கு தெரியாமல் தவிக்கும் இந்த சீடனுக்கு அவனுடைய குருவை சென்றடைய வழியைக் காட்டிடுங்கள்.

### விடுகதை பகுதி...

1. உரச உரச கரைவான், பூச பூச மணப்பான் அவன் யார்?
2. இந்த மனிதனுக்கு கால் ஒன்று தான், கைகள் மட்டும் பல. அவன் யார்?
3. பூவோடு பிறந்து நாவோடு கலந்து விருந்தும் மருந்தும் ஆவான். அவன் யார்?

1) சந்தனம், 2) மரம், 3) தேன்.

# வினாடி வினா

திருமலை திருப்பதி தேவஸ்தானம்

## ஸப்தகிரி போட்டி எண்-12

**ஸப்தகிரி இதழினைப் படியுங்கள்! வினாடிவினாவில் பங்கு பெறுங்கள்!!**

1. அஞ்சுகுடிக்கு ஒரு சந்ததியாய் வந்தவள் ..........
2. இளையாழ்வாரின் தாய் மாமன் ..........
3. வடக்குத்திருவீதிப்பிள்ளையின் மூத்த குமாரர் ..........
4. ஆண்டாள் அவதரித்த மாதம், நட்சத்திரம் ..........
5. ஸ்தோத்ர ரத்னத்தை அருளிச்செய்தவர் ..........
6. நரசிம்மவதாரத்தில் சுதர்சனாழ்வார் வீற்றிருந்த பகுதி ..........
7. விஷ்வக்சேனரின் அம்சமாக அவதரித்த ஆழ்வார் ..........
8. ஆனிவர ஆஸ்தானம் தமிழில் எவ்வாறு அழைக்கப்படுகிறது ..........
9. ஏகலைவனின் மானசீகக்குரு ..........
10. குமாரஸ்வாமி பிரம்மஹத்தி தோஷம் நீங்க நீராடிய தீர்த்தம் ..........
11. பெரியாழ்வார் அவதரித்த மாதம், நட்சத்திரம் ..........
12. திருத்தண்கா திவ்ய தேச தாயார் ..........
13. வேதங்களை தொகுத்து அளித்தவர் ..........
14. யோகக் கலையில் யோக சூத்திரங்களை வகுத்தவர் ..........
15. திருத்தண்கா திவ்யதேச விமானம் ..........



### போட்டிக்கான நிபந்தனைகள்

- போட்டியில் பங்கு பெறும் சிறார்கள் 10 முதல் 15 வயதிற்குட் பட்டவராகவும், இந்துக்களாகவும், இந்திய குடிமக்களாகவும் இருத்தல் வேண்டும்.
- வினாடிவினாக்களுக்கான பதில்களை இந்த பக்கத்தில் மட்டுமே குறிப்பிட்ட கட்டத்தில் எழுதி "The Chief Editor, Sapthagiri Office, T.T.D. Press Compound, K.T. Road, Tirupati-517 507" என்ற முகவரிக்கு அனுப்பவும். நகல் எடுத்து அனுப்புவோர் கட்டாயம் சந்தா எண்ணைக் குறிப்பிடவும். ஒரு சந்தாவிற்கு ஒன்று மட்டுமே அனுப்பவும்.
- இப்போட்டியில் அனைத்து விடைகளும் சரியாக எழுதும் சிறார்கள் மூவர் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்படுவர். மூன்று வெற்றியாளர்களின் பெயர்கள் அடுத்த மாத ஸப்தகிரி இதழில் வெளியிடப்படும்.
- இப்போட்டியை குறித்து எவ்வித தகவல்களும் தொலைபேசி வாயிலாக தெரிவிக்கப்படமாட்டாது.
- தி.தி.தே. பிரதான ஆசிரியர் அலுவலக ஊழியர்களின் சிறார்கள் இப்போட்டியில் கலந்து கொள்ள அனுமதி இல்லை.
- போட்டியில் பங்குபெறுவோர் சந்தாதாரராக இருத்தல் வேண்டும். சந்தா எண், பெயர், முழு முகவரி & தொலைபேசி எண் ஆகியவற்றை சரியாக எழுதி அனுப்புதல் வேண்டும்.
- விடைகள் வந்து சேர வேண்டிய கடைசி தேதி 25.07.2023.

**விடையை எழுதுங்கள். திருவேங்கடவன் அருளைப் பெற்றிடுங்கள்**

| |
|---|
| ஸப்தகிரி சந்தா எண் |
| போட்டியாளர் பெயர் |
| ஸப்தகிரி சந்தாதரருடன் போட்டியாளரின் உறவுமுறை |
| போட்டியாளரின் வயது |
| போட்டியாளர் முழு முகவரி |
| தொலைபேசி எண் |

## இதில் பொருந்தாதது எது?



குறிப்பு : குருசிஷ்யன், ஆண்டாள் ஓவியம், மழைக்காலம், ஆண்டாளுடன் தொடர்புடையவை இவற்றிற்கு தொடர்பு இல்லாதவற்றை எழுதவும்.



இரண்டு சித்திரங்களுக்கு இடையே உள்ள ஏழு வித்தியாசங்களை கண்டு பிடியுங்கள்




1) பறவை
2) மரம்
3) கோலம்
4) மரத்தூண்
5) பூச்செடி
6) சுவர்
7) வாழை மரம்

# குரு தக்ஷிணை

சித்திரக் கதை

கதை மூலம் :டாக்டர் கே. ரவிசந்திரன்.

சித்திரம் :திரு. து. சிவாஜி.




கால ஓட்டத்தில் பாண்டவர்களுக்கு கல்வி போதனை இனிதே முடிந்தது.
எங்களை வீரர்களாக்கிய குருதேவா! தங்களுக்கு எதனை குருதக்ஷிணையாக வழங்குவது?
துருபதனை கட்டி இழுத்து வந்து குரு தக்ஷிணையாக வழங்கிடு.
அர்ஜுனன், துருபதனை போரில் வென்று, தன் தேர் சக்கரத்தில் கட்டி, துரோணாசாரியரிடம் அழைத்து வந்தான்.
குரு தக்ஷிணையை ஏற்றுக் கொள்ளுங்கள் குருதேவா!
யார் இவன்? ஆடை ஆபரணங்களை காணும் போது துருபதன் போன்று உள்ளதே!
நண்பா! துரோணா! என்னை மன்னித்து விடு...
ராஜதிகார கர்வம் இப்போதாவது அடங்கியதா? அனைத்து நாட்களும் நம்முடையதாகவே இருக்காது என்பதை இனியாவது அறிந்து கொள்.
அர்ஜுனா! இவனை கட்டியுள்ள கயிற்றினை அகற்றிவிடு.
அர்ஜுனா! இந்த நாளுக்காகத்தான் நான் இரவும் பகலும் உறக்கமின்றி காத்திருந்தேன். இன்று என் கோரிக்கை நிறைவேறியது.
அர்ஜுனா! மனித நேயத்தில் பாகுபாடு இருத்தல் கூடாது என்று வரலாறு கூறும்படி குருதக்ஷிணை அளித்தாய். உனக்கு அனைத்திலும் வெற்றியே கிட்டட்டும்.
முற்றும்.

திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி

# ஸப்தகிரி

*(சமய மாத இதழ்)*

## சந்தாதாரர் விண்ணப்பப்படிவம்

1. பெயர் மற்றும் முகவரி : ________________
(பெரிய எழுத்துக்களில்) ________________
________________
________________

அலைபேசி எண் ☐☐☐☐☐☐☐☐☐☐

2. தேவையான மொழி : ☐ தெலுங்கு ☐ தமிழ் ☐ கன்னடம் ☐ இந்தி ☐ ஆங்கிலம் ☐ சமஸ்க்ருதம்

3. வருட /ஆயுள் சந்தா : ☐ ரூ.240/- ☐ ரூ.2,400/-(12 வருடங்கள்)

4. சந்தா புதுப்பித்தல் :
(அ) சந்தா எண். :
(ஆ) மொழி :

5. செலுத்திய தொகை :

6. செலுத்திய வழி :
பணவிடை (எம்.ஓ./ஐ.எம்.ஓ./ஐ.பி.ஓ)
ரசீது எண் : தேதி:
வங்கி கேட்பு வரைவோலை/காசோலை
எண். : தேதி:
இடம் :
நாள்: *சந்தாதாரர் கையொப்பம்*

திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி.

## தகவல் மையம்

### தி.தி.தே. கால்செண்டர்

**உங்களுக்காக**

### 24 மணி நேரமும்

திருமலை திருப்பதி தேவஸ்தானம் பக்தர்களின் வசதிக்காக திருப்பதியில் தகவல் மையம் ஆரம்பித்துள்ளது. பக்தர்கள் தங்களுக்கு வேண்டிய அனைத்து விவரங்களையும் அறிய இந்த மையத்தைத் தொடர்பு கொள்ளலாம்.

ஸ்ரீவாரி ஆர்ஜித சேவை டிக்கெட், தங்கு வசதி, நன்கொடை திட்டங்கள் குறித்து அறிய..... இங்ஙனே பல்வேறு சேவைகள் குறித்து.... தேவஸ்தானத்திற்குத் தொடர்புடைய அனைத்து விவரங்களையும் நீங்கள் உங்கள் ஊரிலிருந்தே தெரிந்து கொள்ளலாம்.

*இம்மையம் 24 மணி நேரமும் பணிபுரியும் எப்பொழுது வேண்டுமானாலும் நீங்கள் தொடர்பு கொள்ளலாம்.*

தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி எண்கள் :
**0877-**
**2233333**
**2277777**

- ஸப்தகிரி வருடச் சந்தா ரூ.240/- ஆயுள்சந்தா ரூ.2,400/- (12 வருடங்கள்) காசோலை, இ.எம்.ஓ.,ஐ.பி.ஓ., டி.டி. -யை பிரதான ஆசிரியர், ஸப்தகிரி, தி.தி.தேவஸ்தானம், திருப்பதி எனும் பெயருக்கு எடுத்தல் வேண்டும்.
- ஸப்தகிரி சந்தாதாரராக சேர/சந்தா புதுப்பிக்க விரும்புவோர் இக்கூப்பனை பூர்த்தி செய்தோ அல்லது வெள்ளைத்தாளில் மேற்குறிப்பிட்ட விவரத்தை எழுதியோ அனுப்பலாம்.
- கீழே குறிப்பிட்டுள்ள முகவரியை மட்டுமே அணுகவும்.
- தி.தி.தேவஸ்தான ஆசிரியர் அலுவலகத்தைத் தவிர வேறு எங்கும் பணத்தை செலுத்தி ஏமாறாதீர்கள்.
- மணியார்டர் அனுப்புவோர் அதில் உங்கள் சந்தா விவரங்களை எழுதி கட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பவும்.

**எங்கள் முகவரி :**
பிரதான ஆசிரியர்,
ஸப்தகிரி அலுவலகம்,
தி.தி.தேவஸ்தான அச்சக வளாகம்,
கபிலதீர்த்தம் சாலை,
திருப்பதி - 517507.


Printed by Sri P. Ramaraju, M.A., and Published by Dr. K. Radha Ramana, M.A., M.Phil., Phd., on behalf of Tirumala Tirupati Devasthanams and Printed and Publised at Tirumala Tirupati Devasthanams Press, K.T. Road,Tirupati 517 507. Editor : Dr.V.G. Chokkalingam, M.A., Ph.D.



# திருமலை, அஞ்சனாத்ரியில் அனுமன் ஜெயந்தி

14—05—2023 முதல் 18—05—2023 வரை திருமலையில் ஆகாச கங்கை அருகில் வீற்றிருக்கும் அஞ்சனாதேவி மற்றும் பால ஆஞ்சநேய ஸ்வாமிக்கு நடைபெற்ற அனுமத்ஜெயந்தி திருக்காட்சிகள்.

இந்நிகழ்ச்சியில் பங்கு கொண்ட தி.தி.தே. செயலாட்சித் தலைவர் திரு.ஏ.வி. தர்மாரெட்டி ஐ.டி.இ.எஸ். மற்றும் தி.தி.தே. உயர்அதிகாரிகள்.



அனுமத் ஜெயந்தியை முன்னிட்டு திருமலை நாத நீராஜனம் அரங்கில் அனுமனைக் குறித்து காஞ்சி காமகோடி பீடாதிபதி ஶ்ரீஶ்ரீஶ்ரீ விஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் அருளுரை ஆற்றினார்.

அதுபோது சுவாமிகளிடம் பிரசாதங்களை பெற்ற தி.தி.தே. செயலாட்சித்தலைவர் திரு.ஏ.வி. தர்மாரெட்டி ஐ.டி.இ.எஸ். அவர்கள்.









SAPTHAGIRI (TAMIL) SPIRITUAL ILLUSTRATED MONTHLY Published by Tirumala Tirupati Devasthanams Printing on 25-06-2023 & posting at Tirupati RMS Regd. with the Registrar of Newspapers for India under RNI No. APTAM/2021/80590. Postal Regd.No.TRP/157/ 2021-2023 "LICENCED TO POST WITHOUT PREPAYMENT No. PMGK/RNP/WPP-04(5)/2021-2023" Posting on 20th of Every month.

